பா ர தி

மாநாட்டு மலர்

தமிழ் எழுத்தாளர்

ஒன்பதாவது

மாநாடு

1961, டிசம்பர், 30.

விலை ரூபாய் : ஒன்று

தமிழ் எழுத்தாளர் சங்கம்

சென்னை-2

தமிழ் எழுத்தாளர் ஒன்பதாவது மாநாடு

வரவேற்புக் குழு

தலைவர் :

திரு. முரசொலி மாறன் எம். ஏ.

உறுப்பினர் :

சங்கச் செயற்குழு உறுப்பினர் அனைவரும்,
மற்றும்

முதுபெரும் புலவர் திரு. மயிலை சிவமுத்து
பன்மொழிப் புலவர்
திரு. கா. அப்பாத்துரை எம். ஏ., எல். டி.
திரு. சோம. லெ. பி. ஏ.
,, எஸ். அப்துர் ரஹீம்
,, க. முத்தையா
திருமதி. நீலாவதி இராமசுப்பிரமணியம்
திரு. சி. பாலசுப்பிரமணியன் எம். ஏ.

திரு. மா. சு. சம்பந்தன்
,, முகவை. இராசமாணிக்கம்
,, எஸ். கே. இராமன் (*மாயாவி*)
,, க. அறிவழகன் எம். ஏ.
,, இராம. அரங்கண்ணல்
,, சிறுவை. மோகனசுந்தரம்
,, சி. ஆர். பழநியாண்டி
,, கே. ஆர். கல்யாணராமன் (*மகரம்*)

உட் குழுக்கள்

மலர்க் குழு :

திரு. ஊ. ஜயராமன் (*அமைப்பாளர்*)
,, ந. சஞ்சீவி எம். ஏ.
,, சி. பாலசுப்பிரமணியன் எம். ஏ.
,, மா. சு. சம்பந்தன்
,, கோமதி சுவாமிநாதன்
,, கே. ஜி. இராதாமணாளன்
,, முகவை. இராசமாணிக்கம்

விளம்பரக் குழு :

திரு. க. அறிவழகன் எம். ஏ.
(*அமைப்பாளர்*)
,, டி. எஸ். ஸ்ரீபால்
,, சிறுவை. மோகனசுந்தரம்
,, சி. ஆர். பழநியாண்டி
,, கே. ஆர். கல்யாணராமன்
,, இராம. அரங்கண்ணல்

மலர் தரும் மணம்

1961 ஆம் ஆண்டு, டிசம்பர் திங்கள், 30 ஆம் நாள் சென்னை, தி. நகர், வாணி மகாலில் நடக்கும் தமிழ் எழுத்தாளர் சங்க ஒன்பதாவது மாநாட்டை யொட்டிப் "பாரதி" இதழின் இச்சிறப்பு மலர் வெளிவருகிறது. மாநாட்டை டாக்டர். சாமிநாத ஐயர் அவர் களின் மாணவரும், "கலைமகள்" என்ற சீரிய இலக்கிய இதழின் ஆசிரியருமான திரு. கி. வா. ஜகந்நாதன் அவர்கள் துவக்கி வைக்கிறார்கள். "முரசொலி" என்ற நாளிதழின் ஆசிரியரும், ஆற்றல் வாய்ந்த இளம் எழுத்தாளருமான திரு. மாறன் அவர்கள் வரவேற்புக் குழுத் தலைவராக இருந்து மாநாட்டைத் திறம்பட நடத்துகிறார்கள். சங்கத்தின் தலைவரும், பச்சையப்பன் கல்லூரித் துணைத்தமிழ்ப் பேராசிரியருமான புலவர் அன்பு கணபதி அவர் கள் மாநாட்டுக்குத் தலைமை தாங்குகிறார்கள். சென்னைப் பச்சையப்பன் கல்லூரித் தமிழ்த் துறைத் தலைவரான திரு. அ. மு. பரமசிவானந்தம் அவர்களின் தலைமையில் "சென்ற பத்தாண்டுகளில் தமிழ் வளர்ச்சி" என்ற பொருள் குறித்து ஒரு கருத்தரங்கு நடைபெறு கிறது. கருத்தரங்கில் பல விழுமிய எழுத்தாளர்கள் பத்திரிகைகள், பல்கலைக் கழகம், திரைப்படம், வானொலி, பதிப்பகம், மேடைப்பேச்சும் எழுத்தும், நாடகம்— என்ற 7–பொருள்களைக் குறித்துப் பேசுகிறார்கள்.

வழக்கம்போல் இம்மாநாட்டிலும் தமிழ் இலக்கியத்துக்குமேதக்க தொண்டு புரிந்த திரு. மயிலை. சீனி வேங்கடசாமி, திரு. பரலி சு. நெல்லையப்பர்-ஆகிய இரண்டு அறிஞர்களுக்குக் கேடயம் வழங்கிச் சிறப்பிக்கப்படுகிறது. தமிழ் இலக்கியத்தைச் சீரிய முறையில் மேனாடுகளுக்கு அறிமுகப்படுத்திவரும் செக்கோசுலோவேக்கிய வித்தகர் டாக்டர். கமில் சுவலபிலுக்குப் பதக்கம் வழங்கிப் பாராட்டுத் தெரிவிக்கப் படுகிறது. கேடயங்களையும், பதக்கத்தையும் டாக்டர் அ. சிதம்பரநாதன் அவர்கள் அறிஞர்களுக்கு வழங்குகிறார்கள். முதுபுலவர் மயிலை. சிவமுத்து அவர்களும், பன்மொழிப் புலவர் கா. அப்பாத்துரை அவர்களும் விருந்தினரைப் போற்றிப் பேசுகிறார்கள். அறிஞர் சி. என். அண்ணாத்துரை அவர்கள் தமிழ் எழுத்துக்கலையைக் குறித்துச் சிறப்புச் சொற் பொழிவு ஒன்றை நிகழ்த்துகிறார்கள். இவ்வளவு பெருமை சான்ற மாநாட்டின் நினை வாகவே இம்மலர் உங்கள் கைகளில் தவழ்கிறது.

இம்மலரில் பல எழுத்தாள விற்பன்னர்களும், தமிழ் வல்லுநர்களும் அழகழகான கட்டுரைகள் வரைந்து இதனை அணிசெய்துள்ளார்கள். முதலில் வரவேற்புக்குழுத் தலை வரின் நேர்த்தியான வரவேற்புரை இடம்பெறுகிறது. பிறகு பாராட்டுப் பெறுவோரின் வாழ்க்கை—இலக்கிய வரலாறுகள் வருகின்றன. பின்னர் பழந்தமிழ் இலக்கியத்தைப் பற்றியும், நவீன தமிழ் இலக்கியத்தைப் பற்றியுமான பல சிந்தனையைத் தூண்டும் கட்டுரைகள் ஒளிர்கின்றன. கட்டுரைகள் யாவும் எழுத்துத்துறையின் பல்வேறு பகுதி களையும் ஒளியிட்டுக் காட்டும் என்று நம்புகிறோம். கட்டுரைகளைக் கேட்டவுடன் அன்போடு கொடுத்துதவிய வல்லுநர்கள் யாவர்க்கும் எங்கள் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம். இம்மாநாட்டு மலருக்கு விளம்பரம் தந்தருளிய வாணிப நிலையங்களுக்கும், அவற்றை வாங்கித்தந்த நல்லன்பர்களுக்கும், இது வெளிவருவதற்கான உதவிகள் புரிந்த நண்பர்களுக்கும் எங்கள் நன்றியைப் புலப்படுத்திக் கொள்கிறோம். மிகக் குறுகிய காலத்தில் இதனை இவ்வளவு சிறப்பாக அச்சிட்டுக்கொடுத்த சென்னை, வெங்கடேசன் அச்சகத்திற்கு நாங்கள் மிகுதியும் கடமைப்பட்டவர்கள்.

மலர் தரும் மணம் உங்களைக் கவர்ந்து இழுக்கிறது அல்லவா ? இனி அதனை இன்புறவேண்டியது உங்கள் பொறுப்புதானே ? வணக்கம்.

தமிழ் எழுத்தாளர் சங்கம்

1961-ஆம் ஆண்டின் செயற்குழு

★

தலைவர் :

புலவர் அன்பு கணபதி

துணைத் தலைவர்கள் :

திரு. ப. ஜீவானந்தம்
,, அழ. வள்ளியப்பா
பேராசிரியர் அ. பழனிச்சாமி எம். ஏ., பி. எல்.
பேராசிரியர் திருமதி. தே. தியாகராசன் எம். ஏ. (மதுரை)

பொதுச் செயலாளர் :

திரு. மா. இளஞ்செழியன் எம். ஏ.

துணைச் செயலாளர்கள் :

திரு. நா. ஜகந்நாதன் எம். ஏ.
,, அ. செ. செல்லப்பன்

பொருளாளர் :

திரு. கே. பி. சுந்தரம்

குழு உறுப்பினர்கள் :

திருமதி. கமலா விருத்தாசலம்
,, ஜயா அருணாசலம்
திரு. டி. கே. சண்முகம்
,, டி. எஸ். ஸ்ரீபால்
,, அப்துல் வகாப் எம். ஏ.
,, ரா. பாலகிருஷ்ணன்
,, ந. சஞ்சீவி எம். ஏ.
,, ஊ. ஜயராமன்

திரு. கோமதி சுவாமிநாதன்
,, கே. ஜி. இராதாமணாளன்
,, வல்லை. பாலசுப்பிரமணியம் பி. ஏ.
,, முரசொலி மாறன் எம். ஏ.
,, வி. ஏ. பாலகிருட்டினன்
,, கா. வேழவேந்தன் பி. ஏ.
,, டி. பி. சித்தலிங்கய்யா எம். ஏ. (காசி)

தமிழ் எழுத்தாளர் ஒன்பதாவது மாநாடு

1961, டிசம்பர், 30

திரு. 'முரசொலி' மாறன்

அவர்களின்

வரவேற்புரை

பெருமதிப்பிற்குரிய வரவேற்புக் குழு உறுப்பினர்களே! பேரன்பிற்குரிய சகோதர எழுத்தாளர்களே!!

தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் ஒன்பதாவது மாநாட்டினை வெற்றிகரமாகக வந்திருக்கும் உங்கள் அனைவரையும் வரவேற்கும் பேறு பெற்றமைக்காக என் உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, உங்கள் அனைவருக்கும் நல்வரவு கூறுகிறேன்.

மொழிகள் குலமுதல்வி என்றும், கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தே முன் தோன்றி மூத்த தமிழ் என்றும், தாய்மொழிகளிடையே ஓரே ஓர் உயர்தனிச் செம்மொழி என்றும், உயர்தனிச் செம்மொழிகளிடையே ஓரே தாய்மொழி என்றும் போற்றிப் புகழப்படுகிற தமிழால் நாம் இங்கே ஓர் அணியில் கூடியிருக்கிறோம் என்பது நம் பெருமையையும், நம் பண்பாட்டின் சிறப்பையும் உயர்த்துகிறது.

" இறைவனே தலைமை வகித்து நடத்தினர் என்று தமிழ் முன்னோர் பெருமையுடன் கூறும் முத்தமிழ்ச் சங்க மரபில் வந்தது நம் சங்கம் " என்று நம் சென்ற ஆண்டுத் தலைவர் பன்மொழிப் புலவர் திரு. கா. அப்பாத்துரை அவர்கள் தலைமையுரையில் கூறியுள்ளார். " உலகத்தின் வேறு எந்த இலக்கியத்திலும் திருக்குறளில் உள்ளதுபோல் இவ்வளவு அறிவுத் தொகுப்பான பொன்மொழிகள் இல்லை " என்று ஆல்பர்ட் சுவைசர் சிறப்பித்துக் கூறிய திருவள்ளுவரும் எழுத்தாளர்; நாமும் எழுத்தாளர் என்பது நமது நிலையை உயர்த்துகிறது.

எனவே தமிழால்தான் நாம் எழுத்தாளர்கள்; தமிழுக்கு ஆபத்து என்றால், நமக்கும் அது ஆபத்து என்கிற நிலையிலேதான் நாம் இங்கு கூடியுள்ளோம்.

தேசிய ஒருமைப்பாடு என்னும் பெயரால் தமிழுக்கு ஆபத்து எப்போது வருமோ— என்கிற சூழ்நிலை அரும்புகட்டியிருப்பது நாம் அறியாததல்ல. தேவநாகரி எழுத்துத் திணிப்பைத்தான் நான் குறிப்பிடுகிறேன் என்பதை நீங்களும் உணர்கிறீர்கள் என்று உங்கள் முகக் குறிப்பே காட்டுகிறது. தமிழ்ப் புலவர்களுக்கு அடுத்தபடி தமிழால் வாழும் நாமும் தமிழுக்கு வரும் எந்த ஆபத்தையும் உயிருள்ளவரை எதிர்த்துப் போராடக் கடமைப்பட்டுள்ளோம் என்பதை வலியுறுத்த வேறு யாரையும் விட இந்த மாநாடு அதிகக் கடமைப்பட்டிருக்கிறது.

தேவநாகரித் திணிப்பு அபாயம் இல்லை— என்று அவ்வப்போது அமைச்சர்கள் சொல்லி வருவது நாம் அறியாததல்ல. அந்த உறுதி இன்றுபோல் என்றும் நிலைத்திருக்க வேண்டும் என்பதுதான் நமது கோரிக்கையாக இருக்க வேண்டும்-என்னும் கட்சிக்காரர்களுக்கு அப்பாற்பட்ட இந்த உயிர்ப் பிரச்சினையில் இரு கருத்துக்கள் நிலவ நியாயமில்லை என்றே நம்புகிறேன்.

எல்லா எழுத்தாளர்களும் கூடியிருக்கும் இந்த நல்ல நேரத்தில் எழுத்துத்துறை வழிகாட்டிகளைப் பற்றி நினைவுகூர்வது நமது நன்றியுணர்ச்சிக்கு அறிகுறியாகும்.

இறைவனைப் பற்றியும், குறுநில மன்னர்களையும் பிரபுக்களையும் பற்றியும் பாடுவதுதான் கவிஞன் கடமை என்னும் இடைக்கால வழக்கத்தை மாற்றி நாட்டைப் பற்றியும், மக்களைப்

பற்றியும் பாடிப் புது வழி காட்டினர் மகாகவி பாரதியார்.

மொழிபெயர்ப்பு நவீனங்கள் மெருகுடன் உலவிவந்த நேரத்தில் தமிழகப் பின்னணியில் புது நவீனங்கள் படைத்துப் புதிய பாதை வகுத்தார் அமரர் கல்கி.

சிறுகதைக்கு நல்ல வடிவம் கொடுத்தவர் புதுமைப்பித்தன்.

தமிழ் உரைநடைக்கு புதிய உயிரோட்டம் தந்து, நாடகத்துறையிலே வியத்தகு மறுமலர்ச்சிக்கு வித்தூன்றினர், 'கல்கி' யாரே தென்னாட்டுப் பெர்னாட்ஷா என்று புகழ்ந்த அறிஞர் அண்ணா.

அவர்கள் நிறுவிய பாதையில் மேலும் நிறுவப்பட்ட புதிய மைல்கற்களைப் பற்றிச் 'சென்ற பத்தாண்டுகளில் தமிழ் வளர்ச்சி' என்னும் தலைப்பில் விளக்கம்தர இருக்கிறார்கள், சான்றோர்கள் பலர்!

ஆனால் இவற்றையெல்லாம் பழிப்பது போலவும், சென்ற சில ஆண்டுகளாகத் தமிழ் எழுத்தாளர்கள் புதிய படைப்புகளை உருவாக்கத் தவறிவிட்டது போலவும் 'சாகித்திய அகாடமியின்' போக்கு இருப்பதையும் நாம் நினைவுகூர்வது நல்லது.

நல்ல நூல்களுக்காக சாகித்திய அகாடமி ஆண்டுதோறும் வழங்கும் பரிசினை ஓர் ஆண்டு தவிர இதர ஆண்டுகளில் தமிழகம் பெறத்தவறியது தமிழில் நல்ல நூல்கள் தோன்றாமையின் விளைவா; அல்லது புறக்கணிப்பின் விளைவா என்கிற பெரும் ஐயப்பாட்டினைத் தோற்றுவித்திருக்கிறது. இந்தப் போக்கினைக் கண்டித்து நமது சங்கமும் ஒரு முறை தீர்மானம் நிறைவேற்றி அனுப்பிவைத்தும், அது கவனிக்கப்படாமல் இருப்பது நமக்குத் தரப்படும் கௌரவமாகத் தோன்றவில்லை.

எப்படி அரசியல் சட்டத்தில் பதினன்கு மொழிகள் தேசிய மொழிகளாக ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கின்றனவோ, அதுபோலவே அந்தப் பதினன்கு மொழிகளிலும் ஆண்டுதோறும் வெளிவரும் சிறந்த நூல்களுக்குப் பரிசளிக்கும் வகையில் 'சாகித்திய அகாடமி' செயற்பட்டால் அது அனைவரையும் திருப்திசெய்து, எல்லா மொழி வளர்ச்சிக்கும் பாடுபடமுடியும் என்று எழும்பும் ஒருமித்த குரலை 'சாகித்திய அகாடமி' கேட்கும் அளவுக்கு நாம் செயற்பட வேண்டும் என்றும் விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

இதர துறைகளில் உள்ளவர்களைப்போல எழுத்தாளன் சமுதாயத்தில் தனித்து இயங்க முடியாது. சமுதாயத்தின் முன்னேற்றந்தான் அவனது முன்னேற்றம். முதலில் மனிதனுக்குத் தேவையானது உணவும், இதர இன்றியமையாத பொருள்களும். உணவும், அடிப்படைத் தேவைகளும் முடிந்தபிறகுதான் அவன் கலையென்றும், இலக்கியமென்றும் கருத்தைச் செலுத்த முடியும். எனவே, அடுப்பு அணையாமல் எரிந்தால்தான்; ஆலையின் சக்கரங்கள் ஓயாமல் சுற்றினால்தான்; பள்ளிகள் அதிகமாக எழுத்தறிவைப் பரப்பினால்தான் எழுத்தாளன் வாழ்வு குறைவின்றி இருக்க முடியும். எல்லாத் தொழில்களையும் போலவே எழுத்துத் தொழிலும் வெற்றிபெற நாட்டில் நல்லாட்சி தேவை. எல்லாத் தொழில்களுக்கும் அரசாங்கம் பாதுகாப்புத் தருவது போலவே எழுத்துத் தொழிலுக்கும் பாதுகாப்புத் தரவேண்டும்.

பத்திரிகைத் துறையிலே பணியாற்றும் எழுத்தாள நண்பர்கள் அப்படியொரு பாதுகாப்பைப் போராடிப் பெற்றிருக்கிறார்கள். பழைய காலத்து வேளிர்களைப்போல திரைப்பட எழுத்தாளர்களுக்குப் படத்துறை ஆக்கம் தருகிறது. ஆனால் எழுத்தையே தொழிலாகக் கொண்டிருக்கும் ஏனைய சகோதரர்கள் நிலை இழிநிலையாகத்தான் இருக்கிறது என்பதை யாரும் மறுக்க முடியாது.

எழுத்தைக் குழந்தைக்கும், சிந்தித்து எழுதும் பணியைப் பிள்ளைப்பேற்றிற்கும் ஒப்பிடுகிறார்கள். ஆனால் அப்படிப்பட்ட கடினமான உழைப்பினாலும், வேதனையாலும் பிறக்கும் எழுத்தோவியம் என்னும் குழந்தை எழுத்தாளன் என்கிற தாய்க்குத் தக்க வருவாய் தேடித்தருவதில்லை.

பிரான்ஸ், ஜெர்மனிபோன்ற நாடுகளில் எழுதிப் பிழைப்பது மிகவும் கௌரவமான தொழில் என்று அறிகிறோம். "உன் மகன் வருங்காலத்தில் என்ன ஆகப்போகிறான் என்று கேட்க; அவன் கவிஞனாகப் போகிறான் என்று மகிழ்வோடு குறிப்பிடும் தாயை ஜெர்மனியில் சந்திக்கலாம்; ஒரு திறமையுள்ள நவீனம் புனையும் எழுத்தாளனை மணக்க ஒரு பெண் மகிழ்ச்சி தெரிவிப்பதைப் பிரான்ஸிலே காணலாம்" என்று சோமர்செட் மாம் என்னும் புனைகதை ஆசிரியர் ஒரு நூலில் (The Summing up) குறிப்பிடுகிறார்.

ஆனால் நம் நாட்டிலோ ஏழை எழுத்தாளன் என்னும் அடைமொழியும், எழுத்தாளன் வாழ்வு நிலையற்றது என்னும் சூழ்நிலையும் எழுத்தாளன் மறைந்த பிறகு அவன் குடும்பப் பாதுகாப்பிற்கு நிதி திரட்டும் அவலமும் இன்னும் இருப்பதைக் காணலாம். நம்மில் பெரும்பான்மையோர் வாழ்க்கைப் பாதுகாப்பிற்காக ஏதாவது ஓர் அலுவலகத்தில் பணியாற்றிவிட்டு ஓய்வுநேரத்தில்தான் எழுதும் பணியில் ஈடுபடுகின்றனர். முழுநேர எழுத்தாளர்கள் மிகவும் குறைவு.

எழுதி முடிக்கப்பட்ட கையேடு அச்சாகும் என்ற நிச்சயமும் இங்கு இல்லை. பிரபலமானால்தான் அந்த நிலை உண்டு. ஆனால் இங்கு பிரபலம் ஆவது பெரும்பாலும் செத்த பிறகுதான்!

ரஷ்யா போன்ற நாடுகளில் அரசாங்க உதவியுடன் எழுத்தாளர் சங்கமே உறுப்பினர்களின் கையேட்டுப் பிரதிகளை அச்சேற்றுகிறது. அமைதியான சூழ்நிலையில் 'பணியாற்றும் மனைகள்' என்னும் பெயரில் எழுத்தாளன் தங்கி, எழுத்தோவியம் புனைவதற்கான வசதிகளை அங்கெல்லாம் அரசாங்கம் செய்திருப்பதாக டாக்டர் மு. வ. போன்றவர்கள் பார்த்துவந்து கூறுவது கேட்டு நாம் களிப்படைகிறோம். அதுபோன்ற உரிமைகளும் சலுகைகளும் பெற்று, நிலையான எதிர்காலத்தை எழுத்தாளன் பெற நாமும் ஓர் அணியில் திரண்டு போராடவேண்டும்.

கலை கலைக்காகவே என்னும் கவைக்குதவாத வாதத்தைக் கடைப்பிடிப்போர் நம்மில் இல்லை. கலை மக்களுக்காக. கலையால் மக்கள் வாழ்கின்றனர்; மக்களால் கலை வாழ்கிறது. வெறும் பொழுதுபோக்கிற்காக எழுதப்படும் எழுத்துக்கள் படித்து முடிந்தவுடன் குப்பைக் கூடையைத்தான் அலங்கரிக்கும். எனவே நாம் யார், நமது பாரம்பரியம் என்ன — என்பதை உணர்ந்து கருத்தோவியமாகத் திகழும் எழுத்தோவியங்களைப் படைக்க இம்மாநாடு புதிய எழுச்சியையும், உணர்ச்சியையும் கொடுக்கட்டும்!

தமிழால் தோன்றினோம்! தமிழால் வாழ்கிறோம்; இன்பத் தமிழ்போலவே என்றும் வாழ்வோம் என்று கூறிக்கொண்டு, இம்மாநாட்டிற்கு வந்திருக்கும் உங்கள் அனைவரையும் வருக, வருக; வருங்காலத்திற்கு வழிவகுக்கும் நல்ல திட்டங்களைத் தீட்டித் தருக — என்று கேட்டுக்கொண்டு உங்கள் அனைவரையும் அன்புடன் வரவேற்கிறேன். வணக்கம்.

உலகப் புகழ் பெற்ற நாவல்கள்

மதகுரு (இரண்டு தனி வால்யூம்கள் — ஸ்வீடன் நாவல்)		10 50
அன்புவழி	,,	3 50
நிலவளம்	(நார்வே நாவல்)	6 75
தபால்காரன்	(பிரெஞ்சு நாவல்)	3 50
அன்னை	(இத்தாலி நாவல்)	3 75
திமிங்கில வேட்டை	,,	4 50
ஏகாங்கி	(பிலிப்பைன் நாவல்)	3 00
அன்னகரீனா	(ருஷ்ய நாவல்)	6 75
புத்துயிர்	,,	3 75
ஜீவ யாத்திரை	(போலந்து நாவல்)	3 75
மூடுபனி	,,	3 75
நன்னிலம்	,,	4 50
மனம் வெளுக்க சாணை	(சீன நாவல்)	3 75
பகற் கனவு	,,	3 75
1001 இரவுகள்	(அரபு)	3 00
ராஜலஷ்மி	(வங்க நாவல்)	6 75
கிரண்மயி	,,	6 75
பாரதி	,,	3 75
விரோதி	(சிறு கதைகள்)	2 00
மலரும் மணமும்	(பி. எஸ். ராமையா)	4 00
தெய்வ ஜனனம்	(க. நா. சு.)	2 50
பசி	,,	2 25
மநுதர்ம சாஸ்திரம்		3 75
காங்கிரஸ் மகாசபை சரித்திரம் I		3 75
ஷை இரண்டாம் தொகுதி		3 75
இளமைப் பருவம்		3 75
அரசியல் அறிஞர்கள்		3 75
கானக்குயில்	(சுய சரிதம்)	3 75
உலக அரசியலில் ஜனநாயகம்		2 50
சுதந்திரத்தின் எல்லை		2 00
வியாழக்கிழமை		2 00
வில்சனின் கதை		0 50
அவன் அமரன்	(முழுநீள நாடகம்)	3 75

மலிவுவிலைப் பதிப்புகள்

மநுதர்ம சாஸ்திரம்	(400 பக்கங்கள்)	2 00
காங்கிரஸ் மகாசபை சரித்திரம்	(400 பக்கங்கள்)	2 00
ஷை இரண்டாம் பாகம்	(400 பக்கங்கள்)	2 00
புத்துயிர் (400 பக்கங்கள்)	(டால்ஸ்டாய்)	2 00
பாரதி ,,	(சரத்சந்திரர்)	2 00

விவரங்களுக்கு :

ஏ. கே. கோபாலன் பப்ளிஷர்
2/28, அருணாசல ஆசாரி தெரு,
திருவல்லிக்கேணி, சென்னை-5.
டெலிபோன் எண். 83473

செந்தமிழ் அளித்த சீனி

[ஊ. ஜயராமன்]

உலகில் தொன்மைக் காலந்தொட்டு நாகரிகத்திலும், பண்பாட்டிலும் முதிர்ந்த குடிகள் என்று சிலரை வரலாறு சுட்டிக்காட்டிப் பேசுகிறது. அவர்களில் தமிழரும் ஒருவர். தமிழர்களின் வரலாறு மிகப் பழமையானதாகவும், மேம்பட்டதாகவும் இருந்தும், அதனை நடுநின்று எடுத்துச்சொல்வார் இன்மையால் தூசு படிந்து ஒளி மழுங்கிய ஒரு மாணிக்கம் போல் மூலையில் கிடந்து மாழ்குகிறது. இந்தியா முழுவதும் ஒரு தீய பழக்கம் அந்தக் காலத்திலிருந்து இருந்துவருகிறது. தம் வரலாற்றை ஒழுங்காக எழுதிவைக்காமையே அப்பழக்கமாகும். தமிழகமும் இதற்கு விதிவிலக்கு அல்ல. கிரீக்கு, ரோமாபுரி முதலிய நாடுகளில் கிறிஸ்துவுக்கு முற்பட்ட காலத்திலேயே வரலாறு எழுதும் வழக்கம் வந்துவிட்டது. அதனால் அந்நாடுகள் வாழ்ந்த விதத்தை நாம் இன்று சுலபமாக அறிந்துகொள்ள முடிகிறது. நம் நாட்டு வரலாற்றைப் பல நவீன ஆராய்ச்சிச் சாதனங்களின் துணைகொண்டு திருத்தமாக எழுதக் கற்றுக்கொடுத்தவர்கள் ஐரோப்பியர்களே. ஆங்கிலக் கல்வி நம்மவர்களையும் அத்துறையில் புகுந்து உழைத்துச் சாதனைகள் புரியச் செய்துள்ளது.

தமிழைக் குறித்தும், தமிழ் நாட்டைக் குறித்தும் பல நல்ல நூல்கள் ஆங்கிலத்தில் வந்த காரணத்தால்தான், தமிழர்களின் வரலாறு உலகத்தார்க்குத் தெரியத் தலைப்பட்டது. ஆனால் இதிலே ஒரு துன்பமும் விளைந்தது. தமிழைக் குறித்து ஆங்கிலத்தில் எழுதியவர்கள் அனைவரும் தமிழை நன்கு கற்று எழுதுகிறார்கள் என்று சொல்ல முடியாது. சிலர் தமிழிலும், ஆங்கிலத்திலும் நல்ல புலமை பெற்றதோடு நேர்மையான சரித்திர ஞானமும் கொண்டு தம் கருத்துக்களை ஆங்கிலத்தில் வெளியிட்டார்கள். வேறு சிலர் தமிழில் அதிகத் தோய்வு இல்லாமல் ஆங்கிலத்தில் தாம் கண்ட சில உண்மைகளைமட்டுமே வைத்துக் கொண்டு தமிழைப்பற்றி ஆங்கிலத்திலே நூல் எழுதி வெளியிட்டார்கள். இவர்களால் தமிழகத்துக்கு ஏற்பட்ட நன்மையைவிடத் தீமையே மிகுதி எனலாம். இரண்டு மொழிகளையும் சரியாகப் பயன்படுத்திக்கொள்ளாமல் மேல்வாரியாக எதனையும் ஆராய்ந்து விந்தையான முடிவுகளுக்கு வந்தவர்களும் உண்டு. இவர்கள் தமிழ், ஆங்கிலம்-ஆகிய இரண்டு மொழிகளிலும் நூல் எழுதியிருப்பினும், அவை எதுவும் முழுவதுமாக உதவக்கூடியதாக இல்லை. இந்நிலையில் எல்லாவற்றையும் சரியாகத்தெரிந்துகொண்டு, நவீன ஆராய்ச்சிக் கருவிகளின் துணையால், நடுநிலை சிறிதும் பிறழாமல் தமிழிலோ ஆங்கிலத்திலோ நம் நாட்டு வரலாற்றைத் தருபவர்கள் மிகச் சொற்பம் என்றே சொல்லவேண்டும். இந்தச் சொற்பமான பேரில் தற்போது சிறந்து விளங்குபவர் திரு. மயிலை. சீனி. வேங்கடசாமி அவர்களாவர்.

மயிலை. சீனி. வேங்கடசாமி அவர்கள் இளமையிலேயே ஒரு நல்ல தமிழ்க் குடும்பத்தில் பிறந்தார். அவருடைய தகப்பனாரான மயிலை. சீனிவாச நாயகர் அவர்கள் சிரிய நாட்டு மருத்துவராக விளங்கியவர். தம் மகனும் ஒரு மருத்துவராக ஆகவேண்டும் என்பதே அவருடைய விருப்பமாக இருந்தது. ஆனால் வேங்கடசாமியின் தமையனாராகிய சீனி. கோவிந்தராஜன் அவர்கள் தம்பிக்குத் தமிழ்ச் சுவையை ஊட்டி அவருக்கு இலக்கிய ஈடுபாட்டை உண்டாக்கி விட்டார். சீனி. கோவிந்தராஜன் அக்காலத்தில் சிறந்து விளங்கிய மயிலை. சண்முகம் பிள்ளைபோன்ற அரிய புலவர்களிடம் தமிழ் பயின்று ஒள்ளிய புலமை பெற்றுத் திகழ்ந்தார். திருமயிலை நான்மணிமாலை, திருக்குறள் காமத்துப்பால் நாடகம்—முதலிய நேர்த்தியான நூல்களை அவர் இயற்றித் தமிழுக்கு ஆக்கம் சேர்த்திருக்கிறார். அவருடைய மேற்பார்வையில் வளர்ந்த வேங்கடசாமி மருத்துவத் துறையைவிடத் தமிழ்த் துறையை மேலானதாகக் கருதி, அதில் ஆழ்ந்து ஈடுபட்டுத் தொண்டாற்றத் துவங்கினார். சென்னை, மயிலாப்பூரில் நீண்ட நாட்களாகக் குடியிருக்கும் வேங்கடசாமி குடும்பத்தார்க்குப் பல இன்னல்கள் ஏற்பட்

டன. முதலில் வேங்கடசாமியின் தமையனார் எதிர்பாராதவிதமாக நோய்கண்டு அகால மரணமடைந்தார். கொஞ்ச காலத்திற்குப் பிறகு அவருடைய தகப்பனாரே இவ்வுலகை விட்டு அகன்றார். இவையெல்லாம் வேங்கடசாமிக்கு மிகுந்த துன்பத்தைக் கொடுத்த போதிலும், குடும்பப் பொறுப்பும் தமிழ்ச் சுவையும் அவரைப் பள்ளி இறுதி வகுப்புவரை வருந்திக் கற்கவைத்து ஓர் மாநகராட்சிப் பள்ளிக்கூடத்தில் தொடக்க ஆசிரியராகச் செய்தன.

மாநகராட்சிப் பள்ளிக்கூடத்தில் சீனி ஆசிரியப் பொறுப்பு ஏற்றதற்கு மற்றொரு காரணமும் உண்டு. ஆசிரியர் வேலையில் ஓய்வு நிரம்ப கிடைக்கும்; விடுமுறைகள் அவ்வப்போது வாய்க்கும். அச்சமயமெல்லாம் தமிழ் இலக்கியத்தைப் படிப்பதற்கும், அதனை ஆராய்வதற்குப் சீனிக்கு வசதியாக இருந்தது. இலக்கியத் தொடர்பான பல இடங்களைச் சென்று காண்பதற்கும் பள்ளிப்பணி உதவியாயிருந்தது. இவை யாவற்றோடும் தமிழ் ஆராய்ச்சிக்கு எந்தவிதத் தொல்லையும் இருக்கக்கூடாது என்று சீனி திருமணமும் புரிந்து கொள்ளவில்லை. இங்ஙனம் தமிழில் தோய்வு கொண்டு அவர் பல புதுமைகளைக் காணத் தலைப்பட்டார். தமிழர்களுடைய ஒழுங்கான வரலாற்றை இலக்கியத்தின் துணை கொண்டும், கல்வெட்டுக்களின் துணைகொண்டும், புதைபொருள் ஆராய்ச்சியின் துணைகொண்டும் எழுதி வெளியிடவேண்டும் என்ற ஆவல் அவர் உள்ளத்தில் முகிழ்த்தது. இதற்காகப் பெரும் பாடுபட்டு ஆங்கில நூல்களையெல்லாம் அவர் கற்றார். கல்வெட்டுக்களை நன்கு படித்தறியவும், புதைபொருள்களை நிதானித்துணரவும் அவருக்குச் சீரிய பயிற்சி ஏற்பட்டது. சென்னைப் பல்கலைக்கழக நூல்நிலையமும், கன்னிமரா நூல்நிலையமும், சென்னை மாநில ஏட்டுச்சுவடி நிலையமும் அவர் அறிவைக் கூர்மைப் படுத்தின. ஓயாத உழைப்பும், சலியாத முயற்சியும் அவருக்கு நல்ல வெற்றியைத் தேடித்தந்தன.

பொதுவாக வரலாறு போன்ற நூல்களை எழுதுபவர்கள் சில படித்தவர்களுக்கு மட்டுமே தம் எழுத்துக்கள் பயன்படும் வண்ணம் நூல்கள் உருவாக்குவது வழக்கம். சாதாரண மக்களும் அவ்வரலாறுகளைத் தெரிந்துகொண்டு நலம்பெற வேண்டும் என்ற நோக்கம் அவர்களுக்கு இருப்பதில்லை. ஆனால் சீனி அவர்களின் கருத்தெல்லாம் இந்நாட்டின் வரலாற்றை இந்நாட்டிற்குச் சொந்தக்காரர்களான கீழ்த்தட்டு மக்கள் நன்கு படித்துப் புரிந்துகொள்ள வேண்டும் என்பதேயாகும். அதனாலேயே அவருடைய நூல்களெல்லாம் எளிமையும், தெளிவும், நேர்மையும் பெற்று விளங்கமுடிகிறது. அவருடைய நூல் எதனையும் ஒரு முறை எடுத்துப் படித்தால், அதனை முழுவதும் முடித்து வைக்க வேண்டும் என்ற உணர்ச்சி நமக்கு ஏற்படாமற்போகாது. அவ்வளவு தட்டுத் தடங்கல் இல்லாமல் அவருடைய மொழியும், பொருளும் செல்லுகின்றன. ஆராய்ச்சி நூல்கள் என்ற உணர்ச்சியே இல்லாமல் நாவல் படிப்பதைப்போல் அவருடைய எழுத்துக்களை நாம் படித்து முடித்துவிடலாம். இத்தகைய திறன் ஒருவருக்குப் படிப்பினால் மட்டும் வாய்ப்பது அருமை. ஏதோ ஓர் உள்ளுணர்வே (Intution) அவருக்கு இவ்வளவு ஆற்றலைக் கொடுத்திருக்கிறது என்று சொன்னால், அதில் பிழை இருக்கமுடியாது. இதை ஒப்பப் பழங்காலக் கோவில்களையும், கோவில்களில் உள்ள சிற்ப-சித்திரங்களையும், கடவுட் படிமங்களையும், பிற கலைப்பொருள்களையும் பார்த்தவுடனே இனங்கண்டு, அவற்றின் காலங்களைக் கணித்து, அவற்றின் சிறப்பியல்புகளைக் கூறிவிடும் சக்தியும் இவரிடம் நிறைந்திருக்கிறது. இதனை அவருடன் நெருங்கிப் பழகும் அன்பர்கள் சிறக்க உணர்வர்.

சீனியின் எழுத்துக் கொண்டு தமிழ் இலக்கியத்தைக் கணிசமான அளவு வளப்படுத்தி அதனை ஒளியுள்ளதாகவும் செய்திருக்கிறது. தமிழ் இலக்கியத்தில் மறைந்திருந்த பெருமையெல்லாம் சீனியால் வெளிவந்தன. தமிழ் எப்படிப் பல மதங்களால் வளப்பட்டது என்பதையும், பல மதங்கள் தமிழால் எப்படிப் புகழடைந்தன என்பதையும் மூன்று அரிய புத்தகங்களின் மூலம் சீனி தமிழகத்துக்கும், உலகத்துக்கும் புலப்படுத்தியிருக்கிறார். "கிறிஸ்தவமும் தமிழும்", "பௌத்தமும் தமிழும்", "சமணமும் தமிழும்" என்பன அந்நூல்களாகும். தமிழகத்தின் இருண்ட காலமான பல்லவ மன்னர்களின் காலத்தை ஒழுங்காக வரையறுத்து "மகேந்திர மன்னன்", "நரசிம்ம வர்மன்", "தெள்ளாறு எறிந்த நந்திவர்மன்"-என்று மூன்று நூல்களாகத் தந்திருக்கிறார். இன்னும் இவ்வரிசை

யில் மேலும் மூன்று நான்கு நூல்கள் வரவிருக்கின்றன. சென்னைக்கு அருகாமையில் உள்ள மாமல்லபுரத்தில் பல நேர்த்தியான பல்லவச் சிற்பங்கள் இருப்பதை நாம் அறிவோம். அதிலே உள்ள ஒரு புடைப்புச் சிற்பம் (Bas-relief) அருச்சுனன் தவத்தைக் குறிப்பதாகப் பல அறிஞர்கள் எழுதியிருந்தார்கள். அக் கருத்தின் தவற்றைப் புலப்படுத்தி, அது சகர சாகரர்களைப் பற்றிய ஒரு சைனக் கதையைச் சித்திரிப்பது என்று உணர்த்தியவர் சீனி அவர்களேயாவர். அவருடைய "இறையனார் களவியல் ஆராய்ச்சி" மிகச் சிறிய புத்தகமாயினும், பல அரிய உண்மைகளைக் கூறுவதாகும். சிவன் ஆடிய எழுவகை நடனங்களின் சித்தாந்தக் கருத்தை நுட்பமாகத் திரட்டி "இறைவன் ஆடிய எழுவகைத் தாண்டவங்கள்" என்று தந்த பெருமையும் இவரையே சாரும்.

பௌத்தக் கதைகளில் முக்கியமானவற்றைத் தொகுத்தும், ஜாதகக் கதைகளில் சிறியவற்றை மொழிபெயர்த்தும் சீனி தமிழுலகுக்கு அளித்துள்ளார். புத்தருடைய மரபுவழிப்பட்ட வரலாற்றை இவர் சுவை ததும்ப வடித்துக் கொடுத்திருக்கிறார். தமிழ் இலக்கியத்தில் மறைந்துபோன நூல்கள் பலவற்றைக் குறித்து ஆங்காங்கே கிடைக்கும் தகவல்களைத் திரட்டி அவற்றை ஒழுங்காக "மறைந்துபோன தமிழ் நூல்கள்" என்ற பெயரில் வெளியிட்டவரும் இவரேயாவர். தமிழ்ச் சொற்களில் மறைந்து கிடக்கும் வரலாறுகளை இவருடைய "அஞ்சிறைத் தும்பி" அழகுபட மொழிகிறது. தமிழன் வளர்த்த அழகுக் கலைகளை (Fine Arts) இவருடைய நூல் ஒன்று நேர்த்தியாக அறிமுகப்படுத்துகிறது. பழைய சாசனங்களில் உள்ள சில அரிய செய்யுட்களை இவருடைய "சாசனச் செய்யுள் மஞ்சரி" தொகுத்துத் தருகிறது. காலஞ்சென்ற சுந்தரம்பிள்ளை அவர்களின் நாடகக் காப்பியமான "மனோன்மணியத்திற்கு" முழு உரை கண்ட சிறப்பும் இவருடையதே என்னலாம். இன்னும் மிகுதியான கருவூலமனைய தமிழ் நூல்கள் இவருடைய வல்லமை வாய்ந்த பேனாவிலிருந்து முகிழ்க்க இருக்கின்றன.

19ஆம் நூற்றாண்டின் தமிழ் இலக்கியத்தைக் குறித்தும், இந்தியாவின் 14 மொழிகள் குறித்தும், தென்னிந்தியக் கோவில் சிற்பங்கள் குறித்தும் தற்போது சீனியின் நூல்கள் உருவாகிவருகின்றன. தமிழ் நாட்டின் வரலாற்றையும், தமிழ் இலக்கியத்தின் வரலாற்றையும் ஒழுங்காக எழுதவேண்டும் என்ற ஆவலும் அவருக்கு மிகுதியாக இருக்கிறது. தமிழகத்தின் பண்டைய பூகோளம் (Ancient Geography of Tamil Nad) ஒன்றையும் தீட்டவேண்டும் என்று அவர் திட்டமிட்டிருக்கிறார். தமிழகத்துக்கும், கிழக்காசிய நாடுகளுக்கும் உள்ள தொடர்பைப் புலப்படுத்த வேண்டும் என்பதும் அவருடைய வேட்கையாகும். அறுபதாண்டுகள் ஓயாது உழைத்து அண்மையில் மணிவிழாவும் கண்ட அம் முதியவர் இன்னும் நிறைய ஆண்டுகள் வாழ்ந்து தமிழுலகுக்கும், வரலாற்றுலகுக்கும் ஒள்ளிய தொண்டுபுரிய வேண்டும் என்று தமிழ் எழுத்தாளர்களாகிய நாம் விரும்புவது இயற்கையே அல்லவா?

வாழ்க செந்தமிழ் அளித்த சீனி!

அரிய விருந்து! இனிய சுவை!

அறிஞர் அண்ணா

இன்பத் திராவிடம்	1-50
கொள்கையில் குழப்பமேன்	1-50

நாவலர் நெடுஞ்செழியன்

புறநானூற்றுப் புதையல்	1-50

சரோஜா ராமமூர்த்தி

முத்துச்சிப்பி (நாவல்)	4-00
இன்பம் எங்கே? (நாவல்)	4-00

பி. எம். கண்ணன்

மலரும் மதுவும்	4-00

வ. ரா.

சின்னச் சாம்பு	4-00

து. ரா.

வானத்தாரகை	3-00

விக்கிரமன்

பாண்டியன் மகுடம்	2-00

நெ. சி. தெய்வசிகாமணி

ஆகாயமாளிகை	1-75
ஒருநாள் அரசன்	1-00
மறதி மகாதேவன்	0-75

தமிழ் நாடு புத்தக நிலையம்

5, ஸ்டேட் பாங்கு தெரு,

மவுண்ட் ரோடு :: சென்னை-2

முதுபெரும் எழுத்தாளர்

பரலி சு. நெல்லையப்பர்

["பாண்டியன்"]

குள்ளமான உருவம், கறுத்த மேனி, வெண்மையான உள்ளம், கள்ளங் கபடமற்ற இயற்கை, எப்போதும் எல்லோரிடமும் இன் முகத்தோடு பழகும் பாங்கு, தேனிலே தோய்த்தெடுத்த பலாச்சுளைகளை அடுக்கடுக்காகவும் மிக விரைவாகவும் தருவதுபோன்ற உரையாடும் இனிமைப் பண்பு, எல்லோரும் இன்புற்றிருக்க வேண்டும் என்று எண்ணும் பரந்த மனப்பான்மை - இத்தனையும் படைத்தவர்தான் முதுபெரும் எழுத்தாளர் என்று தமிழ் எழுத்தாளர் உலகத்தால் நேசத்தோடும் பாசத்தோடும் அழைக்கப்படும் **பரலி சு. நெல்லையப்பர்** அவர்கள்.

"பகைவர் நாட்டைச் சேர்ந்த நான்கு பட்டாளங்களைவிட எதிர்க்கட்சிகளைச் சேர்ந்த நான்கு பத்திரிகைகளைக் கண்டுதான் நான் மிகுதியாக அஞ்சுவேன். ஏனென்றால் பத்திரிகைகள் அவ்வளவு செல்வாக்குமிகுந்தவை" என்று மொழிந்தான் மாவீரன் நெப்போலியன் ஒரு முறை. மக்களாட்சிக் கோட்பாடு தழைத்து ஓங்கியுள்ள இந்தக் காலத்தில் பத்திரிகைகளுக்கு உள்ள இந்தப் பேராற்றலை மிக நன்றாக உணர்ந்த நெல்லையப்பர் அவர்கள், இருபது வயதுக் காளையாக இருந்தபோதே பத்திரிகை உலகத்திற்குள் நுழைந்துவிட்டார். 1889 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 18 ஆம் நாளன்று, திருநெல்வேலிக்கடுத்த பரலிக் கோட்டை என்னும் சிற்றூரில் திருவாளர். சுப்பிரமணியபிள்ளை - திருமதி. முத்துலட்சுமி அம்மாள் ஆகிய தம்பதிகளின் அருமைத் திருமகனாகத் தோன்றிய நெல்லையப்பர், 1910 ஆம் ஆண்டில், புதுச்சேரியிலிருந்து தேசியக் கவிஞர் சுப்பிரமணிய பாரதியாரை ஆசிரியராகக் கொண்டு வெளிவந்து கொண்டிருந்த 'சூரியோதயம்' என்னும் இதழின் துணையாசிரியராகப் பொறுப்பேற்றார். கவிஞர் பாரதியாரின் உள்ளம் பூரிப்பும் பெருமையும் அடையத்தக்க வகையில் இந்தப் பணியை இரண்டு ஆண்டுகள் ஆற்றினார் நெல்லையப்பர்.

1910 ல் புதுச்சேரியில் கவிஞர் பாரதியாரின் துணையாசிரியர் என்கிற முறையில் தொடங்கிய அவருடைய பத்திரிகாசிரியப் பணி, ஏறத்தாழ நாற்பது ஆண்டுகள், தொடர்ச்சியாகவும் செம்மையாகவும் தமிழகத்தில் நடைபெறலாயிற்று. 'சூர்யோதய'த்திற்குப் பிறகு 'பாரதி' என்னும் சீரிய இதழை நெல்லையப்பர், காலஞ்சென்ற தெ. பொ. கிருஷ்ணசாமிப் பாவலர் (பன்மொழிப் புலவர் தெ. பொ. மீனாட்சிசுந்தரனாரின் தமையனார்) அவர்களின் துணையோடு 1914-15-16 ஆகிய மூன்று ஆண்டுகள் நடத்தி வந்தார். கவிஞர் பாரதியாரின் பல பாடல்கள் முதன்முதலில் இந்த இதழில்தான் வெளிவந்தன. "செந்தமிழ் நாடென்னும் போதினிலே இன்பத் தேன் வந்து பாயுது காதினிலே" என்று தொடங்கும் அந்த அற்புதமான கவிதையை முதன்முதலில் 'பாரதி' இதழ் மூலம் உலகத்திற்கு அறிவித்தவர் முதுபெரும் எழுத்தாளர் நெல்லையப்பர் அவர்கள்தான்.

தமிழ்த் தென்றல் திரு. வி. க. அவர்களை ஆசிரியராகப் பெற்றுப் பெரும் புகழ் ஈட்டிய 'தேசபக்தன்' என்னும் நாளிதழுக்குத் திரு. வி க., வ. வே. சு. அய்யர் ஆகியோருக்குப் பிறகு ஆசிரியராக அமர்ந்து, அதனை நன்முறையில் நடத்திச் சென்ற பெருமையும் நெல்லையப்பர் அவர்களுக்கு உண்டு.

இவ்வாறு பல்வேறு இதழ்களோடு திருவாளர் நெல்லையப்பருக்கு நெருங்கிய தொடர்பு இருந்திருக்கிறது என்றாலும், அவருடைய அன்பை-ஆதரவை — நேரத்தை — நினைப்பை— முயற்சியை-ஆற்றலை மிக அதிகமான அளவில் கொள்ளைகொண்ட ஏடு **"லோகோபகாரி"** என்னும் இதழே! பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் திரு. நடராச அய்யர் என்பவரால் தொடங்கி நடத்தப்பட்டுவந்த இந்த இதழுக்கு 1913ல் துணையாசிரியராக அமர்ந்த நெல்லையப்பர், 1922ல் இதன் ஆசிரியராகவும்

உரிமையாளராகவும் உயர்ந்து, அப்படி உயர்ந்த காரணத்தால் அந்த இதழின் வலிவையும் பொலிவையும் மேலும் சிறப்புடையதாக மாற்றியமைக்கலானார். 1913 ல் அவரைத் துணையாசிரியராகப் பெற்ற அந்த ஏடு 1949 வரையில் இவரால் சிறப்பாக நடத்தப்பட்டு வந்தது என்பது மட்டற்ற மகிழ்ச்சிக்கு உரிய செய்தியாகும். பரலி. சு. நெல்லையப்பர் என்று இயம்பியவுடனே 'லோகோபகாரி'யின் நினைவு, 'லோகோபகாரி' என்று மொழிந்தவுடனே பரலி. சு. நெல்லையப்பரைப் பற்றிய எண்ணமும்தான் எவருக்கும் தோன்றும். அந்த அளவுக்கு 'லோகோபகாரி' அவருடைய இதயத்தோடு இதயமாக, உடலோடு உடலாக, குருதியோடு குருதியாக இரண்டறக் கலந்து இணைந்திருந்தது.

இந்நாளில் தமிழகத்தில் சீரோடும் சிறப்போடும் விளங்கும் பத்திரிகாசிரியர்கள் பலருக்கும் முன்னோடியாக விளங்கிய பரலி அவர்கள், ஓர் இனிய நூலாசிரியரும் ஆவார். 1941ல் அவரால் இயற்றி வெளியிடப்பட்ட வ. உ. சி. வரலாறு என்னும் நூல், சுதேசிக் கப்பலோட்டி அரும்புகழ் ஈட்டிய செந்தமிழ்ச் செம்மல் சிதம்பரனாரின் வாழ்க்கை வரலாற்றைத் தெள்ளிய முறையில் தமிழகத்திற்கு அளித்திருக்கிறது. அறப்போர் அண்ணல் காந்தியடிகளால் ஆங்கிலத்தில் இயற்றப்பட்ட "இந்திய சுயராஜ்யம்" என்னும் நூலை 1920 லும், தத்துவஞானி அரவிந்தர் அவர்களால் அவருடைய மனைவியாருக்கு வங்க மொழியில் எழுதப்பட்ட கடிதங்களை 1940 லும், வங்க நாவலாசிரியர் பக்கிம் சந்திர சட்டர்ஜியால் இயற்றப்பட்ட 'ஜோடி மோதிரம்', 'இராதா ராணி' ஆகிய இரண்டு நவீனங்களை 1941 லும் எளிய தமிழில் மொழிபெயர்த்து அளித்த பெருமைபடைத்தவர் நெல்லையப்பர்.

சிறந்த பத்திரிகாசிரியராகவும் இனிய நூலாசிரியராகவும் விளங்கிய நெல்லையப்பர், புகழ் மிக்க பதிப்பாளராகவும் இருந்துள்ளார். **புதுமைக் கவிஞர் பாரதியாரின் பாடல்களை முதன்முதலில் (1917-18ல்) புத்தக வடிவத்தில் கொண்டுவந்த பெருமை நெல்லையப்பரின் தனி உரிமையாகும்.** "பாரதியாரின் பாடல்களா—இவையும் கவிதையாகுமா—பாரய்யா ஏற்கமுடியும் இக்கொச்சைத் தமிழை?" என்று எண்ணற்றோர் ஏசிப் பேசிய அந்தக் காலத்திலேயே பாரதியார் பாடல்களின் பெருமையை நன்குணர்ந்து, அவற்றைத் துணிந்து அச்சிலேற்றி, உலகத்திற்கு அறிமுகப்படுத்திய நெல்லையப்பரின் அஞ்சாத நெஞ்சத்தையும் செந்தமிழ்ப் பற்றையும் தமிழ்த் திருநாடு என்றென்றும் நினைந்து போற்றும் என்பதில் துளியும் ஐயமில்லை. முதன் முதலில் இவ்வாறு நெல்லையப்பரால் வெளியிடப்பட்ட பாரதியாரின் கவிதை நூல்கள் இரண்டு. ஒன்று கண்ணன் பாட்டு என்னும் தொகுதி மற்றொன்று, நாட்டுப் பாட்டு என்னும் தொகுப்பு.

அன்பர் இராஜகோபாலாச்சாரியாரின் 'ஆத்ம சிந்தனை' என்னும் நூலை முதன்முதலில் வெளியிட்டுவரும் நெல்லையப்பரே ஆவர். தாம் இயற்றிய மொழிபெயர்ப்பு நூல்களில் பலவற்றையும் நெல்லையப்பரே செவ்வையான முறையில் பதிப்பித்துள்ளார்.

சொற்சுவையும் கருத்துச் சுவையும் மிகுந்து, படிப்பவர் தம் உள்ளத்தில் நேரே சென்று தங்கவல்ல ஆற்றல் மிக்க கவிதைகளையும் ஏராளமாக இயற்றியுள்ளார் பரலியார். தினமணி, சுதேசமித்திரன், லோகோபகாரி முதலிய பல இதழ்களில் வெளியாகியுள்ள அவருடைய பாடல்களில் நூற்றைம்பதைக் கொண்ட ஒரு தொகுப்பு நூல் விரைவில் வெளியாக இருக்கிறது.

பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் இரும்புப் பிடியிலிருந்து இந்தியாவை விடுதலை பெறச் செய்வதற்காக இருமுறை சிறை வாழ்வைத் துய்த்துள்ள சிறப்பும் நெல்லையப்பருக்கு உண்டு. வீரத்தமிழர் வ. உ. சிதம்பரனாருடன் 1908ல் ஒருசேரச் சிறையில் இருந்த புகழும், 1941ல் காந்தியடிகளால் 'தனிப்பட்டோர் அறப்போர்' தொடங்கப்பட்டபோது மீண்டும் ஓர் முறை சிறைபுகுந்த சிறப்பும் நெல்லையப்பரின் வாழ்க்கை வரலாற்றில் ஒளி வீசித் திகழும் இரண்டு சிறந்த பகுதிகளாகும். வ. உ. சிதம்பரனார் தொடங்கிய 'சுதேசி ஸ்டீம் நேவிகேஷன் கம்பெனி'யில் தன் தமையன், தன் தம்பி ஆகிய இருவரோடு தானும் சேர்ந்து சிறிது காலம் அலுவல் பார்க்கின்ற பெறற்கரிய பேற்றையும் பெற்று மகிழ்ந்தவர் நெல்லையப்பர்.

தன் நேரம் முழுவதையும் நாட்டுத் தொண்டு, மொழித்தொண்டு, மக்கள் தொண்டு ஆகியவற்றிற்கே செலவிட வேண்டும் என்னும் விழுமிய நோக்கத்தால்

திருமணமே செய்துகொள்ளாமல் தனி வாழ்வையே மேற்கொண்டு தியாக வாழ்வு வாழ்ந்து வருபவர் நெல்லையப்பர். சென்ற பத்தாண்டுகளாக அவர், சென்னைமா நகரை அடுத்த குரோம்பேட்டையில், இயற்கையின் எழிலும் தனிமையும் நிறைந்த ஒரு சூழ்நிலையில், அமைதியாகவும் அடக்கமாகவும் வாழ்ந்து வரும் பெற்றிமையைக் காணும் எவரும், 'எவ்வளவு பெருந்தொண்டு ஆற்றிய ஒரு பெரியார் இவ்வளவு அடக்கமாக வாழ்ந்துவருகிறார்!' என்று வியந்து போற்றுமல் இருத்தல் இயலாது.

எழுபத்திரண்டு வயது நிரம்பிய அண்ணல் நெல்லையப்பர் பன்னெடுங்காலம் வாழ்ந்து தமிழகத்தின் வாழ்வுக்கு மேலும் மேலும் வளமும் தெளிவும் அளிப்பாராக. வாழ்க நெல்லையப்பர்! வளர்க அவர் புகழ்!

நல்ல தமிழ் நூல்கள்

வெளியிடுபவர்
விற்பனையாளர்

★

மீனாட்சி புத்தக நிலையம்
60, மேலக் கோபுர வாசல்,
மதுரை.

குறைந்த விலையில் அரிய நூல்கள்!

பன்னிரு திருமுறைப் பெருந்திரட்டு
விலை. ரூ. 7-50

தமிழ் மொழியின் இணையில்லாத் தெய்வத் திருமுறைகள் பன்னிரண்டிலிருந்தும் 2835 அரும் பொருட் பாடல்களை 274 தலப்பதிகக் குறிப்புக்களுடன் ஒரே நூலில் கொடுக்கும் தனிச் சிறப்பு நூல். 34 திருக்கோவில்களின் படங்களும், வழி விளக்கக் குறிப்புக்களும் அடங்கியது. தல யாத்திரை செய்வார்க்கும், வழிபாடு செய்வார்க்கும், இன்றியமையாத வழித்துணை வழி விளக்கப் படம் நூலுடன் விலையின்றிக் கொடுக்கப்படும். பக்கங்கள் : 800 அளவு : 7½″×5″

கழகத்தின் ஆயிரத்தெட்டாவது வெளியீட்டு விழா மலர்
விலை ரூ. 12-50

பல பேராசிரியர்களின் தலைசிறந்த கட்டுரைகள் கொண்டது. நூற்றுக்கு மேலான தமிழ்ப் புலவர் பெருமக்களின் உருவப் படங்களும், பெரிய அளவில் அம்மையப்பர், அம்பலவாணர், சமய, சந்தான குரவர்கள், திருவள்ளுவர், மறைமலையடிகள் மூவண்ணப் படங்களும் மலரை அணி செய்கின்றன. பக்கங்கள் : 500. அளவு 10″×7½″ அழகிய மேலுறை.

திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த
நூற்பதிப்புக் கழகம் லிமிடெட்,
(தலைமை நிலையம் : திருநெல்வேலி-6)
1/140, பிராட்வே :: சென்னை-1.

ஆயிரத்தின் மிக்க நூல் வெளியிட்ட பாரதத்தின் ஒரே பதிப்பகம்!

நற்றமிழ் வளர்க்கும் நல்லறிஞர்

டாக்டர் கமில் சுவலபில்

[மா. இளஞ்செழியன் எம். ஏ.]

செந்தமிழ் மொழியின் தொன்மையையும் வன்மையையும் எழிலையும் ஏற்றத்தையும் இதுவரை அறியாமல் இருந்த உலக நாடுகள் பலவும் சென்ற சில ஆண்டுகளாகத்தான் அவற்றை உணர்ந்து போற்றத் தொடங்கியிருக்கின்றன. முகிலைக் கிழித்து வெளிக் கிளம்பும் முழுமதியென இப்போதுதான் தமிழ் மொழியின் செம்மையும் செழுமையும் பிற நாடுகளில் ஒளிவீசித் திகழத் தொடங்கியுள்ளன. அந்த அருமையான ஒளியை அற்புதமான முறையில் எல்லாத் திசைகளிலும் பரப்பும் எழில் மிக்க பணியை ஆற்றிவரும் பிறநாட்டு அறிஞர் பெருமக்களுள் தலைசிறந்த ஒருவர், **டாக்டர் கமில் சுவலபில்.**

நெடுந் தொலைவுக்கு அப்பால் உள்ள ஐரோப்பாக் கண்டத்தில் செக்கோஸ்லவாகியா நாட்டில் தோன்றிய டாக்டர் சுவலபில், தமிழ் மொழியின்பால் தளராத காதல் படைத்தவர்; அந்த மொழியைத் தாமே முயன்று கற்று அந்த மொழியின் பல்வேறு இலக்கியங்களையும் ஆராய்ந்து அறிந்த தனிச் சிறப்பு மிகுந்தவர்; தமிழ் மொழியின் இலக்கியக் கடலில் நீந்தித் திளைத்து மகிழ்வதோடு மன நிறைவு கொள்ளாமல் அதன் அரும்பெரும் இலக்கியங்களையெல்லாம் தம்முடைய தாய்மொழியாகிய 'செக்' மொழியிலும், உலகப் பொது மொழியாகத் திகழும் ஆங்கிலத்திலும் மொழி பெயர்த்து அமைத்து உலகெலாம் பரப்ப வேண்டும் என்னும் பேரார்வம் நிறைந்தவர். தமிழ் மொழியின்மீது அவருக்குள்ள பற்றும் பாசமும், அதன் இலக்கியங்களை அவனியெங்கும் பரப்புவதில் அவருக்குள்ள ஆர்வமும் துடிதுடிப்பும் ஒவ்வொரு தமிழ் மகனின் உள்ளத்திலும் இன்ப வெள்ளத்தைப் பாய்ச்ச வல்ல சிறப்புடையன ஆகும்.

தமிழ் இலக்கியச் செல்வத்தைச் 'செக்' மொழியில் பெயர்த்தமைக்கும் அவருடைய அரும்பணி சரியாகப் பத்து ஆண்டுகளுக்கு முன்—1951ல் தொடக்கமாயிற்று. அந்த ஆண்டில் புத்துலகக் கவிஞர் சுப்பிரமணிய பாரதியாரின் 'பாரத சமுதாயம்' என்னும் கவிதையையும், புறநானூறு என்னும் அந்த அற்புதமான கவிதைத் தொகுப்பிலிருந்து மூன்று அரிய பாடல்களையும் சிறந்த முறையில் மொழிபெயர்த்து "நோவே ஓரியன்ட்" என்னும் செக் மொழிப் பத்திரிகையில் வெளியிட்டார் டாக்டர் சுவலபில். இவ்வாறு 1951ல் அரும்பிய அவருடைய தமிழ் வளர்ச்சித் தொண்டு, நாளாக ஆக அறிஞர் உலகத்துக்குப் பூரிப்பையும் பெருமையையும் அளிக்கத்தக்க வகையில் வளர்ந்து பெருகிச் செழித்துச் சிறக்கலாயிற்று. சென்ற பத்து ஆண்டுகளுக்குள் அந்த அறிஞர் பெருமகனார் தமிழ் மொழியிலிருந்து ஏராளமான கவிதைகளையும், கட்டுரைகளையும், சிறுகதைகளையும், நாடோடிப் பாடல்களையும் செக மொழியிலும் ஆங்கில மொழியிலும் உருவாக்கி உலகுக்கு அளித்துள்ளார்.

எட்டுத்தொகை நூல்களிலிருந்து 43 பாடல்கள், தேசியக் கவிஞர் பாரதியாரின் 15 கவிதைகள், அன்னார் இயற்றியுள்ள பல கட்டுரைகள், அவருடைய சிறுகதைகளில் நான்கு, கவிமணி தேசிகவிநாயகம்—புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்—இளங்கவிஞர் தமிழ் ஒளி ஆகியோரின் பல்வேறு பாடல்கள், சிலப்பதிகாரம்—மணிமேகலை—திருக்குறள்—கம்ப இராமாயணம் ஆகிய இலக்கியக் கருவூலங்களின் சில பகுதிகள் ஆகிய இவை, அறிஞர் சுவலபில் அவர்களால் மொழிபெயர்க்கப்பட்ட தமிழ்ச் செல்வத்தின் ஒரு சிறு பகுதியாகும்.

கல்கி, அகிலன், புதுமைப் பித்தன், இரகுநாதன், பெரியசாமித் தூரன், விந்தன், வல்லிக்கண்ணன், ஜயகாந்தன், சுந்தர ராமசாமி, செல்வராஜ், கு. அழகிரிசாமி, தி. ஜானகிராமன், தி. ஜ. ர., மௌனி, மணி, ச. கணேசலிங்கம், ஜீவா முதலிய பல சிறந்த

எழுத்தாளர்களின் உயர்ந்த சிறுகதைகள் பல வற்றையும் டாக்டர் சுவலபில் செக் மொழியில் அமைத்துத் தந்துள்ளார்.

இந்த மொழிபெயர்ப்புகள் யாவும் செக் மொழியில் வெளியாகும் "நோவா ஓரியன்ட்" "உலக இலக்கியம்" ஆகிய இரு பத்திரிகை களிலும், ஆங்கில மொழியில் வெளியாகும் "நியூ ஓரியன்ட்" என்னும் இதழிலும் வெளி யிடப்பட்டுள்ளன.

பரந்து விரிந்து கிடக்கும் அவருடைய மொழிபெயர்ப்புகளில் ஒரு சிறு பகுதி மட்டுமே இதுவரை புத்தக உருவம் பெற் றிருக்கிறது. அப்படிப் புத்தக உருவில் வெளியாகியுள்ள நூல்களாவன :—

1. வீரமாமுனிவரின் பரமார்த்த குரு கதை—1954.

2. கரும் பூ (காதல் துறை பற்றிய பண்டைத் தமிழ்ப் பாடல்களின் தொகுதி) —1956.

3. மல்லிகை மலர்கள்—(சங்கத் தமிழ்ப் பாடல்களின் மொழிபெயர்ப்புத் தொகுதி. இது முழுவதும் செக் மொழிக் கவிதையால் ஆக்கப்பட்டுள்ளது.)—1957

4. இரகுநாதனின் பஞ்சும் பசியும்—1957.

தேனாக — தென்றலாக — நற்கருப்பஞ் சாறாக இனிக்கும் தெள்ளு தமிழ்க் காவியம் சிலப்பதிகாரம் முழுவதும் செக் மொழிக் கவிதை வடிவில் டாக்டர் சுவலபில் அவர் களால் மொழிபெயர்த்து முடிக்கப்பட்டு அச்சுக்குத் தரப்பட்டுள்ளது என்பதையும், மிக விரைவில் அந்த நூல் வெளியாக இருக் கிறது என்பதையும் அறியும்போது, மட்டற்ற மகிழ்ச்சி நம் இதயத்தை முற்றுகை யிடாமலா இருக்கமுடியும் ?

இத்தனை அரிய மொழிபெயர்ப்புப் பணி களைத் திக்கெட்டும் முறையில் செய்துமுடித்து எத்திக்கும் தமிழ் முழக்கத்தைச் செழிக்கச் செய்துள்ள வித்தகர் சுவலபில், சங்ககாலப் பேரிலக்கியமாகிய குறுந்தொகை முழுவதை யும் மொழிபெயர்க்கும் பணியில் தற்போது ஈடுபட்டுள்ளார். அன்னார், இராஜம் அய்யர் அவர்களால் இயற்றப்பட்டுள்ள கமலாம்பாள் சரித்திரம் என்னும் நவீனத்தையும் விரைவில் மொழிபெயர்த்தளிக்க இருக்கிறார். தமிழ் இலக்கியங்கள் பலவற்றைச் செக், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் பெயர்த்தளிப்பதோடு நில்லாமல் ஜெர்மனி, இரஷ்யன் ஆகிய மொழி களிலும் உருவாக்கிப் பரப்ப அவர் திட்டமிட் டிருக்கிறார்.

தமிழ் மொழி வளர்ச்சிக்காக டாக்டர் சுவலபில் ஆற்றிவரும் மற்றோர் அரும்பணி, பிரேக் பல்கலைக்கழகத்தில் தமிழ்ப் பேராசிரி யராக விளங்கி, மேனாட்டு மாணவர் பலரிடம் தமிழ் மலர்களின் நறுமணத்தை நன்முறையில் பரப்பிவருவதாகும். தற்போது மூன்று 'செக்' மாணவரும், ஒரு ஜெர்மானிய மாண வரும் அன்னாரிடம் தமிழ் இலக்கியங்களைப் பயின்றுவருகின்றனர்.

இவ்வாறெல்லாம் தமிழ் மொழியின் பெருமையைப் பிற நாடுகளில் பரப்பிவரும் நல்லறிஞர் **டாக்டர் கமில் சுவலபில்** அவர் கட்கு இந்த ஆண்டில் நடைபெறும் தமிழ் எழுத்தாளர் ஒன்பதாவது மாநாட்டின்போது பாராட்டுப் பதக்கம் வழங்கிச் சிறப்பிப்பது என்று தமிழ் எழுத்தாளர் சங்கம் செய்துள்ள முடிவைக் கண்டு தமிழகம் பெருமகிழ்ச்சி எய்துவதில் வியப்பில்லை அல்லவா ?

தமிழ் எழுத்தாளர்கள்

அனைவருக்கும்

எங்கள்

மனம் நிறைந்த வாழ்த்துக்கள்

பழனியப்பா பிரதர்ஸ்

சேப்பாக்கம், சென்னை – 5 : : தெப்பக்குளம், திருச்சி – 2

“தாகூரும் தமிழிலக்கியமும்”

[டாக்டர் அ. சிதம்பரநாதன், எம்.ஏ., எம்.எல்.சி.,
சென்னைப் பல்கலைக்கழக ஆங்கிலத் தமிழ்ச் சொற்களஞ்சியத் தலைமையாசிரியர்]

கவிஞர் இரவீந்திரநாத தாகூர் அண்மைக் காலத்தில் வாழ்ந்த இந்தியக் கவிஞர்களுள் தலைசிறந்த ஒருவர் என்பது பலரறிந்த செய்தி. அவர் உயரிய பெருங்குடி மரபிற் பிறந்து செல்வச்சிறப்போடு வாழ்ந்தவர் என்பதும், செல்வத்தில் தருக்கிச் செருக்கிவிடாமல் இரக்க உணர்ச்சியோடு மக்கள் அனைவரையும் அன்பினால் அணைத்துத் தழுவும் இயல்பினர் ஆயினர் என்பதும் அவரைப்பற்றிக் கூறத்தக்க சிறப்புக்கள். வைதிகமும் பழமையும் மேலிட்டிருந்த காலத்திலும் இடத்திலும் மக்களிடையே தோன்றிய அம் மாபெரு வீரர் தம் காலத்திய குறுகிய மனப்பான்மைகளுக்கு இடந்தராமல், சில வேளைகளிற் செருக்குற்ற தம் காலத்தவரோடு இகலி அன்பினாலும் கருணையுள்ளத்தாலும் தம் காலத்தைக் கடந்தவர் என்பது அறியப்படும்.

அவரோடு ஒத்தகாலத்தில் வாழ்ந்து அவரோடு நேர்த்தொடர்பு கொள்ளக்கூடிய வகையில் தமிழ்நாட்டுக் கவிஞர் சுப்பிரமணிய பாரதியார் இருந்தாரென்றும், தாகூரின் உயரிய நோக்கங்கள் அவர் மனத்தை ஈர்த்தன என்றும் அறிகின்றோம். தாகூர் இயற்றிய கட்டுரைகளாகிய “சப்பானுடைய ஆவி”, “கல்வி கற்பிக்கும் மொழி”, “ஜாதி”, “அடங்கி நட”, “சிறிதும் பெரிதும்” என்றவற்றை விறுவிறுப்பாகத் தமிழ் நடையில் பாரதியார் மொழிபெயர்த்துத் தந்துள்ளார். “காளிதாசன்” என்ற புனைபெயரில் அவர் 1921—இலேயே இரவீந்திரருடைய பெருமையைப்பற்றித் தமிழ் மக்களுக்குத் தெரிவித்துள்ளார். அப்போது அவர் குறிப்பிட்டதாவது: “தோன்றிற் புகழொடு தோன்றுக என்றார் திருவள்ளுவர். தன் பொருட்டாகச் சேர்க்கப்படும் கீர்த்தி ஒரு கீர்த்தி ஆகுமோ? ஒரு தேச முழுமைக்கும் கீர்த்தி சேகரித்துக் கொடுப்பவனுடைய புகழே புகழ். இரவீந்திரர் இந்தியாவைப் பூலோக குரு என்று பூமண்டலத்தார் கண்முன்னே நிலைநாட்டிக் கொடுத்தார். அவருடைய திருவடி மலரடி வாழ்க!”

இரவீந்திரர் ஆஸ்திரியா நாட்டில் வியன்னா என்னும் நகரத்திற் பத்திரிகை ஆசிரியர்களாலும் பொதுமக்களாலும் ஒருங்கே வரவேற்கப்பட்டதைக் குறிப்பிட்டு எழுதும்பொழுது இவ்வாறு பாரதியார் எழுதியுள்ளார். இதைப் பற்றிய குறிப்புக்களில் ஒன்று இலண்டனிலிருந்து வெளியாகும் ‘அப்சர்வர்’ என்ற பத்திரிகையில் 1921 ஜூன் 26-ஆந் தேதி வெளியானதை ஒட்டிக் காளிதாசன் என்ற புனைபெயரிற் பாரதியார் 1921 ஆகஸ்டு 25-ல் இவ்வாறு எழுதினர். எழுதிய கட்டுரையின் தொடக்கமே,

“மன்னற்குத் தன்தேசமல்லால் சிறப்பில்லை
கற்றோர்க்குச் சென்ற இடமெல்லாம்
சிறப்பு”

என்று இருந்தது.

பாரதியார் நாட்டுக் கல்வியைப்பற்றி எழுதியுள்ள பாடல் இரவீந்திரர் எழுதியதன் மொழிபெயர்ப்பாகும். மக்களை நோக்கி,

“சோம்பி நீரும் வழிநடை பிந்தினீர்,
நின்று அவிந்தன நுங்கள் விளக்கெலாம்”

என்றும்,

“இருளை நீக்கி ஒளியைக் காட்டுவாய்,
இறப்பை நீக்கி அமிர்தத்தை ஊட்டுவாய்”

என்றும்,

“ஆழ்ந்த தூக்கத்தில் வீழ்ந்திருக்கும்
மக்களே எழுக”

என்றும்,

“தேய நாச உறக்கத்திலிருந்து மருள் நீக்கி
எழுந்து களிப்பூட்டி ஒளி துணையாகப்
பண்டைக்காலப் பொருட்களைச்
சென்றுதேடி அறிய வேண்டாமோ?”

என்றும் பாரதியார் கேட்டுள்ள நாட்டுக் கல்வியைப்பற்றிய பாடல் இரவீந்திரரின் உணர்ச்சியை நன்கு எடுத்துக் காட்டியுள்ளது.

"ஆங்கிலப் பயிற்சி" என்ற தலைப்பில் அவர் இயற்றியுள்ள பாடலில் இரவீந்திரரின் போக்கு காணப்படுகிறது என்பதை ஒருவர் கூறுதல்கூடும். சேரன் தம்பி சிலப்பதிகாரத்தை இசைத்ததையும், தெய்வ வள்ளுவன் வான்மறையைச் செய்ததையும், பாரில் நல்லிசைப் பாண்டிய சோழர்கள் பாரளித்துத் துறந்ததையும் அறியாமல் வேறு தேசங்களின் வரலாறுகளை ஆங்கில வழியாக அறிந்து விழி குழி எய்தும்படி வீறு இழந்துள்ள அக்கால மாணவர்களைக் கருத்திற்கொண்டு பாரதியார் பாடிய பாடல்கள் பலர் நினைவில் உள்ளன.

பாரதியார் கண்ணனைத் தந்தையாக, தாயாக, ஏவலனாக, மனைவியாக, தோழனாகக் கருதிக்கருதிப் பாடிய பாடல்களில் தாகூரின் போக்கு காணப்படாமல் இல்லை. விண்மீன்களில் கடவுளைக் காண்டலைவிட மனிதனுடைய ஆன்மாவில் கடவுளைக் காணுதல்கூடும் எனத் தாகூர் கருதினால், "கடவுளுடைய வீணையில் பல நரம்புகள் உள்ளன. அவற்றுள் சில இரும்பு நரம்புகள்; சில செம்பினால் ஆனவை; சில பொன் நரம்புகள்; மனிதன் கடவுளுடைய வீணையின் பொன் நரம்புகள்" என்று தாகூர் எண்ணிய எண்ணத்தின் எதிரொலி பாரதியாரின் பாடல்கள் பலவற்றுட் காணப்படுகின்றது. "பாரதி-அறுபத்தாறு" என்ற தொகுதியிற் காணப்படும் பாடல் ஒன்றினுள் இவ்வுண்மை

"சாமி நீ, சாமி நீ, கடவுள் நீயே
தத்துவமசி, தத்துவமசி, நீயே அஃதாம்
பூமியிலே நீ கடவுள் இல்லையென்று
புகல்வது நின்மனத்துளே புகுந்த மாயை"

என்றவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. எழுதுகோலிலும் எழுத்திலும் கடவுளைக் காணலாம் என்ற பாரதியார், "மாதர் தீங்குரற் பாட்டினில், மாதர் எழிலில், மங்கையர் ஒயிலில், மனைவியின்கண், மக்களிடம் கடவுளைக் காணலாம்" என்று அடிக்கடி பேசியுள்ளார். தன் மனைவியை அடிமைப்படுத்த வேண்டுமென்ற எண்ணத்தால் தாய்க் குலத்தை இழிவு செய்வதைக்கூடக் கருதாமற் பொதுவாக மாதர்களை நூலோர்கள் இழிவுசெய்துள்ள மடமையைக் கொளுத்துதல் வேண்டுமென்ற அளவிற்குக்கூடப் பாரதியார் சென்றார். ஆணிலும் பெண்ணிலும் உள்ள ஆன்மா ஒன்றே என்ற பண்டைய உண்மையைத் தாகூரும் பாரதியாரும் தம் காலத்திற் புதுமெருகிட்டு மக்களிடம் வற்புறுத்தினர்.

கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை தாகூரின் கீதாஞ்சலியிலிருந்து சில பாடல்களை அழகுற மொழிபெயர்த்துள்ளார். அவை நேர் மொழிபெயர்ப்பு அல்ல; கீதாஞ்சலியை அடியொற்றி எழுதப்பட்டவை. அதனால், கவிமணியின் பாடல்கள் தமிழிலேயே முதலில் தோன்றிய பாடல்கள்போல இனிமையாகவும் நயமாகவும் அமைந்துள.

"என்றுமெனை அழிவிலாப் பொருளா
[யியற்றினை
ஈதுனது திருவுள்ளமே
ஈடற்ற கலமிது கவிழ்த்திக் கவிழ்த்தியுயிர்
ஏற்றே திருத்தி வைப்பாய்"

* * *

"நன்றுதவு கொடைகோடி இக்குழவி
[கைகளில்
நாளும்நீ அள்ளியிடினும்
நான்குறைகள் சொல்லி அருள்வேண்டா
[திருந்திடேன்
ஞானஒளி வீசு மதியே"

என்று அவர் பாடியுள்ளவற்றைப் பார்த்தால் இவை தனி அமைப்புக்கள் என்பது போலத் தோற்றும். கவிஞர் இரவீந்திரர், "என் பாட்டில் நீ மகிழ்ச்சி கொள்கிறாய் என்பதை அறிவேன். உன் முன்னிலையில் நான் பாடகன் என்ற வகையில்தான் வருகிறேன் என்பதை அறிவேன்" என்று கூறினார். இதனைக் காட்டிலும் இனிமையாகக் கவிமணி

"ஏத்தி இசை பாடத் தொடங்குவேன்
நீயும் அதில்
இன்புறுவை என்பதுணர்வேன்"

என்று கூறினார். "உன்னை ஏத்தி இசையில் பாடத் தொடங்குவேன்" என்றும், "நீயும் அது காரணமாக இன்புறுவாய் என்பதையும் அறிவேன்" என்றும் கவிமணி பாடிய பொழுது,

"அர்ச்சனை பாட்டே ஆகும், பாடுக"

என்று சுந்தரரை நோக்கி இறைவன் கூறியமை அவர் நினைவிற் கட்டாயம் இருந்திருக்கும். கவிஞர் தாகூர் "உன்னைப்பற்றிப் பாடும் மகிழ்ச்சிப் பெருக்கில் என்னை மறந்து கடவுளாகிய உன்னை நண்பன் என்று அழைக்கிறேன்" எனக் கூறினார். கவிமணி அதனை ஒட்டிப் பாடுபவர்,

"நானும் என் களிமயக்கால்
நண்பன் என்றே அழைக்கின்றனன்,
என்னையாள்
நாதனே ! ஞான பரனே !"

எனப் பாடினர். இவ்வாறு கடவுளை நண்பனாகக்கொண்டு அழைத்தல் என்பது தமிழ் நாட்டிற் புதுவதாக வந்த கருத்தாக இல்லை ஆதலாலும், கவிஞர் தாகூரினுடைய 'கீதாஞ்சலி'ப் பாடலைப் படித்தபொழுது திருவாசகத்தில் வந்துள்ள மாணிக்கவாசகரின் 'மாணிக்கவாசகம்' கவிமணியின் நினைவிற்குக் கட்டாயம் வந்திருக்கும் ஆதலாலும், இப்பாடற் பகுதியைத் தேசிகவிநாயகம் எளிய இனிய வகையில் மொழிபெயர்க்கும் ஆற்றல் உடையவரானர்.

"தோழா போற்றி ! துணைவா போற்றி !"

என்பது 'போற்றித் திருவகவல்.' திருச்சதகத்தில்,

"மையிலங்கு நற்கண்ணி பங்கனே
வந்தெனைப் பணிகொண்டபின் மழக்
கையிலங்கு பொற்கிண்ணம் என்றலால்
அரியை என்றுனைக் கருதுகின்றிலேன்"

என மாணிக்கவாசகர் கூறினர். ஒரு காலத்திற் கடவுள் அவருக்கு அரியவராக இருந்தார் என்பதும், பின்னர் ஆட்கொள்ளப்பட்ட பிறகு எளியவராகி விட்டார் என்பதும் இப்பாடற் பகுதியிற் கூறப்பட்டுள்ளன. குழந்தையின் கையின்கண்ணதாகிய பொற்கிண்ணம் குழந்தையின் கையில் இருத்தலால், குழந்தைக்கு அஃது எவ்வளவு எளிதோ அவ்வளவு எளியவர் கடவுள் என்ற கருத்து சொல்லப்பட்டுள்ளது. கடவுள் மனிதனுக்கு எளியவராகிவிட்டாலும், தன் அருமையை அவன் உணராமல் எப்போதாவது இழந்துவிடுவானே என எண்ணிக் கடவுள் மனிதனோடு சுற்றிக்கொண்டே இருக்கின்றார் என்ற குறிப்பும் இவ்விடத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. குழந்தையின் கையிலுள்ள பொற்கிண்ணத்தைத் தவறிக் குழந்தை கீழே போட்டு நசுங்கவைத்து விடுமோ என்ற எண்ணத்தால் குழந்தை தளர்நடை போட்டுச் செல்லும் இடத்துக்கெல்லாம் உடன்செல்லும் தாயைப் போலக் கடவுளும் நம்முடன் உள்ளார் என்ற குறிப்பு மிக்க நயத்தோடு இவ்விடத்திற் புலப்படுத்தப்பட்டுள்ளது. இவையெல்லாம் கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளைக்குத் தெரிந்தவைதாமே? ஆதலால், கவிஞர் தாகூரின் பாடலை மொழிபெயர்க்கும்பொழுது எத்துணை எளிமையோடு நயமாக மொழிபெயர்த்துவிட்டார் என்பது புலப்படும்.

"தோழமையாக உனக்கு நம்மைத்
தந்தனம்"

என இறைவன் சுந்தரரை நோக்கிக் கூறியதாகச் சேக்கிழார் பகர்ந்துள்ளார். சுந்தரரும்,

"தன்னைத் தோழமை தந்தருளி"

என்றும்,

"என்றனை ஆள் தோழனை"

என்றும்,

"என்னுடைய தோழனுமாய்"

என்றும் கூறியவை நினைவுகூரத்தக்கவை. இவற்றையெல்லாம் கற்றறிந்த கவிமணிக்குத் தாகூர் வாக்கின் அருமை எளிதில் விளங்கி விட்டது எனக் கொள்ளுதல் வேண்டும்.

"சரத் காலம்" என்ற தலைப்பில் கவிமணி பாடியுள்ள நான்கு பாடல்கள் இரவீந்திரரின் "தோட்டக்காரன்" என்ற தலைப்பில் வரும் சிலவற்றின் மொழிபெயர்ப்பு. "சோதரரே, ஒருவரும் வீடு திரும்ப வேண்டாம், இந்தக் காலையில்; ஒருவரும் வேலைக்குச் செல்ல வேண்டாம்; வெள்ளத்தில் நுரைபோலச் சிரிப்பு காற்றில் மிதக்கிறது; நாம் காலையைப் பயனில் பாட்டில் கழிப்போமாக" என்று தாகூர் கூறிய கருத்துடைப் பாட்டைக் கவிமணி தேசிகவிநாயகம்பிள்ளை

"நீலநெடு வான்முகட்டைத் தாக்கி
நிற்போம்
நிரந்தோடி வெளியிடத்தைக்
கொள்ளை கொள்வோம்
வேலையிது காலையெதும் செய்ய
வேண்டாம்
வீட்டினுக்கு யாவருமே திரும்ப
வேண்டாம்
மேலெழுந்த பெருவெள்ள நுரையே
போல
விளங்குமெழிற் சிரிப்பினொளி மிதக்கு
தம்மா
சீலமிகு சோதரரே கூடி இன்று
தெம்மாங்கு பாடிவிளை யாடு
வோமே"

என வைத்துப் பாடியுள்ளார். இப்பாட்டினுள் "வேலையிது காலையெதும் செய்ய வேண்டாம்; வீட்டினுக்கு யாவருமே திரும்ப வேண்டாம்" என்பது போன்ற அடிகளைச் சுவைப்பதற்கு இன்று நம்மிடையே திரு. டி. கே. சி. அவர்கள் இல்லையே என்பது ஒரு குறைதான்.

நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் பிள்ளை "கவி தாகூர்" என்ற தலைப்பில் எட்டுப் பாடல்கள் தந்துள்ளார். அவை அனைத்தும் தாகூரின் புகழைப் பரவுவன. "திங்களின் கதிர்களோடு கதிரவன் ஒளிசேர்ந்தால் ஒப்ப, அந்தணர் அமைதியோடு அரசனின் ஆண்மை சேர்ந்தது சுந்தரக் கவிகள் பாடும் சொல்வளம் உடைய தாகூர் இடத்தில்" என்று ஒரு பாட்டிற் கூறியுள்ளார். தாகூர் பாடல்களை வங்காளியர் எல்லாச் சீமைக்கும் சிறப்புறப் பரப்பினார்கள். தமிழரும் தமிழின் மாண்பை அவ்வாறு பரப்பி வளர்ப்பரோ என்றார் இராமலிங்கம்.

"சாந்திநிகேதன்" என்னும் தாகூரின் கலைநிறுவனத்தை நாமக்கல் கவிஞர்

"கலைகளின் வழியே தெய்வக்
கருணையைக் காண்ப தென்னும்
நிலையினைப் படிக்க வென்றும்
நிறுவிய நிலையம் ஈதாம்
சிலைதரல் ஆடல் பாடல்
சித்திரம் நடிப்ப ரங்கம்
பலவித வித்தை எல்லாம்
பயிலுதற் கிடமாய் நிற்கும்";

என்று உளமாரப் பாராட்டியுள்ளார். அதுவே அல்லாமல் "கவிஞன் கனவு" என்ற தலைப்பில் நாமக்கல் கவிஞர் பாடிய ஆறு பாடல்களிற் கவிஞர் தாகூரின் போக்கு காணப்படுகிறது என்று ஒருவர் கூறுதல்கூடும்.

"கண்ணுக்குத் தெரியாத
காட்சிகள் காண்பேன்
காதுக்குக் கேளாத
கீதங்கள் கேட்பேன்
எண்ணிக்கை யில்லாத
இன்பங்கள் நுகர்வேன்
எல்லாரும் இன்புற
எங்கெங்கும் பகர்வேன்"

என்ற பாட்டு ஓர் எடுத்துக்காட்டு.

கீதாஞ்சலியிலிருந்து சில பாடல்களைக் கவிஞர் பெரியசாமிதூரனும் மொழிபெயர்த்துள்ளார். "வாழிய" என்ற தலைப்பிலும், "மழை கண்ட மயில்" என்ற தலைப்பிலும், "நிலாப் பிஞ்சு" என்ற அவரது கவிதைத் தொகுப்பிலும் காணப்படும் சில பாடல்கள் தாகூர் கவிதைகளை அடியொற்றி எழுதப்பட்டவை.

"எங்கிருந் தோநீ வந்தனை ; என்முன்
கங்குலைப் போக்கி நின்றனை; ஆகா
இடியும் புயலும் எனக்கருள் புரியநீ
எடுத்தபே ரறத்தின் கொடியெனக்
கண்டேன்.
வாழிய தருமம் வாழிய கருணை;
வாழிய உன்றன் மருள்விளை யாட்டே!"

என வந்துள்ள பகுதி தூரனின் கவியாற்றலை நமக்குக் காட்டுகின்றது. "மழை கண்ட மயிலில்" வரும்

"காதலனை இதுகாறும் காணேன்,
காணுவேன் எஃஞ்ஞான்றும் உள்ளம்"

என்ற அடிகளிலுள்ள கவித்துவத்தைப் படித்துப்படித்துச் சுவைத்து மகிழலாம்.

அவர் இயற்றியுள்ள "ஓடக்காரன்" என்ற பாட்டிலுள்ள உருவகம் கவிஞர் தாகூரின் உருவகத்தைத் தழுவியது எனக் கூறலாம்.

"காணவும் கூசினேன் கலக்கியே வெள்ளம்
பாறையில் மோதிடப் பகரொணுத்
தொல்லைகள்
மீறிய தந்தோ வேதனை பொறுக்கிலேன்"

எனத் தொடங்குகிறது "ஓடக்காரன்" பாட்டு.

"ஈன்றதாய் போலவே என்னையும் காத்து
அன்புடன் ஓடம் செலுத்திடும் ஐயனே,
உன்னுடை வாழ்க்கை உரைப்பாய்
எனக்கே"

எனக் கேட்டதற்கு விடை,

"பேரும் எனக்கிலை ; பித்தராய்ப் பலரும்
ஊருடன் பேரும் ஒன்றல இரண்டல
ஆயிரம் கூறுவர் ; அவையெலாம்
பொய்யே"

* * *

"என்னைப் பெற்றோர் யாருமே இல்லை ;
என்றுமே யானும் பிறந்ததும் இல்லை"

என்ற அடிகளுட் சொல்லப்பட்டுள்ளது.

" உன் கைத்தலம் பிடித்த காதலி யாரோ?" என்ற வினவிற்கு விடை,

" பெண்மணி, நீயென் உத்தமக் காதலி
உணர்ந்திலை இன்னுமோ "

என்ற விடை கிடைத்தது.

" இருள்திரை மாயமாய் விலகிட
ஓடமும் யாறும் ஒன்றையும் காணேன் "

என அப்பாட்டை முடிக்கின்ற தூரனுடைய உள்ளத்தில் தாகூரின் உருவகங்கள் ஊடுருவிச் சென்றிருந்தன என ஊகித்தல்கூடும்.

தூரன் மாணவராய் இருந்தபொழுதே, ஏறத்தாழ முப்பது ஆண்டுகளுக்கு முன், பொங்கல் வாழ்த்தாகச் சில பாடல்களைப் பாடினார். அப்பாடல்களில் தாமே பாடிய சிலவும் தாகூரின் "விடுதிப் பறவைகள்" என்ற தலைப்பிலுள்ள பாடல்கள் சிலவும் அமைந்துள்ளன. அவை "பட்டிப் பறவைகள்" என்ற தலைப்பில் வெளிவந்துள்ளன.

" கவிதையே, உன்னை நான்தானே
எழுதினேன்? என்று கூறி
எழுத்தாணி பெருமை கொள்கிறது "

என்றும்,

" தாமரைமலரைப் பார்த்துக் காகிதப்பூ
சொல்கிறது:
நீ நாளைக்கு வாடி விடுவாயே :—"

என்றும்,

" பகலாகவே இருக்கக்கூடாதா என்று
தேன்வண்டு
ஆசைப்படுகிறது."

" இரவாகவே இருக்கக்கூடாதா என்று
குள்ளநரி
ஆசைப்படுகிறது."

என்றும்,

" மின்னல் ஒளியைக் கண்டு மகிழ ஆசை
கொண்டவன் இடியின்
முழக்கத்திற்கும் தயாராக இருக்க
வேண்டும் "

என்றும் தூரன் இயற்றிய உரைநடைக்கவிகள் தாகூரின் உரைநடைக் கவிதை சிலவற்றை அடியொற்றி இருக்கின்றன என்று சொல்லுதல் இயலும்.

"மேகமாக இருக்கக் கூடாதா என்று
பறவை ஏங்குகிறது.
பறவையாக இருக்கக் கூடாதா என்று
மேகம் ஏங்குகிறது "

" உனக்குப் பசியில்லையென்பதனால் உன்
உணவைக் குறை சொல்லாதே "

" கடவுளுக்குப் பெரிய இராச்சியங்களின்
[மேல்
சலிப்பேற்படுகிறது;
ஆனால் சிறு மலர்களின் மேல் ஒருநாளும்
சலிப்பில்லை "

" கடவுளுக்கு இன்னும் மனிதனிடம்
சலிப்பேற்படவில்லை என்ற
சேதியுடன் ஒவ்வொரு குழந்தையும்
உலகில் தோன்றுகிறது "

என்றும் அவரே மொழிபெயர்த்துள்ள தாகூரின் கவிகள் தூரன் சிந்தையைவிட்டு அகலவில்லைபோலும்.

தாகூரினுடைய கதைகள் சிலவற்றைத் திரு. சீனிவாசாச்சாரியாரும், சுப்பிரமணிய பாரதியாரும் பல்லாண்டுகளுக்கு முன்னரே மொழிபெயர்த்து வெளியிட்டனர். திரு. வ. வே. சு. ஐயர் அவர்களாலும் தாகூர் தமிழ் நாட்டில் அறியப்படலாயினர். தாகூருடைய சிறுகதைகளையும் புதினங்களையும் மொழி பெயர்த்து வெளியிட்டமைக்காக அறிஞர்கள் த. நா. குமாரசாமி, த. நா. சேனாபதி, திருவாளர்கள் வி. ஆர். எம். செட்டியார், ஏ. கந்தசாமி, டி. எல். பார்த்தசாரதி, திருவாட்டியர் அரங்கநாயகி அம்மாள், தஞ்சம்மாள், சாவித்திரி அம்மாள் ஆகியோருக்குத் தமிழகம் பெரிதும் கடமையுடையது. இவ்வாண்டில் நடைபெறும் தாகூர் நூற்றாண்டு விழாவை யொட்டிச் சாகித்திய அகடமியார் தமிழில் வெளிப்படுத்தியுள்ள மொழிபெயர்ப்பு நூல்கள் பல உண்டு. எனவே, இவற்றையெல்லாம் தமிழ்மொழி வழியாகப் படித்தறிந்து மேன்மேலும் கவிஞர் தாகூரை நன்கு அறிந்து கொள்வதற்குத் தமிழ் மக்கள் வாய்ப்புடையவராக உள்ளனர். ஆதலால், வருங்காலத்தில் "யாதும் ஊரே, யாவரும் கேளிர்" என்ற தமிழக விழுமிய கருத்தினை விளக்கமாகப் பரப்பிய தாகூருடைய கருத்துச் செல்வங்கள் நாட்டிற்குப் பெரிதும் துணைநின்று பயன்தரும் என்பது உறுதி.*

* டெல்லியின்கண் 1961 நவம்பரில் நடைபெற்ற உலக இலக்கியக் கருத்தரங்கு மாநாட்டிற் கலந்துகொண்ட டாக்டர் அ. சிதம்பரநாதன் அவர்களுடைய கட்டுரை.

எழுத்தாளர்

[டாக்டர் மா. இராசமாணிக்கனார்]

இக்காலத்தில்

இக்காலத்தில் எழுத்தாளர் என்னும் சொல், பொது மக்களுக்குப் புரியத்தகும் வகையில் சிறுகதை, பெருங்கதை என்னும் புதினம் (நாவல்), கவிதை, கட்டுரை என்பவற்றை எழுதுபவரைக் குறிக்கின்றது. இப்பொருளிற் பார்ப்போமாயின் பரமார்த்த குரு கதை என்னும் நூலை எழுதிய வீரமாமுனிவர் காலத்தால் முற்பட்டவர் ஆவர். அடுத்து, சென்ற நூற்றாண்டில் வாழ்ந்த விநோத ரச மஞ்சரி என்னும் நூலை எழுதிய அஷ்டாவதானம் வீராசாமி செட்டியார், பிரதாப முதலியார் சரித்திரம் எழுதிய வேதநாயகம் பிள்ளை போன்ற சிலரைக் குறிக்கலாம்.

நாம் வாழும் இந்த இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் கவியரசர் பாரதியார், கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை, பி. சம்பந்த முதலியார், வடுவூர். கே. துரைசாமி ஐயங்கார், கோதைநாயகி அம்மாள், இரங்கூன் பொன்னுசாமி பிள்ளை, ஆரணி குப்புசாமி முதலியார் முதலியோர் சிறந்த எழுத்தாளராக வாழ்ந்தனர். பின்பு காலஞ்சென்ற கல்கி, வ. ரா., புதுமைப் பித்தன் என்போர் புகழ்பெற்று விளங்கினர். இன்றுள்ள எழுத்தாளருள் டாக்டர் மு. வரதராசனார், கி. வா. ஜகந்நாதன், மேதாவி, சிரஞ்சீவி, மாயாவி, பி. எம். கண்ணன், அகிலன், துறைவன், சோமு, நாரண துரைக்கண்ணன் குறிப்பிடத்தக்கவர்.

இன்றுள்ள கவிஞர் பலராவர். அவருள் பாரதிதாசன், நாமக்கல் கவிஞர், வாணிதாசன், கண்ணதாசன், அழ. வள்ளியப்பா, முடியரசன், தமிழ் அண்ணல், சாமி பழனியப்பன், பெரி. சிவனடியான், முத்துக் கண்ணசன், வே. அண்ணாமலை முதலியோர் பாராட்டத்தக்கவர்.

பெருங்கதை என்னும் புதின எழுத்தாளருள் டாக்டர் மு. வ., கி. வா. ஜகந்நாதன், மாயாவி, அகிலன், பகீரதன், சிரஞ்சீவி, மேதாவி, ஜெகசிற்பியன், கலைமணி, எஸ். ஏ. பி. அண்ணாமலை, அரு. இராமநாதன், நாரண துரைக்கண்ணன், டி. கே. சீனிவாசன், இராதாமணாளன், ம. கி. தசரதன், அரங்கண்ணல், அறிஞர் அண்ணாத் துரை, சாண்டில்யன் முதலியோர் பாராட்டத்தக்கவர் ஆவர்.

சிறுகதை எழுத்தாளருள் கல்கி, அகிலன், விந்தன், சுகி, பெ. தூரன், கோமதி சாமிநாதன், எல்லார்வி, சாண்டில்யன் முதலியோர் குறிப்பிடத்தக்கவர்.

இலக்கிய எழுத்தாளருள் டாக்டர் மு. வ., டாக்டர் சேதுபபிள்ளை, டாக்டர் அ. சிதம்பரநாதன், கா. அப்பாத்துரை, கி. வா. ஜகந்நாதன், தொ. மு. பாஸ்கரத் தொண்டைமான், அப்துற்றகீம், சி. எம். இராமச்சந்திரன் செட்டியார், சிதம்பர ரகுநாதன் முதலியோர் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவர்.

எழுத்தாளர் குறிக்கோள்

தமிழ் எழுத்தாளர்களுக்குச் சில குறிக்கோள்கள் இருத்தல் வேண்டும். தங்கள் நூல்கள் பொது மக்கள் ஒழுக்கத்தை வளர்க்கத் தக்கனவாய் இருத்தல் வேண்டும்; அனைவரும் சமம் - எல்லோரும் வாழப்பிறந்தவர் - ஒவ்வொருவரும் மனிதப் பண்போடு நடந்து கொண்டால்தான் சமுதாயம் இன்புற்று வாழ முடியும் என்பனபோன்ற அடிப்படைக் கருத்துக்களை மக்கள் உள்ளங்களில் ஆழமாகப் பதியவைக்க வேண்டும்; நாட்டுப்பற்றையும், மொழிப்பற்றையும் இனப்பற்றையும் ஊட்டுவனவாக அமைதல் வேண்டும்; பொது மக்களுக்கு நல்ல அறிவு, நல்ல ஒழுக்கம், நல்ல வாழ்க்கை இவற்றை வளர்க்கும் முறையில் எழுத்தாளர் படைப்புக்கள் இருத்தல் வேண்டும். இக் குறிக்கோள்களுடன் எழுதப்பெறும் நூல்கள் இந்நாட்டில் இறவாத புகழுடையனவாக விளங்குமென்பதில் ஐயமில்லை.

இளம் எழுத்தாளர்களை ஊக்கப்படுத்துவதும் சிறந்த நோக்கமாக இருத்தல் வேண்டும்.

எழுத்தாளர் தகுதி

தமிழ் எழுத்தாளருக்குத் தங்கள் தாய்மொழி தமிழ்தான் என்பதில் நம்பிக்கை

இருக்கவேண்டும்; அதன் தூய்மையிலும் வளர்ச்சியிலும் கண்ணும் கருத்துமாய் இருத்தல் வேண்டும். உண்மையான தமிழ் மரபைச் சேர்ந்தவர்கள் — பொது மக்களுக்கென்றே எழுதுபவர்கள் — அப் பொது மக்களுக்குப் புரியாத பிறமொழிச் சொற்களைத் தம் நூல்களில் எழுதுவது தவறு.

தமிழ் எழுத்தாளர் தமிழ் இலக்கண இலக்கியங்களைப் படித்தவராக இருப்பது நல்லது. அப்பொழுதுதான் அவர்கள் தமிழ் மரபை அறிய முடியும். அவர்கள் எழுதும் நூல்களில் தமிழ்மணம் கமழும். மாபசான் நூல்களில் பிரெஞ்சுமணம் கமழ்வதும், டால்ஸ்டாய் நூல்களில் ரஷ்ய மணம் கமழ்வதும் நாம் அறிந்ததே. அத்தகைய மணம் — இலக்கிய வளம் — தமிழ் எழுத்தாளர் நூல்களில் கமழ வேண்டும்.

ரோம் நாட்டு எழுத்தாளர்களைப் பற்றிக் குறிப்பிட்ட கார்டினல் நியுமன் என்ற அறிஞர், ''சிசரோ ஒழிந்த மற்ற எழுத்தாளர் அனைவரும் இலத்தின் எழுத்துக்களை (மக்களுக்குப் பயன்படாத நூல்களை) எழுதினார்கள்; சிசரோ ஒருவர்தாம் ரோமானியரை (ரோம் நாட்டு மக்களை மகிழ்விக்கும் நூல்களை) எழுதினார்.'' என்று கூறியுள்ளார். இப் பொன்னுரை தமிழ் எழுத்தாளர் உள்ளங்களில் நிலைத்து நின்று பயனளிக்க வேண்டும்.

தமிழ் எழுத்தாளர்கள் தமிழ்நாட்டு வரலாற்றை நன்கு அறிந்திருத்தல் வேண்டும். தமிழக அரசியல் வரலாறு, சமுதாய வரலாறு, பொருளாதார வரலாறு, சமய வரலாறு முதலிய வரலாற்றுத்துறைகளை நன்கு அறிந்தால் இச் சமுதாயத்தில் இன்றுள்ள மாறுபாடுகளை நன்கு உணர முடியும். அந்நிலையில் சமுதாயத்திற்கு எவை தேவை என்பதை அவர்கள் எளிதில் உணரலாம். அவற்றிற்கு ஏற்பத் தங்கள் கவிதைகளையும் பிறவற்றையும் நல்ல முறையில் அமைக்கமுடியும்.

பிறமொழி இலக்கிய அறிவு மிகவும் இன்றியமையாதது. பிறமொழிகளில் உள்ள சிறந்த கருத்துக்களைத் தம் தமிழ் நூல்களில் புகுத்த இவ்வறிவு பெரிதும் பயன்படும்.

அன்றாடம் உலகில் நடைபெறும் நிகழ்ச்சிகளை அறிதலும் எழுத்தாளர் கடமையாகும். சுவை பயக்கும் பல செய்திகள் செய்தித்தாள்களில் வருகின்றன. அவற்றை அடிப்படையாகக் கொண்டு பல நூல்கள் எழுதலாம்.

தாழ்ந்துள்ள தமிழ்ச் சமுதாயத்தை உயர்த்தப் பயன்படும் நூல்களை எழுதுவதை எழுத்தாளர்கள் தங்கள் சிறந்த கடமையாகக் கருதவேண்டும். சமுதாயத்தில் இன்றுள்ள தீண்டாமை, பெண்ணடிமை, மூட நம்பிக்கைகள், கண்மூடித்தனமான பழக்க வழக்கங்கள் முதலிய பிற்போக்குத் தன்மைகளை வன்மையாகக் கண்டிக்கும் நெஞ்சுறுதி எழுத்தாளர்க்கு இருத்தல் வேண்டும். இந்தத் துறையில் டாக்டர் மு. வ., அறிஞர் அண்ணாத்துரை, புரட்சிக் கவிஞர் பாரதிதாசன், வ. ரா., புதுமைப்பித்தன், கவிஞர் கண்ணதாசன், நாவலர் நெடுஞ்செழியன், அன்பழகன், கவிஞர் முடியரசன், சாமி பழநியப்பன், கு. இராசவேலு முதலியோர் குறிப்பிடத்தக்கவர். இத்தகைய நெஞ்சழுத்தம் எழுத்தாளர் அனைவருக்கும் இருக்கவேண்டும். அப்பொழுது தான் மக்களுக்கு முற்போக்கு எண்ணங்கள் வளர்தல் கூடும். மூடநம்பிக்கைகளை மேலும் வளர்க்கும் எழுத்தாளர்கள் சமூகத் துரோகிகளே யாவர்.

தமிழ் நடை

தமிழகத்தில் பல நூற்றாண்டுகளாக ஆட்சிமொழியாக இருந்த நமது தமிழ், பிற்காலத்தில் தனது அரியணையை இழந்தது; இப்பொழுது வளர்ந்து வருகின்றது. எழுத்தாளர்கள் இதனை மனத்தில் பதிய வைத்தல் வேண்டும். அதன் தூய்மையையும் பெருமையையும் தொடர்ந்து பாதுகாப்பதே தங்கள் கடமை என்பதை உணர்தல் வேண்டும். 'மக்கள் பேசுவது போலவே எழுதவேண்டும். அதுதான் உயிர் உள்ள நடை' என்று சொல்லிப் பாமரமக்கள் பேச்சு நடையையே எழுத்தாளர் சிலர் எழுதி வருகின்றனர். பாமர மக்களது நடை பொது மக்களுக்கு நன்கு தெரியும்; அதைத் தெரிந்துகொள்ள எழுத்தாளர் நூல்களை விலை கொடுத்து வாங்கவேண்டிய தேவை இல்லை அல்லவா? கொச்சை மொழி பேசும் மக்களுக்கு **வாழ்க்கைக்குத் தேவையான படிப்பினைகளை ஊட்டுவதோடு, இனிய எளிய செந்தமிழ் நடையையும் அறிமுகம் செய்து வைப்பதுதான் எழுத்தாளரது கடமையாக இருத்தல் வேண்டும்.** எழுத்தாளர் தங்கள் எளிய இனிய செந்தமிழ் நடைக்கு மக்களை அழைத்துச் செல்ல வேண்டுமே தவிர, மக்களுடைய பேச்சு நிலைக்குத் தங்களை இழுத்துக்கொண்டு போவது முறையன்று. **சிறந்த கருத்துக்களோடு**

பிழையற்ற எளிய நடையையும் பொது மக்களுக்கு ஊட்டுவது எழுத்தாளர் கடமை என்பதை அவர்கள் மறந்துவிடலாகாது. இதுவே அறநெறிப்பட்ட எழுத்தாளர் கடமை. 'எளிய நடையில் எழுதுகிறோம்' என்று சொல்லி எழுத்தாளர் சிலர் தம் நூல்களில் எழுதியுள்ள சொற்களைப் பாருங்கள் :—

நிஷ்கிரிஷையாக, பிரமேயம், மனுஷ்யர், சௌஜன்யமாக, அசிரத்தை, ஸ்தம்பித்துப் போனான், பிரத்யேகமான, ரக்ஷித்து விடுவது, பிரஸன்னமாகி, அச்சானியம், வித்வாம்ஸனி (பாடுபவள்), வைஷம்யம், பிலாக்கணம் (பாடுவதுபோல் பாடி அழுவான்), குசலப்ரசன்னம், அஜகஜாந்தரம், கிருஹதர்மிணி, காஸ்பரிசம், கபளீகரம், பூர்த்தண்யமாக, விகசித்தது, தாம்பத்ய வாழ்க்கை, திரை அவர்களை 'ஸ்வாகதம்' என்று வரவேற்றது, வியர்த்தமாயிற்று, ஆசுவாசப்படுத்தினான், சிசுருஷை, நிஷ்களங்கம், அசாத்திய (கோபம்), தர்மசங்கடம், சங்கோஜம், அர்த்தபுஷ்டி, மந்தஹாஸிந்தாள், பிரஸ்தாபித்தான், விரஸம், ரம்யம், அசேதன வஸ்துக்கள், சங்கேதம், சாகசக்கியம், தார்க்கரணித்து, ஆதங்கம், நிபமாக, சகஜமாக, ஆதர்ச இல்லாள், கூபஸ்த மண்டூகம், மக்ணமாக, ஸ்மரிக்க, ஆட்சேபசம்க்ஷேபங்கள், உபயகுசலோபரி, சம்ரட்சிக்க, பிரேமாலிங்கனம், தாத்பரியம், ஆசாத்தியம், சிந்தாக்கிராந்தையாய், விவாஹ ஆஹ்வான பத்திரிகை, ஆஸ்வாஸப் படுத்தினான், குசலம், ஸ்பஷ்டமாக, நாஷ்டா.

இச்சொற்கள் தமிழ்ச் சொற்கள் அல்ல. பொது மக்கள் வழக்கில் இல்லாதவை. இவை எழுதப்பெற்ற நூல்கள் எளிய தமிழ் நடையில் இருக்கின்றன என்று சொல்வது பொருத்தமாகுமா 'என்பதை அன்பர்கள் எண்ணிப் பார்த்தல் வேண்டும்.

தமிழில் பிறமொழிச் சொற்களைக் கலந்து எழுதுவது அழகானது என்று சொல்லும் எழுத்தாளர்களும் இந்நாட்டில் உண்டு. மிகவும் தேவைப்பட்ட இடங்களில் பழக்கப்பட்ட இரண்டொரு பிறமொழிச் சொற்களைச் சேர்க்கலாமே தவிர, மேலே கூறப்பெற்ற - பொது மக்களுக்குப் புரியாத பிறமொழிச் சொற்களைப் புகுத்துவது பொறுக்க முடியாத குற்றமாகும்.

எழுத்தாளர் வளர்ச்சி

தொடக்கத்தில் சொல்லப்பட்டபடி நல்ல படிப்பாளிகளும் தாமாக எண்ணும் ஆற்றல் உள்ளவரும் உண்மையான தமிழ்ப்பற்று உடையவருமே நல்ல எழுத்தாளர் என்று பெயர் பெறமுடியும். அத்தகைய எழுத்தாளர்கள் ''தமிழர்'' என்ற அடிப்படையில் ஒன்று கூடுதல் வேண்டும்; பேரூர்களிலும் சிற்றூர்களிலும் எழுத்தாளர் மன்றங்களை நிறுவுதல் வேண்டும். இந்தியாவின் பல பகுதிகளில் குடியேறி வாழும் தமிழர்களும் இத்தகைய மன்றங்களை அமைப்பது நல்லது. இம்மன்றங்கள் அனைத்தும் ஒன்றோடு ஒன்று உறவாடி வளர்தல் வேண்டும். இந்திய அரசாங்கமும் மாநில அரசாங்கமும் மதிக்கத்தகும் முறையில் தமிழ் எழுத்தாளர் மன்றம் ஆக்கம் பெறுதல் வேண்டும். உலகப் பெரும் பரிசாகிய நோபல் பரிசைப் பெறத்தக்க நிலையில் தமிழ் எழுத்தாளர்கள் வளர்ச்சி பெறவேண்டும்.

இந்திய அரசாங்கம் நடத்திவரும் நூல் பரிவுரைக் குழு (சாஹித்திய அகடமி), பிற மொழி நூல்களை மொழி பெயர்த்து வெளியிடும்படிப் பரிவுரை வழங்குதல் போலத் தமிழ் எழுத்தாளர் நூல்களில் சிலவற்றைப் பிற இந்திய மொழிகளில் மொழிபெயர்க்கும்படியும் தூண்டல் வேண்டும்.

தமிழ் எழுத்தாளர்கள், பெர்னார்ட் ஷாவைப் போலவும் நக்கீரரைப் போலவும் தன்னம்பிக்கையும் பெருமிதமும் உடையவர்களாக விளங்குதல் வேண்டும். உண்மை கூறத் தயங்காத—தவற்றைக் கண்டிக்கத் தயங்காத நெஞ்சுறுதி பெற்றிருத்தல் வேண்டும். அப்பொழுதுதான் எழுத்தாளர்கள் தன்னம்பிக்கையோடு சமுதாயத்திற்கு உண்மையான தொண்டு செய்ய முடியும்.

திருவள்ளுவர் படைவீரரை 'வில்லேர் உழவர்' என்றும், பேச்சாளரையும் எழுத்தாளரையும் 'சொல்லேர் உழவர்' என்றும் கூறியுள்ளார். அச் சொல்லேர் உழவராகிய எழுத்தாளர்கள் மக்கள் மனமென்னும் வயலைத் தம் எழுத்து வன்மை என்னும் கலப்பையால் உழுது, இனிய எளிய செந்தமிழ் நடை என்னும் எருவிட்டு, நல்ல கருத்துக்களென்னும் விதைகளை விதைப்பாராயின், நல்ல பயன் விளையும். அந்நிலையில் அவர்களது வருவாயும் உயரும்; வாழ்க்கைத் தரமும் உயரும். 'பொது மக்களுக்குப் பயனுள்ள தொண்டு செய்கிறோம்' என்னும் மன அமைதி அவர்களுக்கு உண்டாகும். இதுவே இறவாப் புகழை அடைய விரும்பும் உண்மைத் தமிழ்

நாணும் ஒழுக்கம்

[பேராசிரியர் அ. மு. பரமசிவானந்தம் எம். ஏ., எம். லிட்]

'நாணம்' என்ற சொல் பிறந்ததும் அதை மகளிரோடு சார்த்திப் பொருள் கொள்ளவே உலகம் விரும்புகின்றது. 'நாணம், மடம், அச்சம், பயிர்ப்பு' என்ற நான்கும் பெண்களுக்குரிய இன்றியமையாக் குணங்கள் என்று எழுதிவைத்துள்ளனர். இதை உண்மையென்றே கொள்ளல் வேண்டும். ஆனால் நாணம் ஆண்களுக்கு வேண்டாமா? இக் கேள்விக்குப் பதில் கூறப் பலர் தயங்குவர். வள்ளுவர் 'ஆம்; வேண்டும்' என்று திட்டவட்டமாகக் கூறுவர். மனிதராகப் பிறந்த — உணர்வுடைய — எல்லா உயிருக்கும் நாணம் இன்றியமையாது வேண்டப்படும் ஒன்று — உயிரின் மேலாக ஓம்பப்படும் ஒன்று என்று வரையறுப்பார் திருவள்ளுவர்.

நாணம் என்பது உடலைக் கூனிக் குறுகி வளைத்துச் செல்வது என்ற அளவில் பொருள் கொள்ளுவர் சிலர். அதனாலேயே அதைப் பெண்கள் மேல் ஏற்றிச் சொல்லுகின்றனர். திருவள்ளுவரும் அவர்தம் உரையாசிரியர்களும் இந்த நாணத்தை நன்கு விளக்கியுள்ளனர். 'நாணுடைமை' என்கிற ஓர் அதிகாரமும் வள்ளுவர் வகுத்துள்ளனர். நாணத்தை, 'உயர்ந்தோர் தமக்கு ஒவ்வாத கருமங்களில் நாணுதல்' என்றும், 'நீதியல்லாத கண்டால் நாணுதல்' என்றும், 'அறம் பொருள் இன்பங்களில் பிறர் பழியாது ஒழுகுதல்' என்றும், 'கருமத்தால் நாணுதல் நாண்' என்றும் பல வகையில் விளக்குவர். மகளிர் கொள்கின்ற நாணினும் இது வேறுபட்டது என்பதை வள்ளுவர் 'திருநுதல் நல்லவர் நாணுப் பிற' (1011) என்றே விளக்கியுள்ளார். எனவே நாணம் மகளிர்க்கு உரிய ஒன்றாக நின்றுவிடுவதன்று என்பதும் மக்கள் அனைவருக்கும் அவரவர் செயல் வழி உண்டாகிச் சிறந்து நிற்கும் ஒன்று என்பதும் நன்கு விளங்குகின்றதன்றோ!

மனிதனாகப் பிறந்தவர் தவறு செய்வதற்கு அஞ்சவேண்டும். எனினும் சிலர் அஞ்சாது கொடுமை செய்து வருகின்ற காரணத்தாலேயே உலகம் அளவற்ற இன்னலுக்கு உள்ளாக நேருகின்றது. அவ்வாறு கொடுமை இழைப்பவரை மக்கள் இனத்தில் சேர்ப்பதற்கே அறிஞர் அஞ்சுவர். கொடுமை இழைத்து வெற்றிக் கொடி நாட்டி வீறு பேசுபவரினும், தவறு செய்யாது, செய்தால் நாணும் தகவுடையவரையே நல்லவர் போற்றுவர். அவர்தம் புகழே உலகில் என்றென்றும் நினைக்கப்பெறும். நாணுவதை ஒழுக்கமென்றே காட்டுவர் வள்ளுவர். மனிதர் வாழ வரையறுத்துக் கொண்ட ஒழுகலாறுகளில் நாணும் இன்றியமையாது வேண்டப்படும் ஒன்றாகின்றது.

'அணியன்றோ நாணுடைமை சான்
றோர்க்கு அஃதின்றேல்
பிணியன்றோ பீடு நடை' (1014)

என்று திருவள்ளுவனார் நாணுடை ஒழுக்கத்தை நல்லவர் அணி எனக் காட்டி, அஃதில்லாதவர் எத்துணைப் பீடு நடைபோட்டுப் பெருமிதவாழ்வு வாழ்ந்தாலும் அது நாட்டை நலிவுறுத்தும் பிணி என்றே விளக்கிவிட்டார்.

'நாண் சிறந்ததா? உயிர் சிறந்ததா?' இக் கேள்விக்குப் பதில் சொல்வது எளிதன்றுதான். உலகில் வாழ்வதற்காகவே உயிர் பெற்றோம். அந்த உயிர் வாழ்விற்கு ஓர் அணி நாண். இதில் உயிர்தானே சிறந்தது என நினைக்கத் தோன்றும். ஆனால் திருவள்ளுவனார் இரண்டில் ஒன்றை விடவேண்டிய நிலை வந்

எழுத்தாளர்கள் மேற்கொள்ளத் தக்கவை. இத்தகைய உயர்நிலையில்தான் எழுத்தாளர் — சொல்லாளர் என்ற பெயர்களோடு பொருளாளர் என்ற பெயரும் எழுத்தாளரைச் சாரும். அந்நிலையில்தான் பொதுமக்களும் அரசினரும் எழுத்தாளர்களுக்கு உரிய மதிப்பைத் தருவர். அம்மதிப்பைப் பெற முயல்வதே எழுத்தாளரது தலை சிறந்த நோக்கமாக இருத்தல் வேண்டும்.

தால் நாணத்தைக் காப்பாற்றி உயிரை விடுதல் நல்லது என்று கூறுவார்.

'நாணால் உயிரைத் துறப்பார் உயிர் பொருட்டால்
நாண்துறவார் நாணாள் பவர்' (1017)

என்பது அவர் வாக்கு. இப்படியே இன்னும் பல கருத்துக்களை வள்ளுவர் வாரிவீசுகின்றார். இதன் கருத்து என்ன? ஆம்! உயிர் என்றும் எப்போதேனும் விட வேண்டிய ஒன்று அல்லவா? உயிர் உடம்பை விட்டுப் போவது உறுதி. ஆனால் நாண் விட்டுவிடத் தக்கதன்று. அப்படி விட நேரிட்டால் உலகம் உள்ளளவும் அதனால் பழி உண்டாகுமேயன்றிப் பயன் உண்டாகாது. எனவே என்றும் அழியாது வாழவைக்கும் நாணைவிடுவதைக் காட்டிலும் எப்போதும் அழியக் காத்திருக்கும் உயிரை அந்த நாண் பொருட்டால் விட்டால் பெருமைதானே! அப்படி விடாது ஒருவன் நாணாது வாழ்வானாயின், பிறர் நாணத்தக்க சொல்லுக்குத் தான் நாணானாயின், அவனை அறம் நாணிவிட்டு நீங்கும் என்ற உண்மையைத் திருவள்ளுவனார்,

பிறர்நாணத் தக்கது தான் நாணானாயின்
அறம்நாணத் தக்க துடைத்து (1018)

என்று காட்டுவர். எனவே, பழி பாவங்களுக்கு அஞ்சி, அறம் பொருள் இன்பங்களைப் பெறும் வாழ்க்கை நெறியில் மற்றவர் பழிக்கும் பொல்லாங்குக்கும் அஞ்சி, அமைதியாக, நாண் இறவாமல் காத்து வாழும் வாழ்க்கையே சிறந்தது என்பது தெளிவன்றோ!

இத்தகைய நாண் இறவா நல்வாழ்வை விரும்பியே மக்கள் வாழ வேண்டும் என்ற உண்மையைத் தொல்காப்பியரும் அவர் நூலுக்கு விளக்கம் கூற வந்த நச்சினார்க்கினியரும் நன்கு விளக்குவார்கள். தொல்காப்பியர் புறத்திணை இயலில் இந் நாணைப் பற்றி எடுத்துக் காட்டுவதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

'இல்லார் நாணப் பெரியவர் கண்ணிச்
சொல்லிய வகையின் ஒன்றொடு புணர்ந்து
தொல்லுயிர் வழங்கிய அவிப் பலியானும்' (தொல். புற. சூ. 21.)

என்று காட்டி நாணும் நல்ல வீரர் நெறியை விளக்குகின்றார். நாணுதல் என்ற சொல்லுக்கு விளக்கம் தரவந்த நச்சினார்க்கினியர், 'நம்மை அவன் செய்யாதே நாம் அவனை அறப் போர் செய்யாது வஞ்சனையால் வென்றமையின் அவன் தன் உயிரைக் கொடுத்தான் என நாணுதல்' என்று விளக்கம்தந்தார். மேலும் இச்சூத்திர அடிகளுக்கு அவர், "பகைவர் நாணும்படியாக உயர்ந்தோரான் நன்கு மதித்தலைக்கருதி இன்னது செய்யேனாயின் இன்னது செய்வலெனத் தான் கூறிய பகுதி இரண்டனுள் ஒன்றனோடு பொருந்திப் பல பிறப்பினும் பழகிவருகின்ற உயிரை அங்கியங் கடவுட்குக் கொடுத்த அவிப்பலியானும்" என விளக்கம் தந்துள்ளார். இதனால் நாணுடைமையின் உயர்வு நன்கு விளங்குகின்றதன்றோ! போரில் வஞ்சினங்கூறியவன், மாற்றான் செய்த கொடுமையின் காரணத்தால் தனக்கு உண்டான நாணத்தை விடாது, அதற்குப் பதிலாகத் தன் உயிரையே கொடுத்துப் பெருமை பெற்ற சிறப்பு உயர்த்திக் காட்டப்பட்டுள்ளது. அதனினும் மேலாகப் பகைவர் நாணும்படி அவன் உயிர் விட்ட சிறப்பினைக் காட்டும் நிலையும் சேர்த்து எண்ண வேண்டிய ஒன்றாகும். இவன் தான் உயிர்ப்பலி செய்து, உண்டான நாணை விடாதுகாக்க முற்பட்டுச் சிறப்புற்றான். ஆனால் இதற்காகப் பகைவன் ஏன் நாணவேண்டும்? அதற்குத்தான் நச்சினார்க்கினியர் 'நாணுதலாவது' என்ற சொற்பொருள் விளக்கம் தருகிறார். உயிர்ப் பலிகொடுத்தவன் உண்மையில் வெற்றி பெற்றவரினும் உயர்ந்தவனாகி விட்டான். எனவே 'நான் செய்த கொடுமையால் அவன் உயிர்ப்பலி தந்து உயர்ந்தானே, நான் பழிபூண நேர்ந்ததே' என்றும், 'என்னை அவன் அவ்வாறு வஞ்சித்து வெற்றிபெற, நான் நாண்பூண்டு உயிர் விட்டு உயர வாய்ப்பினைப்பெறவில்லையே' என்றும் எண்ணிப் பகைவர் நாண வேண்டும் என்பதே அவர் விளக்கம். இதனால் 'நாண்' பெறவேண்டிய நல்ல பண்பினை நாடு அறிய வில்லையா?

உலகில் இந்த நாண் வாழ்கின்றதா? பழங் காலத்தில் சிலர் இந் நாண்வழியில் போராற்றி வீழ்ந்தும் வாழ்ந்தும் உயர்வு பெற்றார்கள். சிலர் நாணற்றுத் தவறியும் உள்ளனர். இத் தொல்காப்பியர்தம் இலக்கணத்துக்கு இலக்கியமாக அமைந்த மன்னர்கள் நாட்டில் வாழ்ந்துள்ளனர். ஒரு சிலர் வழுக்கி விழுந்தும் இருந்தனர். ஆனால் அவ் வழுக்கும் இடங்களில் ஒழுக்கமுடையார் வாய்ச் சொற்கள் அவர்களைத் திருத்தியுள்ளன. அவ்வாறு திருத்தம் பெற்ற மன்னருள் கரிகாற் பெரு

வளத்தானும் ஒருவன். சேரமான் பெருஞ் சேரலாதன், கரிகாற் பெருவளத்தானோடு பொருது புறப்புண் நாணி வடக்கிருந்தான. அச்சிறப்பைக் கழாஅத்தலையார்,

'தன்போல் வேந்தன் முன்பு குறித்
தெறிந்த
புறப்புண் **நாணி** மறத்தகை மன்னன்
வான் வடக்கிருந்தனன்' (புறம் 65)

எனப் பாராட்டுவர்.

இதனால் சேரலாதன் சிறப்பெய்தி, நாணைக் காத்து உயிர்விட்டுத் தொல் புகழ் பெற்றான். ஆனால் அச் செயலுக்கு நாண வேண்டிய கரிகாற் பெருவளத்தானே நாணுவதற்குப் பதிலாக வெற்றிவிழாக் கொண்டாடியிருப்பான். உடனே அங்கிருந்த வெண்ணிக் குயத்தியார் அவனைத் தெருட்டி, அவன் நாணுடைமை கொள்ள வேண்டிய நிலையைக் காட்டி, அவன் போரில் வெற்றி பெற்றவனாயினும், உலகம உள்ளளவும் புகழால் வெற்றிபெற்றவன் சேரலாதனே என இடித்துக் காட்டிவிட்டார். இதோ அவர் பாடிய பாடலின் அடிகள்:

'வென்றோய், நின்னினும் நல்லன் அன்றே
கலி கொள் யாணர் வெண்ணிப் பறந்தலை
மிகப் புகழ் உலகம் எய்தி,
புறப் புண் **நாணி** வடக்கிருந் தோனே'
(புறம் 66)

கரிகாற் பெருவளத்தான் முன்னர் மறந்தானேயாயினும், பின்னால் தன் செயலுக்காக நாணியிருப்பான் என்று கொள்ளலாமன்றோ!

இவ்வாறே செய்யக் கடவதாகிய கடமையைச் செய்யாதவரை நாணற்றவர் என்று கூறுவர் அறிவுடையோர். நலங்கிள்ளி தன் ஊராகிய ஆவூரை முற்றுகையிட்டிருந்த காலத்தில் சோழன் நெடுங்கிள்ளி திறந்து வந்து போரைச் செய்யவும் முடியாது, அறநெறியே திறந்து வழியையும் விடாது பல நாள் வாயிலை அடைத்து வைத்திருந்தான். அதனால் மக்கள் பலர் வாடினர். பலர் மன்னனைப் பழித்தும் இருப்பர். இந்த நிலை நாணம் தருவதன்றோ! ஆம். இதைக் கோவூர்கிழார் அவன் முகத்துக்கு நேராகவே சொல்லிவிட்டார்.

'அறவையும் மறவையும் அல்லையாகத்
திறவாது அடைத்த திண்ணிலைக் கதவின்
நீண் மதில் ஒருசிறை ஒடுங்குதல்
நாணுத் தக வுடைத்து காணும் காலே
(புறம் 44)

என இடித்துக் காட்டிவிட்டார். பின் அவரே இருவர் இடைநின்று போர் நிறுத்தினார் எனவும் புறம் காட்டுகின்றது. இவ்வாறு அரசர் தம் கடமையின்வழி வாழாவிடின் நாணுவர். இது அரசருக்குமட்டுமன்றி வள்ளுவர்காட்டிய படி உயிர் பெற்ற அனைத்தினுக்கும்-சிறப்பாக உயிர் உடைய மனிதர் ஒவ்வொருவருக்கும் இன்றியமையாத ஒன்றாகும். மனிதன் நிலை கெட்ட தன்மையை எண்ணிய திருவள்ளுவர் அவனுக்கு விலங்கினையும் பிற இழிந்த பொருள்களையும் காட்டி அவன் நாணோடு வாழ வேண்டிய நெறியை விளக்குகின்றார்.

'மயிர் நீப்பின் வாழாக் கவரிமா அன்னார்
உயிர் நீப்பர் மானம் வரின்' (969)
'தலையின் இழிந்த மயிரனையர் மாந்தர்
நிலையின் இழிந்தக் கடை' (964)

என்ற அவர்தம் பாடல்கள் எதற்காக உலகில் வாழ்கின்றன? நாணத்தின் சிறப்பை நிலை நாட்டவே அன்றோ?

இவ்வாறு செயலில் வழுக்கி வீழ்பவரும், போரில் வழுக்கி வீழ்பவரும் நாணும் நெறி சிறந்த ஒன்று ஆகும். ஒரு சிலர் செயலால், அவர் நாணி முகம் கவிழ்ந்து நிற்கவில்லையாயினும் அவருக்கு வேண்டியவர் முகங்கவிழ வேண்டியுள்ள நிலையினையும் தமிழர் இலக்கியங்கள் எடுத்துக்காட்டுகின்றன. தலைவி குறிஞ்சி நில இயற்கையை ஒட்டிக் களவு வாழ்க்கையை மேற் கொள்ளப் பின்னும் அதை மறைக்க முயலும் நிலையில் அன்னை தலை இறைஞ்சினாள் என்று இறைப்புறனைச் சொல்லிய **கொள்ளம் பக்கனார்** செய்யுள் நற்றிணையில் இடம் பெற்றுள்ளது.

'பொய்யல் அந்தோ வாய்த்தனை
அது கேட்டு
தலை இறைஞ்சினளே அன்னை
செலவு ஒழிந்தனையால் அளியை நீ
புனத்தே' (நற் 147)

என்று அவர் நாணின் நிலையை விளக்குகின்றார். இவ்வாறு புறத்தும் அகத்தும் நாணோடு வாழும் வாழ்க்கை நெறியை விளக்கும் பாடல்கள் பலப் பல. ஈண்டு இவை போதும் என அமைகின்றேன்.

இத்தகைய 'நாணும் ஒழுக்கம்' இன்று நாட்டிலும் உலகிலும் எந்த அளவில் வாழ்கின்றது என எண்ணும்போது நமக்கு நாணம் உண்டாவது இயற்கை. மாற்றான் நாணி உயிர் விடத் தனக்கு அந்த வாய்ப்பில்லையே என நாணும் நாகரிகம் பிறந்த நாட்டில் பிறந்த மக்கள் தாம் இன்று எந்த வழியாலாகிலும் மாற்றானை அழித்துத் தொலைத்துத் தாம்மட்டும் முன்னேற வேண்டும் என எண்ணிச் செயலாற்றுகின்றனர். நம் நாட்டில் நடக்கும் கட்சிப் பிணக்குகளும், மொழிப் போராட்டங்களும் இவற்றிற்கு விலக்கானவை அல்ல. உலக அரங்கில் வல்லரசுகள் மேற்கொள்ளும் போராட்ட நெறிகளும் மாறுபட்ட வழிகளும் இந்த வழியல்லா வழியில் செல்லுவதைக் காண்கின்றோம். இந்த வாழ்வின் அடிப்படையைத் தனி மனிதனும் சமூகமும் மறந்த காரணத்தினால்தான் தனிவாழ்வுப் போராட்டங்களும், சமூக மொழிப் போராட்டங்களும் நாட்டாசை காரணமாக எழும் போராட்டங்களும் எழுகின்றன. இப் போராட்டங்களையும் தேர்தல் சூழ்ச்சிகளையும் பிற மாறுபட்டங்களையும் நினைக்குமுன் வள்ளுவரும் வெண்ணிக்குயத்தியாரும் கோவூர்கிழாரும் எழுதிவைத்துச் சென்றவற்றை எண்ணிப் பார்க்கின் நல்ல பயன் உண்டாகும் என நினைக்கின்றேன். எப்படியாவது, எந்த வஞ்சகம் செய்தாவது பிற நாட்டவரை ஒழிக்கவும், பிற கட்சியாளனை அழிக்கவும், பிற மொழியாளனை நசுக்கவும், பிற பண்பாட்டாளனை இல்லையாக்கவும் செய்யப்படும் முயற்சிகளெல்லாம் வள்ளுவர் வாய்மொழிப்படி உயிரற்ற பொம்மலாட்டம்தானே.

'நாணகத்தில்லார் இயக்கம் மரப்பாவை
நாணால் உயிர் மருட்டி யற்று' (1020)

என்ற அவர் வாய்மொழிப்படிதானே இன்று உலகமும் நம் நாடும் உழன்று கொண்டிருப்பதைக் காண்கிறோம். இந்த நிலைநீங்கி நாணும் ஒழுக்கம் வாழ்விடை மலரின் வழி பிறக்கும். அந்த வழியை அன்று வள்ளுவர், கோவூர்கிழார் போன்ற எழுத்தாளர்கள் வகுத்துத் தந்தார்கள். இன்றும் அதே கடமை இன்றைய தமிழ் நாட்டு எழுத்தாளர்களுக்கு உண்டு என்று கூறி, அவர்கள் அத்தகைய ஆக்க நெறிக்கு வழிகாட்டி நாட்டை நாடாக்க முயல வேண்டுமெனக் கேட்டு அமைகின்றேன். வாழ்க 'நாணும் ஒழுக்கம்'! வளர்க அதன் வழி நல்ல பண்பாடு!

சிறந்த நூல்கள்

★

முத்து இராசாக்கண்ணனுர்

இன்பத் தமிழ்	5 00
இலக்கியத் தமிழ்	5 00
தமிழ் எங்கள் உயிர்	4 00
வான் வழி வையை	2 00
இலக்கிய நாடகங்கள்	2 00

கா. கோவிந்தன் எம். ஏ.

தமிழர் தளபதிகள்	2 50
கலிங்கம் கண்ட காவலர்	2 50
கால்டுவெல் ஒப்பிலக்கணம்	15 00

நா. பார்த்தசாரதி

சொல்லின் செல்வம்	5 00
மொழியின் வழியே	2 50
கவிதைக் கலை	2 50

★

வள்ளுவர் பண்ணை

137, பிராட்வே : : சென்னை-1.

பிள்ளைக் குறும்பு

[கவிஞர் முடியரசன்]

காலைச் சுடர் தோன்று முன்னே—தூக்கம்
கலையாமல் கண்விழித் தழுவான்என் கண்ணே
பாலைக் கொடுத்திறக்கி விட்டால்—அந்தப்
பாலன் குறும்புக்கோர் அளவுதான் உண்டோ ?

வாயிலில் மாக்கோலம் போட்டுப்—பின்னர்
வந்தங்கு நோக்கினுள் நெஞ்சங் கொதிக்கும்
கோயிலில் பிள்ளையார் போலே—அந்தக்
கோலப் பொடிக்குள்ளே மூழ்கித் தவிப்பான்

நேரமோ வெகுநேரம் ஆச்சு—என்று
நிற்காமற் சிற்றுண்டி ஓடிச் சமைப்பேன்
காரமிள காயைக் கடிப்பான்—கத்திக்
கரைக்கவும் அரைக்கவும் விடாமல் கெடுப்பான்

சோருக்க விடுவானே பிள்ளை—அப்பப்ப
சொல்லமுடி யாதபடி தருவானே தொல்லை
கூருக்கி வைப்பானே எல்லாம்—சமையற்
கூடம்அவன் பயில்கின்ற போர்க்கூடம் ஆகும்

தண்ணீர்க் குடத்தையுங்கை பார்ப்பான்—மூடும்
தட்டெறிந் தேஅதில் தாளங்கள் சேர்ப்பான்
கண்ணீரைக் கொட்டிஅவன் நிற்பான்—தட்டுக்
காலிலே பட்டுத் தெறித்தால் துடிப்பான்

தாலாட்டித் தொட்டிலிலே போட்டால்—மெல்லத்
தலைதூக்கிச் சிரிப்பானே என்பாட்டைக் கேட்டால்
வாலாட்டித் திரிகின்ற சேட்டை—சொன்னால்
வயிறெரியும் கேளடிநான் படுகின்ற பாட்டை

என்றேனும் நூலொன் றெடுத்துப்—பார்த்தால்
என்னைப் பிடித்துத் துவைத்துக் கடிப்பான்
அன்றேஅந் நூலுக்கும் ஆயுள்— தீரும்
அவர்வந்து பிள்ளையை விடுத்தென்னைக் காய்வார்

கதவைத் திறந்தாலே போதும்—கண்டு
கனவோட்டம் ஓடியே தெருவிலே வீழும்
பதறிநான் ஓடிவரும் முன்னே—அந்தப்
பவழச்செவ் வாய்நிறையும் பெருவாரி மண்ணே

பஞ்சணையில் துயில்கொள்ளும் போது—என்றன்
பாலகனின் பால்வழியும் கண்ணிமையின் மீது
கொஞ்சிவிளை யாடுமெழில் கண்டால்—செய்த
குறும்பெல்லாம் ஓர்நொடியில் பாய்ந்தோடக் காண்பேன்

கேட்டிருக்கலாமா?

[பேராசிரியர் திருமதி. தே. தியாகராசன்]

கோவலன் மனையாள் கண்ணகி தன் கணவனை இழந்தபோது பெருந் துன்பமடைந்தாள். தன் கணவன் குற்றமற்றவன் என்பதனைக் காய்கதிர்ச் செல்வனே கூறக் கேட்டுத் தன் கணவன் குற்றமின்மையை உறுதிப்படுத்தப் பாண்டியனிடம் புறப்பட்டாள்.

"காய்சினந் தணிந்தன்றிக் கணவனைக்
கைகூடேன்
தீவேந்தன் றனைக் கண்டித் திறங்கேட்பல்
யானென்றாள்."

(ஊர்சூழ். 70-71)

தனது நெடுங் கயற்கண்ணினின்றும் புறப்பட்ட நீரைத் துடையாளாய் அரசன் செழுங் கோயில் வாயில் முன் சென்றாள்.

சென்றவள் வாயிலோனிடமே தன் கோபத்தைக் காட்டத் தொடங்கி விட்டாள். அறிவு கிழற்றுப் போகிய அறநினைவே அற்ற உள்ளத்தானாகிய அரசநீதியில்லா வறியோன் கோயிலைக் காப்பவனே! எனப் பேசுகிறாள்.

"வாயிலோயே வாயிலோயே
அறிவறை போகிய பொறியறு நெஞ்சத்து
இறைமுறை பிழைத்தோன் வாயிலோயே
இணையரிச் சிலம்பொன்று ஏந்திய கையள்
கணவனை இழந்தாள் கடையகத் தாளென்று
அறிவிப்பாயே அறிவிப்பாயே." என்றாள்.

(வழக். 24-29)

ஆத்திரத்திலும் ஒழுங்கு தவறாதவளாகத் தன் வரவை மன்னனுக்கு அறிவிக்கக் கூறுகிறாள். அவன் உள்ளே போய் அறிவித்த பின் மன்னன் அனுமதியையும் பெற்று உள்ளே போகிறாள்.

ஆனால் அவள் வந்த வேகத்தில் வாயிலோன் உள்ளே விடாது தடுத்திருந்தாலும் மீறிப் போயிருப்பாள். மன்னன் அவளைக் காணவிரும்பி யிராவிட்டாலும் கண்டேயிருப்பாள். அவன் இவட்குச் செவி சாய்க்க மறுத்திருந்தாலும் விட்டிருக்க மாட்டாள். ஏது வந்தாலும் வரட்டும் நீதியை எடுத்துக் கூறியே தீர்வேன் என்ற கருத்தில் வந்தவளைத் தடுத்து நிறுத்த யாரால் இயலும்?

அவையில் முதலில் பேசியவன் மன்னன் தான்.

"நீர்வார் கண்ணை எம்முன் வந்தோய்
யாரையோ நீ மடக்கொடியோய்."

(வழக். 48-49.)

இக் கேள்வியை மன்னன் **கேட்டிருக்கலாமா?**

இவள்தான் இணையரிச் சிலம்பொன்று ஏந்திய கையளாய்க் கணவனை இழந்தாளாய்த் தான் வந்திருப்பதாக மன்னனுக்கு அறிவிக்குமாறு வாயில் காப்போனிடம் கூறியனுப்பினாளே! அவனும் அவ்வாறு கூறினானே! அதிலிருந்தே தேவியின் களவு போன சிலம்பைத் திருடியதாகவுள்ள ஒரு கள்வனைத் தாம் கொன்றோமே அவனோடு இவள் தொடர்புடையாள் என மன்னன் தெரிந்து கொண்டிருக்க வேண்டாமா? தெரிந்துகொள்ளாமலே கேட்டான் என்றால் அது மன்னன் மேல் பிழையல்லவா? இல்லை, அவன் அறிந்து கொண்டே கேட்ட வினாவாகுமா? இல்லை, மற்றொரு சிலம்பைக் கொண்டு வந்தது யாராக இருக்கும் என்ற வியப்பில் கேட்டானா? என்ன வினாக் கேட்டான்? ஏன் கேட்டான் என விளக்கமாய்ப் பார்ப்போம். முதலில் 'நீர் வார் கண்ணை' என்றான். ஆம் அவள் 'நெடுங்கயற் கண் நீர் துடையா'மல்தானே வந்தாள்? ஆகவே அக் கண்ணீருக்குக் காரணம் கேட்டானா பாண்டியன்? குடிமக்கள் கண்ணீர் துடைப்பது தன் கடமை யென்ற கருத்தில் கேட்டானா? இரண்டும் இருக்கலாம்.

அடுத்து, 'எம்முன் வந்தோய்' என்றான். என்னையே நாடி என் அவைக்கே துணிந்து வந்து விட்ட பெண்ணே! என்ற பொருளிலா கேட்டான்? கேட்க இடமுண்டு. உன் துயர் தீர்ப்பேன் என்ற அவன் விடையை எதிர் பார்க்கலாம்.

அடுத்து, 'யாரையோ நீ' என்றான். இவ்வாறு கேட்டிருக்கலாமா? அவள்தான் கணவனை இழந்தவள், கையில் தனிச் சிலம்பொடு வந்தவளாயிற்றே? அக்கொலையுண்டான் மனையாள் என ஏன் அவனுக்குப் புரியவில்லை? இது கூடவா அவனுக்குத் தெரியவில்லை? தெரியாவிட்டால் இவன் என்ன மன்னன்? தெரிந்தும் கேட்க உரிமையும் முறையுமுண்டு மன்னனுக்கு! ஆனால் தேவி சிலம்பைக் களவாடியதாகக் கருதப்பட்ட ஒருவன் மனைவி என்றுதான் அவன் அவளைக் கருத இடமுண்டே தவிர அவளைப் பற்றி அவனுக்கு வேறென்ன தெரியும்? கள்வன், இவன் ஆகிய இருவரையும் பற்றித் தெரிந்து கொள்ளும் ஆவலில், தேவையில் அவன் அக் கேள்வி கேட்டிருக்கலா மன்றோ? அன்றியும் அக் கள்வனுக்கு நீ மனையாள் என்பது சரி, நீ எதற்காக வந்தாய்? கள்வனோடு தொடர்புடையாரும் பெறத் தகும் தண்டனையை நீயறியாயா? உன் போன்றார் தப்பித்துக்கொள்ள வழி தேடல் இயற்கையாயிருக்க நீ உன்னையே தண்டனைக்கு ஒப்புவிக்க வந்திருக்கும் காரணம் என்ன? என்று கருதிக் கேட்டிருக்கலாமா? இவ்வாறு நடப்பது விந்தை, என்ன ஒன்றும் விளங்கவில்லையே என்பதாலும் கேட்டிருக்கலாம்.

அடுத்து, 'மடக் கொடியோய்' என்றான். இளமை பொருந்திய கொடி போன்றவளே என்று அவன் கேட்டதேன்? அப்படிக் கேட்டிருக்கலாமா? இவள் இளமை மிக்கவள், கொடி போன்றவள். எனவே கேட்டான். அவை மட்டுமா? நீர் வார்கின்ற கண்ணையுடையவள், அக் கண்ணீரைத் தான் துடைக்க வேண்டும். தம்முன் வந்தவள், எனவே நீதி வழங்கி, நிகழ்ந்தது கூறித் தன் கடமையைத் தான் நிறைவேற்றினதாக விளக்க வேண்டும். கணவனை இழந்தவள், இழந்ததற்குக் காரணம் அவன் குற்றவாளி என்பதால் எனக் கூற வேண்டும். இவ்வளவும் இருக்கட்டும்; கணவனை இழந்ததால் இளமை பொருந்திய கொடி போன்றன்றோ விளங்குகிறாள்? பிழை செய்வதால் தான் மட்டுமன்றித் தன்னைச் சார்ந்தார்க்கும் நேரும் துன்பத்தைப் பார்த்தாயா? கொழு கொம்பற்ற கொடிபோலல்லவா சார்ந்தவர்கள் நிலையுமாகும் என்ற பொருளில் கேட்டு விட்டானோ? தான் மன்னன், தந்தை போன்று குடிமக்களுக்கு உதவவேண்டுமே, அந்த முறையில் தான் ஆதரவில்லா அவளுக்கு என்ன உதவி செய்ய வேண்டும் என்ற கருத்தில் கேட்டிருக்கலா மல்லவா? நோக்கம் நல்லதுதான். கூறிய சொற்களும் அவ்வாறே! ஆனால் அவன் அவ்வாறு கேட்டிருக்கலாமா?

மன்பதை பழிதூற்ற மன்னவன் தவறிழைப்ப அதனால் இவள் கண்ணீரைப் பெருக்கியவனே இவன்தானே? மண்மகளும் அறியா இவளது வண்ணச் சீறடியை இப்போது ஊரெல்லாம் புலம்பிச் சுற்றிவரச் செய்து அரசன் அவைக்கு ஏற வைத்தவனும் - தன் முன் அழைத்தவனும் — இவன் தானே? கணவனை இழந்தாள் ஆக்கியவனும் இவன் தானே? இவற்றிற்கு மேலே மடக்கொடியோய் என்றழைக்கவும் தகுதியுண்டோ இவனுக்கு? இவளைக் கொழு கொம்பின்றித் தவிக்க வைத்தவனே இவனல்லவா? எனவே இவ்வாறு கேட்டது பொருத்தந்தானா? ஓரளவிற்குப் பொருத்தமில்லை.

எனவேதான் கண்ணகி அரசன் கூற்றைப் புரிந்து கொண்டு அரசவை என்பதையும் பொருட்படுத்தாது சீறிப்பாய்ந்து 'தேரா மன்னா' என்று அவன் ஆராய்ச்சியற்ற தன்மையைத் தொடக்கத்திலேயே இடித்துக் கூறத் தலைப்பட்டுவிட்டாள். இச் சொற்கள் மரபிற்கு ஒவ்வாத மரியாதையற்ற சொற்களாயிற்றே இவ்வாறு இவள் கேட்டிருக்கலாமா? என வினா எழும். ஆனால் 'தேரா' என்பது மன்னனுக்கு அடை மொழியாக நின்று பொருள் தருவதால் மரபு கெடவில்லை. "என் தெய்வமான கொழுநனையே இழந்தேன். நீதி தவறியவன், என் கொழுநனைக் கொன்றவன், என்னைக் காப்பாற்றப் போகிறானாமா? வெகு அழகு! நடப்பது நடக்கட்டும்; இவனுக்குப் புத்தி புகட்டுகிறேன்" எனப் பேசினாள்! இவன் எவற்றைக் கேட்கக் கூடாதோ அவற்றைக் கேட்டதால் அவள் பதிலும் அவ்வாறு வந்து விட்டது!

'சொல்லுக சொல்லிற் பயனுடைய
சொல்லிற் பயனிலாச் சொல்'. [சொல்லற்க

என்றார் வான்புகழ் வள்ளுவர். சொற்களைச் சொல்லுங்கால் இரண்டைக் கவனிக்க வேண்டும். பயனுடைய சொற்களைச் சொல்லவும் வேண்டும்; சொல்லா விட்டாலும் பிழை. அவ்வாறே பயனற்ற சொற்களைக் கூறவுங் கூடாது; கூறினாலும் பிழை. இவள்தான் சொல்லின் செல்வியாயிற்றே! எக்கூற்றை

எந்நேரம் பேச வேண்டுமென அறிந்தவ ளாயிற்றே! சிறுமுதுக் குறைவியன்றோ? பயனுடைச் சொல்லைத் தக்க சமயம் கூறிவிட்டாள். அவள் கேட்டது முற்றும் சரியானதே, இதனை, அவள் எடுத்துரைத்த வழக்கின் பகுதிகள் மேலும் வலியுறுத்துவன.

ஆனால் நற்றிறம் படராக் கொற்கை வேந்தனன்றோ பிழைமேல் பிழை செய்தான்? தன் வாயால் கோவலன் உயிரைப் பறித்தான். இப்போது இவளிடம் வசவும் வாங்கிக்கொண்டானே! பேச அறியாப் பேதையோ இவன் என்றெண்ணத் தோன்றும். அப்போது வேறொன்றை மறத்தல் கூடாது.

அதாவது, தேவியின் சிலம்பு போன்ற சிலம்பை உடையவன் '**கோவலன்**' என்பதை அவனறியான். ஏசாச் சிறப்பின் இசை விளங்கு பெருங்குடி மாசாத்து வாணிகனையும் அவன் மகன் கோவலனையும் பற்றி ஒருவேளை அவனறிந்திருக்கக் கூடும். காரணம் அவர்களது வாணிகக் குடிப்பெருமையும் வாழ்க்கைத் தரமும் ஆகும். எனவே தெரிந்திருந்தால் கோவலனைக் கள்வன் என்று ஐயுற்றிருக்க மாட்டான். அதற்குப் பதில் அவனையழைத்து மரியாதை செய்து வேண்டுமுதவி செய்திருப்பான். பொற் கொல்லனும் பிடிபட்டிருப்பான். ஆகவே 'யாரையோ நீ' என்று அவன் அவளது வாழ்க்கை வரலாற்றை அறிய முற்பட்டதில் பிழையில்லை. முன்பு தான் கொலை செய்யச் சொன்ன கள்வன் மனைவி யவள் தான் தெரிந்து கொண்டு விட்டான். ஆனால் இருவரது ஊர், பேர் இவை தெரிதல் வேண்டுமே! மேலும் தான் தவறு செய்து அதை இடித்துரைக்க ஒரு பெண் வருவாளென அவன் எதிர்பார்த்திருக்க மாட்டான். எனவே யாரையோ நீ என்றான்.

இவையெல்லா மொருபுற மிருக்க, 'நீர் வார் கண்ணை'யைக் கண்டதுமே ஓருண்மை அவனுக்குப் புலனாகிவிட்டது.

'அல்லற்பட் டாற்றாது அழுத கண்ணீ
செல்வத்தைத் தேய்க்கும் படை' [ரன்றே

என்ற பொய்யா மொழியை மிக நன்றாக அறிந்தவன் அவன். எனவே அவள் கண்ணீர் அவனைக் கொன்றுவிட்டது. ஓ! நாம் தப்ப வழியில்லை என்றுணர்ந்து விட்டான். அதன் காரணமாய்—தன் உயிரைப் பெரிதாய் மதியா விடினும்—அடுத்தடுத்து வந்த சொற்கள், அவன் பேசத் தெரியாமல் தடுமாறியதால் வந்த சொற்களாயின. வாய் குழறிவிட்டது. காவி யுகுநீரும் கையிற் றனிச்சிலம்பும் ஆவி குடிபோன அவ்வுயிரும் கண்டஞ்சிக் கூடலான் கூடாயினான். ஆம் கையில் தனிச் சிலம்பும் **கண்ணீரும்** வையைக் கோன் கண்டளவே தோற்றான். பின் கண்ணகிக்கும் இவனுக்கும் நடந்த வழக்குரைத்தல் நாடக வழக்கின் தனிப்பெருஞ் சிறப்புப் பற்றியாம்.

தமிழ் தழைக்க!

தமிழ் எழுத்தாளர் சங்கத்திற்கு

எமது உளம் நிறைந்த வாழ்த்துக்கள்!

★

ஏ. சி. சுவாமி அண்ட் சன்

கட்டிடத்திற்குத் தேவையான பெயின்ட்டுகள், ஆர்ட்வேர், ரேடியோ, தையல் இயந்திரம், சைகிள் வாணிகம் செய்வோர்.

119, திருவொற்றியூர் நெடுஞ்சாலை,

சென்னை—21 தமிழ் நாடு

இரவு

[கவிஞர் வாணிதாசன்]

அந்தியிலே மேற்றிசையில் தொடுவானப் பரப்பில்
அழகூட்டும் முகிலினங்கள்! அடர்ந்தபெரு மலைகள்
செந்தீயில் வெந்தவியும்! சிலுசிலுக்கும் குளிர்கால்!
சிற்றோடை சலசலக்கும்! திசைமறையும் பரிதி!
பொந்திருந்து குரல்கொடுக்கும் கூகையினம்! அலர்ந்த
புதுப்பூக்கள் மணம்பரப்பும்! புள்ளடையும் புதரில்!
மந்தைமணி ஒலிகேட்கும்! குளம்படிந்த எருமை
வந்தடையும் கொட்டகைக்கு! வந்தடையும் இரவே!

வீட்டிடையில் ஒளிஅடங்கும்! மக்கள்ஒலி அடங்கும்!
விரிகடலில் பேரலைகள் கரைமோதி அடங்கும்!
கூட்டிடையில் இசையடங்கும்! வண்டடங்கும் மலரில்!
குயிலடங்கும் பழத்தோப்பில்! மயிலடங்கும் புதரில்!
காட்டிடையில் விலங்கடங்கும்! கலையடங்கும் பிணையில்!
கார்எருமை கொட்டகையுள் கால்நீட்டி அடங்கும்!
மேட்டிடையில் வான்பார்க்கும் சிறுகுடிசை உழவர்
வெறுவயிற்றுப் பசியடங்க அடங்கும்கண் இமையே!

ஊர்உறங்க உறங்காதார் உளர்என்ப துரைக்கும்
ஊளையிடும் நரிக்குலமும் நாய்க்குலமும்! குளத்து
நீர்உறங்க உறங்காத நீள்குன்றத் தருவி
நெளிந்துவரும் பாம்பைப்போல் இழிந்துவரும் இடுக்கில்!
கார்உறங்க உறங்காது கண்விழிக்கும் உடுக்கள்!
களவுசெய்வோர் பொருள்காப்போர் காதல்செய்வோர் இரவில்
ஊர்உறங்க உறங்காரே! உலகறிந்த நிகழ்ச்சி!
ஒண்கடலும் உறங்காமல் ஒலமிடல் அழகோ!

வில்லொத்த புருவத்தார் கன்னியரின் அருகில்
விடியளவும் விழித்திருக்கும் சிறுவிளக்குத் தனித்தே!
பல்லொத்த முருங்கைப்பூ பாய்விரிக்கும் தெருவில்!
பரணேறும் வெண்பூனை! எலியோடிப் பதுங்கும்!
இல்லடங்கா திருக்கின்ற இளங்காளை எருமை
இரவினிலே ஒன்றிரண்டு கட்டுகயி றறுத்தே
கொல்லையிலே பயிர்மேயும்! கொட்டகையைக் குறுகும்!
கொடுமைக்கும் அழிவுக்கும் நீபொறுப்பா இரவே!

காக்கைநிற நள்ளிரவே! கதிர்இல்லா உலகே!
கட்டுடலின் சோர்வகற்றி உயிர்ஊக்கும் மருந்தே!
சேக்கையிலே கண்மூடிச் சீராட்டும் திருவே!
செயல்மறக்கும் உடல்மறக்கும் இடம்மறக்கும் இனிமைப்
போக்களிக்கும் நற்றாயே! உனையாரே விரும்பார்?
பொதுமைஎனப் புகல்கின்றார்; ஆனாலும் உனைப்போல்
காத்தளிக்க வல்லாரோ? வேற்றுமையைக் களைந்தே
கைகொடுக்கும் நற்றுணையே! வாழியகார் இரவே!

அருந்தமிழ் மறையும் ஆல்பிரட் சுவைட்சரும்

[ந. சஞ்சீவி எம். ஏ.,
தமிழ் விரிவுரையாளர், சென்னைப் பல்கலைக் கழகம்]

அண்மையில், ஆங்கில மொழியில் வெளியிடப் பெற்றுள்ள உலகப் புகழ்பெற்ற 'என்சைக்கிளோபீடியா பிரிட்டானிக்கா' (Encyclopaedia Britanica) என்னும் பெருந்தொகுதியின் 1960 ஆம் ஆண்டு மறுபதிப்பில் 'தமிழர்' பற்றிய கட்டுரையைப்[1] படிக்க நேர்ந்தபோது என் நெஞ்சம் திடுக்குற்றது. அருமைத் தமிழின் தொன்மை பற்றியும் தன்மை பற்றியும் அறியாது ஆராயாது அம்மொழிக்கு இழிவுதரும் கருத்துக்களை மிகப் பலவாகத் தாங்கியுள்ளது ரெயின் கோல்டு ரோசட்டு (Reinhold Rost) என்ற ஒருவரும் **பெயர் தெரிவிக்க விரும்பாத மற்றொருவரும்**[2] சேர்ந்து எழுதியுள்ள அக் கட்டுரை.[3] அதைப் படித்தபோது தமிழகம் தந்த உலகப் புகழ் பெற்ற தலைமை எழுத்தாளராகிய திருவள்ளுவர் பெருமையைக்கூடச் சரியாக உணராமல் எழுந்த அக்கட்டுரையைப் பற்றிய கண்டனக்குரல் தமிழ் நாடெங்கும் எழாதா என்று என்னுள்ளம் ஏங்கியது. தமிழ் மக்களைத் தலைகுனியவைக்கும் வகையில் அக்கட்டுரையில் பொதிந்துள்ள கருத்துக்கள் சில வருமாறு:—

1. 'தமிழர்' என்ற சொல் வடமொழி மூலத்தை உடையது. 2. தொல்காப்பியம் எட்டாம் நூற்றாண்டு நூல். 3. ஏறத்தாழ எட்டாம் நூற்றாண்டிலேயே தமிழ் இலக்கியங்கள் தோன்றின. 4. ஒன்பது அல்லது 10 ஆம் நூற்றாண்டு முதல் 13 ஆம் நூற்றாண்டுவரை உள்ள காலமே தமிழ் இலக்கியத்தின் பொற்காலம். 5. சைவ மறுமலர்ச்சிக் காலமாகிய 13, 14 ஆம் நூற்றாண்டுகளில் தோன்றிய நூல்களே மாணிக்கவாசகன் செய்த திருவாசகமும் சம்பந்தன், சுந்தரன், அப்பன் ஆகிய மூவரும் செய்த தேவாரமும். 6. திருக்குறளுக்கு முன்னே இயற்றப்பட்ட நூல் நாலடியார்.

இந்த 'மணிமணி'யான கருத்துக்களை உதிர்த்திருக்கும் அக்கட்டுரையில் சங்க இலக்கியங்கள் சிலப்பதிகாரம் மணிமேகலை பற்றிய ஒரு சிறு குறிப்புக்கூட இல்லை.

திருவள்ளுவர் பற்றியும் திருக்குறள் பற்றியும் அக்கட்டுரை கூறுவதெல்லாம் இது தான்[4] :—

> 'திருவள்ளுவன் செய்த குறள் தமிழ்ப் பாவுலகிலேயே மிகவும் அழகியது. பிராமண எதிர்ப்புணர்ச்சி வயப்பட்ட மரபு வள்ளுவரை ஒரு பறையன் என்கிறது. அந்நூல் அறம், பொருள், இன்பம் பற்றி 1330 பாக்களைக் கொண்டது'

சிறப்பாக மேற்கண்ட பகுதியைப் படித்த போது பல்லாண்டுகட்கு முன்பே யான் படிக்க நேர்ந்த பெரியார் ஆல்பிரட் சுவைட்சர் எழுதிய 'இந்தியச் சிந்தனையும் அதன் வரலாறும்' (Indian Thought and Its Development) என்னும் அரிய ஆராய்ச்சி நூல் என் நினைவுக்கு வந்தது. அதில் அருந்தமிழ் மறைபற்றி அவர் குறிப்பிட்டுள்ள ஒரு சில பிழையான செய்திகள் தவிர பொன்னான கருத்துக்கள் கண்முன் வைர ஒளி வீசின.

ஆல்பிரட் சுவைட்சர் மருத்துவ அறிஞர்; இசைக் கலைஞர்; மெய்யறிவியல் புலவர்; பன்னூட்டுணர்வு படைத்த சான்றோர்; அனைத்துயிரையும் போற்றும் பேரருளாளர். 'மன்னுயிர்க்கு அன்பர்' என்ற தலைப்பில் இச் சான்றோர் பற்றி நம் செந்தமிழ்க் காவலர் டாக்டர் அ. சிதம்பரநாதனார் அவர்கள் அழகுற எழுதியுள்ள வாழ்க்கை வரலாற்று நூல்[5] இந்த ஆண்டு பள்ளியிறுதித் தேர்வுக்குச் செல்லும் பல்லாயிரம் தமிழ் இளைஞர்களுக்குப் பாடநூலாக அமைந்து இன்பமும் பயனும் வழங்கியுள்ளது. இத்தகு பெருமை பலவும் படை

ஆல்பிரட் சுவைட்சர் எழுதியுள்ள 'இந்தியச் சிந்தனையும் அதன் வளர்ச்சியும்' என்ற அரிய நூல் வேதகால முதல் தாகூர் காலம்வரை வளர்ந்துள்ள இந்தியச் சிந்தனையின் வரலாற்றை நடுநிலை பிறழாது ஆராயும் விழுப்பம் உடையது. இந்தியக் குடியரசுத் துணைத் தலைவர் டாக்டர் இராதாகிருட்டினன் அவர்களாலும் போற்றப்பெறும் பெருமை வாய்ந்தது.[6] பல ஆண்டுகட்கு முன்பே 'ஜர்மானியர் கண்ட வள்ளுவர்' என்ற தலைப்பில் பேராசிரியர் தெ. பொ மீனட்சிசுந்தரனர் அவர்களால் தமிழ் மக்களுக்கு அறிமுகம் செய்யப் பெற்றது.[7]

இவ்வாறு பலவற்றானும் புகழ் நிறைந்த உலகப் பெரியார்-நோபல் பரிசு பெற்ற பேரறிஞர் ஆல்பிரட் சுவைட்சர் அருந்தமிழ் மறை பற்றித் தமது நூலில் ஐந்து பக்கங்களில் தொடர்ந்து தெரிவித்துள்ள அரிய கருத்துக்கள் சில வருமாறு :—

'குறளுக்கும் மனுநீதிக்கும் இடையே தான் எவ்வளவு வேறுபாடு!......பின்னதில் (மனுநீதியில்) பிராமணிய செல்வாக்கின் விளைவாக 'உலகமும் வாழ்க்கையும் உறைவதற்கும் வாழ்வதற்குமே' என்ற கருத்து 'உலகமும் வாழ்க்கையும் மாயம்' என்ற கருத்தோடு ஒருவாறு பொறுத்துக் கொள்ளப்படுகிறது. ஆனால் குறளில் 'உலகமும் வாழ்க்கையும் மாயம்' என்ற கருத்து வானத்தில் தொலைவில் உள்ள ஒரு முகிலாகவே காட்சி தருகிறது. நூலின் முடிவாக உள்ள 250 குறட்பாக்களில் காதல் போற்றப்படுகிறது.........பிராமணியத்திலும், புத்த மதத்திலும், பகவத் கீதையிலும் 'பயன்கருதி அறம் செய்தல்' என்ற கருத்து ஆட்சி செய்வதுபோலக் குறள் கூறும் அறங்களில் அது ஆட்சி செய்யவில்லை. அறம அறத்தின் நலங்கருதியே செய்யப்பட வேண்டும் என்ற தெளிவை நாம் இந்த நூலிலேயே கண்டுவிடுகிறோம்... .வாழும் வாழ்க்கைக்கு 'விதியைத்தால் வாழவேண்டியுள்ளது' என்று வற்புறுத்தப்பெற்ற நிலையிலும் வேண்டா வெறுப்புடனும் பகவத் கீதை காரணம் கூறும் போது குறளோ அவ்வாறு வாழ்வதன் இன்றியமையாமையைப் போற்றுகிறது. அறவாழ்வினை வாழ்தல் என்ற இந்தக் கருத்து எவ்வளவு மேம்பாடு உடையது! குறள் வழி

தமிழகத்தின் தலைசிறந்த அறிஞர்களின் நூல்களைத்

தொடர்ந்து வெளியிடும்

நல்வாய்ப்புப் பெற்ற நிலையம்

★

பாரி நிலையம்

59, பிராட்வே : : சென்னை - 1.

கடமை என்பது பகவத்கீதையில் சொல்லப்படுவதுபோலச் சாதியின் கட்டளையால் செய்யப்படுவது அன்று—'நன்மை எல்லாம்' குறித்தே நாடப்பெறுவது.........இந்திய மககள் வாயினின்றும் எதிர்பார்க்க முடியாத 'முயறசி புரிவதில் இன்பம்' பற்றிய கருத்துக்கள் குறளில் உள்ளன. அவை அக்குறளில் உள்ள 'உலகமும் வாழ்வும் உறைதற்கும் வாழ்வதற்கும் உரியன' என்ற கருத்துக்கு அரண் செய்யும் வகையில் அமைந்துள்ளன............இதனல் கிறித்துவ நூற்றாண்டுத் தொடரின் தொடக்கத்திலேயே இத்தகு இயற்கையான நீதிக் கருத்துக்களும்,வாழ்க்கை வாழ்வதற்கே என்ற கொள்கையும் இந்திய மக்களிடையே நிலவி இருந்தன என்பதை அதுபற்றிப் பிராமணியம் —புத்த மதம்-பகவத்கீதை இந்து மதம்- ஆகியன ஒன்றுமே கூறுவிடினும் நம்மால் உணர முடிகிறது.........உலக இலக்கியத்துள்ளேயே இவ்வளவு உயர்ந்த மெய்யறிவுடைய நீதிக் கருத்துக்கள் (குறள் மொழிகள் போன்றன) இருப்பது மிக அருமை.[9]'

இக்கருத்துக்கட்கு எல்லாம் அரண் செய்யும் வகையில் முப்பத்து மூன்று குறள் மொழிகளை[10] தமது கட்டுரையில் ஆல்பிரட் சுவைட்சர் சான்றுகளாய்க் காட்டியுள்ளார். ஆல்பிரட் சுவைட்சரின் நூல் முதன்முதல் 1935 ஆம் ஆண்டில் ஜெர்மன் மொழியில் வெளிவந்தது. அதன் ஆங்கில ஆக்கம் அடுத்த ஆண்டாகிய 1936 ஆம் ஆண்டிலேயே வெளிவந்தது. அதன் மறுபதிப்பு 1951 ஆம் ஆண்டில் வெளிவந்துள்ளது[11]. இருபத்தைந்து ஆண்டுகளாக - கால் நூற்றாண்டாக – வாழ்வு பெற்றுள்ள உலகப் பேரறிஞர் ஒருவர் நூலில் உள்ள கருத்து ஆங்கிலக் கலைக்களஞ்சியத்திற்கு 1960 ஆம் ஆண்டில் மறுபதிப்புக் கொண்டு வந்துள்ளவர்கள் கண்களில் படவில்லை. ஆம். அவர்கள்மேல் குறை இல்லை; குற்றம் இல்லை. தமிழ் மக்களாகிய நம்முள்ளேயே எத்துணைப் பேர் ஆல்பிரட் சுவைட்சர் கூறிய ஆய்வுரையைக் கண்டோம்? - காட்டினேம்?

அடிக் குறிப்புக்கள் :—

1. Encyclopaedia Britanica (1960)-Vol. 21. P. 772-4
2. ,, Vol. I-P. CXI & XXXII
3. 4 – அடிக்குறிப்பு எண் 1 காண்க.
5. பேராசிரியர் டாக்டர் அ. சிதம்பரநாதன் - மன்னுயிர்க்கு அன்பர்(1958) தென்னாட்டுப் பதிப்பக வெளியீடு.
6. 'Indian Thought and its Development' என்ற நூலின் அட்டையில் உள்ள அறிமுகவுரை காண்க.
7. பேராசிரியர் தெ. பொ. மீனாட்சிசுந்தரனார்-நீங்களும் சுவையுங்கள். (1954) வசந்தம் பதிப்பகம் வெளியீடு—பக்கம் 1—10.
8. அடிக்குறிப்பு எண் 6இல் குறிக்கப்பெற்ற நூல்—பக்கம்—200—205.
9. இச் சொற்றொடர்கிலே பேராசிரியர் டாக்டர் மு. வ. அவர்களால் 'Indian Literature' என்ற நூலுள் தமிழ் மொழி – இலக்கியம் பற்றிய கட்டுரையிலும் மேற்கோளாய்க் காட்டப்பெற்றுள்ளது. அந்நூல் பக்கம்—22-பார்க்க.
10. திருக்குறள் எண்கள் (ஆல்பிரட் சுவைட்சர் நூலுள் அமைந்துள்ள முறைப்படி): 222, 211, 81, 212, 619, 630, 72, 78, 79, 103, 226, 241, 216, 757, 1007, 105, 92, 999, 162, 108, 159, 121, 628, 298, 578, 874, 973, 319, 594, 1024, 931, 782, 1032.
11. 'Indian Thought And Its Development' என்ற நூலின் IV–ஆம் பக்கம் பார்க்க.

மானம் காத்த மங்கை

[வல்லே பாலசுப்பிரமணியம், பி. ஏ.]

'ஒன்பதில் குரு' என்பார்கள் ;
ஒன்பதில் எனக்கு நேர்ந்த
துன்பமும், அதைத்தொடர்ந்த
துணுக்குறு நிகழ்ச்சிதானும்,
அன்பர்கள் அறியஇங்கே
அறிவித்து விடுகின்றேன் ; யான்
இன்பமாய்ப் *பணிசெய்திட்ட
இடம்நுங்கம் பாக்கமாகும்.

ஒருபகல் சென்னேக் கந்த
கோட்டத்தே ஒருவர்க்காண
பெருகிய காதலோடும்
**பேருந்து நிலேயில்நின்றேன் ;
ஒருபெரும் இரைச்சலோடும்
***ஒன்பதெண் வண்டிவந்து
இரும்புகை உமிழ்ந்துநிற்க
இடர்ப்பட்டே ஏறிக்கொண்டேன்.

ஏறியபின்றை, வண்டி
உச்சியில் தொங்கும்தோல்வார்
மாறிலோர் கரத்தால்பற்றி
மகிழ்நட மாடும்போது
சீறிய குரலிஞன் ஓர்
கண்டக்டர், 'செல்வதெங்கே ?
கூறிடும்' என்ன, யானும்
'பாய்க்கடை' எனக்கழன்றேன்.

கழன்றபின், கையைப்பையில்
விட்டனன் ; கருந்தேள்கொட்டி
அழன்றது போன்றதாமோர்
அவலத்தால் துடித்துப்பின்னர்,

பழம்பணப் பையை வீட்டில்
வைத்துவந்ததை யுணர்ந்தேன் ;
இழிவிலா அக்கண்டக்டர்
'இறங்(கு)'என்றே ஆணேயிட்டான்.

என்நிலே அங்கிருந்தார்
யாவரும் அறிந்தாரில்லே ;
'சென்டில்மன்–திருடன், பார்' என்(று)
என்னேயே சொல்லிக்காட்டப்,
பின்வரிசையி லிருந்தோர்
பெண்குரல் மேலெழுந்து,
'நன்(று)இவர் இறங்கவேண்டா ;
நான்பணம்தருவேன்' என்ன,

இஞ்சியைத் தின்றுவிட்ட
குரங்கென அங்கிருந்தோர்
பஞ்சணை மெத்தையின்மேல்
அமர்ந்து பல்இளித்திருக்கக்,
கிஞ்சுக மொழியிஞள் அக்
கோமளவல்லி என்னேக்
கெஞ்சவே கடைக்கண்ணேக்கிக்
குறியிடத் திறங்கிச்சென்ருள்.

ஆர்பெற்றமகளோ ? அன்(று)என்
மானத்தைக் காத்த மங்கை ;
பார்அவள் பாதம்தீண்டப்
பாக்கியம் செய்ததம்மா !
சீர்மிகு கவிஞன் எங்கள்
பாரதி கனவுகண்ட
பேர்மிகு புதுமைப்பெண்ணே
அவள் எனுந் துணிவுகொண்டேன்.

---

* Government Translators Department, D.P.I.'s Office Compound.
** பேருந்துநிலே—Bus stand.
*** Route No. 9 Bus.

கருத்துச் சுவை மிகுந்த கவின்மிகு ஏடுகள்

தென்னாட்டு வீரர்கள்

ஆசிரியர் : வித்துவான் வை. சுப்பிரமணியன். இராஜாதேசிங்கு, கட்டபொம்மன் ஆகிய மாவீரர்களின் வாழ்க்கை வரலாற்றை விளக்கும் நூல் *விலை. ரூ. 0-87*

தென்னிந்தியப் பெருமக்கள்

ஆசிரியர் : புலவர் எஸ். எஸ். அருணகிரிநாதர். கொடைவள்ளல் பச்சையப்பர், நீதிபதி முத்துசாமி ஐயர் ஆகியோரின் வரலாற்றை விரித்துரைக்கும் ஏடு. *விலை. ரூ. 0-75*

தமிழ்த் தென்றல் திரு. வி. க.

ஆசிரியர் : த. சே. உமாபதி, திரு. வி. கலியாணசுந்தரரின் வாழ்க்கைச் சிறப்புகளை எடுத்துரைக்கும் சுவடி. *விலை. ரூ. 0-87*

பூம்புகார்

ஆசிரியர் : புலவர் ப. திருநாவுக்கரசு. பழந்தமிழ் நாட்டுத் துறைமுகமாகிய புகார் நகரம் பற்றிய ஏராளமான செய்திகளை எடுத்துக் கூறும் நூல். *விலை. ரூ. 0-87*

நாடும் மக்களும்

ஆசிரியர் : துரை பழனிவேல். எகிப்து, பெர்சியா, சீனா, ஜப்பான் ஆகிய நாடுகளைப் பற்றியும் அந்நாட்டு மக்களைப் பற்றியும் தெளிவாக விளக்கும் நூல். *விலை. ரூ. 1-00*

தொண்டை நாட்டு மன்னர்

ஆசிரியர் : புலவர் கா. கோவிந்தன். தொண்டை நாட்டு வேந்தர் ஐவர்பற்றிய அரிய விளக்க நூல். *விலை. ரூ. 1-00*

கிள்ளிவளவன்

ஆசிரியர் : தாமரைக்கண்ணன். ஐந்து அழகிய ஓரங்க நாடகங்களின் தொகுப்பு. *விலை. ரூ. 1-25*

★

அஸோஸியேஷன் பப்ளிஷிங் ஹௌஸ்
94-95, புதுத்தெரு, சென்னை-1

எமது புதிய நூல்கள்

★

		விலை ரூ. காசு
பழந்தமிழர் வாழ்வும் வளர்ச்சியும் —*சாமி. சிதம்பரனார்*	*மலிவு*	3 50
	பரிசு	5 00
புதுக்குறள்—*சாமி சிதம்பரனார்*	*மலிவு*	1 50
	பரிசு	2 25
சித்தர்கள் கண்ட விஞ்ஞானம் தத்துவம்—*சாமி சிதம்பரனார்*	*மலிவு*	3 00
	பரிசு	4 50
தமிழ்-ருஷ்ய *அகராதி* —*அ. மோ. பியாதிகோர்ஸ்கி* —*ஸெ. கே. ருதின்*		4 25
கட்டபொம்மன் கதைப்பாடல் —*நா. வானமாமலை,* M.A.,L.T.,	*மலிவு*	3 00
	பரிசு	5 00
தாகூரின் கவி உள்ளம் —*கே. ராமநாதன்*	*மலிவு*	1 00
	பரிசு	1 75
இதுவா நாகரீகம் —*மைகேல் மதுசூதன் தத்தர்*		1 50
உக்ரேனியக் கதைகள் —*கோட்ஸ்யுபின்ஸ்கி*	*மலிவு*	3 00
	பரிசு	6 50
இலக்கியம் (விமர்சனக் கட்டுரைகள்) —*மாக்சிம் கார்க்கி*	*மலிவு*	3 00
	பரிசு	7 00

★

என். சி. பி. எச். (பிரைவேட்) லிட்.
புத்தகம் வெளியிடுவோரும், விற்பனையாளரும்
6, நல்லதம்பி செட்டித் தெரு, சென்னை-2.
199, *மவுண்ட்ரோட், சென்னை* 2.
8 G, *பைகிராப்ட்ஸ் ரோட், சென்னை* 5.
10, *மேலகோபுரவாசல், மதுரை.*
19-27, *பெரிய கடை வீதி, கோயமுத்தூர்.*

நாடகத்தில் தமிழ்நடை

(அவ்வை தி. க. சண்முகம்)

"அகோ கேளுங்கள் சபையோர்களே, இப்படியாகத்தானே அரிச்சந்திர மகாராஜனாகப்பட்டவன் நாடு நகர முதலானதுகளை விசுவாமித்திர முனியிடம் கொடுத்துவிட்டுக் காசிக்கு வரும் வழியில் அநேக துயரடைந்து காசிநகர்க் கோபுரந் தோற்றக் கண்டு தன் பத்தினிக்குத் தெரிவித்துக் கரங்கூப்பித் தொழுகிற விதங் காண்பீர்கள் கனவான்களே!..."

இது பழங்கால நாடக வசனம். இப்படிச் சொல்வதற்குப் பொது வசனம் என்று பெயர். நாடகக் கதை விளக்கத்துக்காகக் கட்டியக்காரன் இதைப் பேசுவான். இவ்வாறு பேசப்படும் நீண்ட பொது வசனங்களைத் தவிரப் பெரும்பாலும் எல்லாம் பாடல்கள்தாம். பாடலும் ஆடலும்தான் நாடகம். பண்டைக் காலந்தொட்டு நாடகத்தமிழ் இசைத் தமிழோடு சேர்ந்தே வளர்ந்து வந்திருக்கிறது.

அபூர்வமாகச் சில சமயங்களில் பாடலின் கருத்தையொட்டி வசனமாகவும் சில வரிகள் பேசப்படுவதுண்டு.

"கேளாய் பெண்ணே சந்திரமதி, லோகத்திலுள்ளவர்கள் செய்யும்படியான சகல பாவங்களையும் போக்கத் தக்கதாகிய திவ்ய மகிமை பூண்ட இந்தக் காசி நாடு வந்தோம் பாராய் பெண்ணே!"

அவ்வளவுதான். உடனே,

"கரங்குவிப்பாய் மயிலே
இதோ காசி
காணுது பார் குயிலே"

என்று மீண்டும் பாடத் தொடங்கிவிடுவார் அரிச்சந்திரன்.

அப்பாவு பிள்ளையின் அரிச்சந்திர நாடகம், அருணசலக் கவிராயரின் இராம நாடகம், சந்திரகாச நாடகம், பாரத நாடகம், டம்பாச்சாரி நாடகம் எல்லா நாடகங்களும் பாடல்கள் தாம். எனவே "நாடகத்தில் தமிழ் நடை" என்னும்போது பாடல், உரைநடை ஆகிய இரு பகுதிகளைப் பற்றியும் சொல்லவேண்டும்.

பண்டைக்கால நாடகப் பாடல்கள் வெண்பா, கலித்துறை விருத்தம், தோடையம், திபதைகள், தருக்கள், கண்ணிகள், கொச்சகம், தாழிசை, அகவல், சிந்துகள் முதலிய பலவிதமான பாவினங்களில் எழுதப் பெற்றிருக்கின்றன.

நான் நாடகத்துறையில் ஈடுபட்ட 1918-ஆம் ஆண்டிலேகூட நாடகத்தில் முக்கால் பங்கு பாடல்கள்தாம். தமிழ் நாடகத் தலைமையாசிரியரெனப் போற்றப் பெறும் எங்கள் ஆசிரியர் **தவத்திரு சங்கரதாச சுவாமிகள்** நாடகப் பாடல்கள் எழுதுவதில் தலை சிறந்தவர். அவரது பாடல்களில் எளிமை, இனிமை, நயம், அழகு, கருத்துவளம் அனைத்தும் பொருந்தியிருக்கும். இவற்றோடு நாடக உணர்ச்சிகளுக்கு ஏற்றவாறு பாடல்களில் பாவமும் இருக்கும்.

அந்நாளில் பாடப்பெற்ற அருணசலக் கவிராயர், கோபால கிருஷ்ண பாரதியார், அப்பாவுபிள்ளை, சங்கரதாச சுவாமிகள், சிவசண்முகம்பிள்ளை முதலியோரின் நாடகப் பாடல்கள் எல்லாம் அனைவர்க்கும் பொருள் விளங்கக் கூடியனவாக அமைந்திருந்தன. வசனங்கள் இல்லையே என்பதற்காக யாரும் வருந்தவில்லை.

ஏறத்தாழ அறுபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்தான் நாடகமேடையில் உரைநடை ஓரளவு தலைகாட்டத் தொடங்கியது. அதுவும் ஆசிரியர்களால் எழுதப் பெறவில்லை. நடிகர்கள் தாமாகவே பாடல்களின் கருத்தையொட்டி இரண்டுவரி வசனமாகவும் பேசிவிடுவார்கள். நல்ல தமிழறிவும் கற்பனைத் திறமையும் வாய்ந்த சில நடிகர்கள் ஒருபடி மேலே போய்க் கதைக்குப் புறம்பாகப் போகாமல் நீண்ட வசனங்களைப் பேசத் தொடங்கினார்கள். இன்றுங்கூடப் பழைய ஸ்பெஷல்

நாடகங்களில் இந்த முறையைப் பார்க்கிறோ மல்லவா ?

பேசத் தெரியாத அப்பாவி நடிகர் எவராவது அகப்பட்டுக் கொள்வார். பேசத் தெரிந்த நடிகர் அவரைத் தாறுமாறான கேள்விகள் கேட்டுத் திக்குமுக்காடவைத்துச் சபையோரின் கைதட்டலைப் பெறுவார். பழைய நடிகர்கள் சிலரிடம் இது வழக்கமாகவே இருந்து வந்தது.

இரண்டு நடிகர்கள் திறமையாகப் பேசக் கூடியவர்களாயிருந்தால் போட்டி வந்துவிடும். நீண்ட நேரம் வாதம் நடைபெறும். நடிகர்கள் கதையை மறந்து வெகுதூரம் போய் தங்கள் சொந்த விவகாரங்களிலேயே உலாவிக் கொண்டிருப்பார்கள்.

"பூத்தொடுப்பது போல் பேசுகிறீரே!" என்று பெண்வேடதாரி பேசி நடிகர் பூத் தொடுக்கும் சாதியினர் என்பதைக் குத்திக் காட்டுவார். சபையில் கைதட்டல் கிளம்பும். ஆண்வேடதாரியும் சளைக்க மாட்டார்.

"உன் பேச்சு சன்னம் வைத்து இழைப்பதுபோல் இருக்கிறதே!" என்று கூறிப் பெண்வேடதாரி ஆசாரி வகுப்பினர் என்பதை நினைவுபடுத்துவார். உடனே இவருக்கும் சபையில் பெருத்த கைதட்டல். கடைசியாகச் சபையோரில் இந்த வீண் வாதம் பிடிக்காத சிலர் கைதட்டி நாடகக் கதையை நடிகர்களுக்கு ஞாபகப்படுத்த வேண்டிய நிலைமையும் ஏற்பட்டதுண்டு.

இப்படியெல்லாம் நடிகர்கள் கற்பனையாகப் பேசிக் கட்டுப்பாடில்லாது நின்ற காலையில், நாடகத்தைத் தொழிலாகக் கொண்டவர்களுக்கு ஒழுங்கு முறையாக வசனங்கள் எழுதிக்கொடுத்து நாடகப் பேச்சுக்கு ஒரு வரம்பு கட்டியவர் **சங்கரதாச சுவாமிகள்** ஆவார்.

சதி அனுசூயா, சுலோசனாசதி, அபிமன்யு, பிரகலாதன், சிறுத்தொண்டர், பவளக்கொடி, சீமந்தனி, லவகுசா முதலிய நாற்பதுக்கு மேற்பட்ட நாடகங்களுக்கு சுவாமிகள் பாடல்களோடு வசனங்களும் எழுதியிருக்கிறார்.

சுவாமிகளின் உரைநடை இனிமையானது—பொருள் நிறைந்தது. திருக்குறள், நாலடியார், பழங்காலப் பழமொழிகள், சங்க இலக்கியங்களிலுள்ள பேருண்மைகள் இவையெல்லாம் அவரது உரைநடையிலே நிறைந்திருக்கும். அவை பெரும்பாலும் நீண்ட வசனங்கள்.

பாடல்களே இல்லாமல் உரைநடை நாடகம் எழுதிய பெரியார் பத்மபூஷணம் **பம்மல் சம்பந்த முதலியாராவார்**. இவரது தமிழ் நடையில் அடைமொழிகள் அதிகமிரா. கதைப் போக்குக்குத் துணை செய்வதாகவே உரையாடல்கள் அமைந்திருக்கும். புரியாத சொற்றொடர் எதையும் இவர் கையாளுவதில்லை.

முதலியாரவர்களின் தமிழ் நடையில் ஒரு தனிச்சிறப்பு எழுவாயைச் சில சமயங்களில் பின்னே தள்ளுவது.

"எனக்கு ஒரு யோசனை தோன்றுகிறது" என்பதை, "யோசனை ஒன்று தோன்றுகிறது எனக்கு" என்று எழுதுவார். "அதை இப்படிக் கொடு" என்று சொல்வதில்லை. "கொடு இப்படி அதை" என்றே பேசுவார்.

"நான் சென்று அழைத்து வரவா விரைவில்?"

"நானே கொன்றிருப்பேன் அவனை" இப்படிப் பேசும்போது வார்த்தைகளில் ஒரு வேகம் ஏற்படுகிறதல்லவா ?

நாடகப் பேராசிரியருக்கு வேறு மாதிரியான அழகு நடை வராதென்று யாரோ சொன்னார்களாம். அதற்காக "இரத்தினவளி" நாடகம் ஒன்றில் மட்டும் எளிதில் புரிந்து கொள்ள இயலாத ஓர் அழகு நடையைக் கையாண்டிருக்கிறார். இரண்டொரு வரிகள் சொல்லுகிறேன்.

அரசன் பேசுகிறான்.—

"அமைச்சரே, கண்டீரோ இன்று நமது கௌசாம்பி நகர் கண்ணெட்டியதூரம் வரையில் கடிமணம் புனைந்ததுபோல் கவின் பொலிந்து நிற்கின்றது. நோக்குதிர் ஒருபால்; அந்தணர் அாற்றும் அருமறை ஒலியும், செந்தமிழ் வாணர் சிறப்புறு பொலிவும், வாதினில் வல்லார் வழக்குறு வியப்பும், பாதகம் அகலப் பழமை சொல் பண்பும், திரைகடல் ஒலியெனத் திரண்டெழுகின்றது"......

அமைச்சர் விடையளிக்கிறார்:—

" அரசே, எப்பொருளை நோக்கினும் ஒப்பரியதாயிருக்கச் செப்புதலென்னே இப் பெரும் பதியில்"......

பேராசிரியரவர்களின் இந்த அழகுநடை எதுகை மோனையோடு வரும் இன்றைய அடுக்கு நடையை நினைப்பூட்டுகிறதல்லவா ?

தமிழ்ப் பேரறிஞர் பவானந்தம் பிள்ளை அவர்கள் அரிச்சந்திரன், பாதுகாபட்டாபி ஷேகம் முதலிய சில உரைநடை நாடகங்களை எழுதியிருக்கிறார். அவரும் சில இடங்களில் அடுக்கு நடை போடுகிறார் பாருங்கள் !......

கைகேயியிடம் பரதன் பேசுகிறான்:—

" தாயெனும் உருக்கொண்ட பேயே! தந்தையிறக்கத் தமையன் அரசைத் துறக்கத் தம்பி பரதன் முடி பொறுக்கவோ நீ சூழ்ச்சி செய்தாய் ?.........

அடி பாவி! நியாயப்படி ராமனுக்கல்லவோ பட்டம்? அதுதான் எனக்கிஷ்டம். அப்படிச் செய்வதே சரியான திட்டம். அதுவே சூரிய குலத்துச் சட்டம். இதனால் உனக்கென்னடி நஷ்டம் ? இன்னும் கொஞ்ச காலத்தில் உன்னைப் பற்றுமடி குஷ்டம். ஒருக்காலும் ராமனுக்கு நேராதடி கஷ்டம். முடிவில் நானன்றோ அடைந்தேன் துரதிர்ஷ்டம். ஏனடி உனக்கிந்தப் பதஷ்டம்? எனக்கேற் குமா ரவிகுலத்துப் பட்டம்? அப்படிக் கட்டப் படுவதானால் அது பட்டமல்ல ; நீ செய்த இந்த அக்கிரமத்தைப் பாரறியப் பறையடிக் கும் தம்பட்டமடி."

இவ்வாறு மற்றுஞ் சில நாடகாசிரியர்கள் இந்த அடுக்கு நடையைக் கையாண்டிருக் கிறார்கள்.

பதிபக்தி, பம்பாய் மெயில், கதர்பக்தி, பஞ்சாப்கேசரி முதலிய நாடகங்களை எழுதிய சதாவதானம் கிருஷ்ணசாமிப் பாவலர் அவர்களின் உரைநடை பம்மல் சம்பந்த முதலியாரவர்களைப் பின்பற்றியதாகவே அமைந்திருக்கிறது.

இராஜாம்பாள், இராஜேந்திரா, சந்திர காந்தா, மோகன சுந்தரம், ஆனந்த கிருஷ் ணன், மேனகா முதலிய நாவல்களை நாடக மாக்கிய மறுமலர்ச்சிப் பெருந்தகை கந்தசாமி முதலியாரவர்களின் தமிழ் நடை பெரும்பா லும் நாவலாசிரியர்களின் நடையைப் பின் பற்றியே இருக்கிறது.

மற்றும் சில அமைச்சூர் குழுக்களி லிருந்து தோன்றிய நாடகாசிரியர்கள் பெரும் பாலும் நாடகப் பேராசிரியரின் நடையை ஒட்டியே சென்றிருக்கிறார்கள் என்று சொல்ல வேண்டும்.

'பாணபுரத்து வீரன்' ஒரு சிறந்த தேசிய நாடகம். இதனை எழுதியவர் பழம்பெரும் எழுத்தாளர் வெ. சாமிநாத சர்மா அவர்கள். அவரது நடை உணர்ச்சியும் எழுச்சியுமூட்டும் ஒரு நல்ல தமிழ் நடை. இந்நாடகத்தை நாங்கள் 'தேசபக்தி' என்னும் பேரால் முன்னூற்றுக்கும் மேற்பட்ட தடவைகள் நடித்திருக்கிறோம். பாணபுரத்து வீரன் ஆங்கில சர்க்காரால் தடைசெய்யப்பட்ட நாடகம் என்பது குறிப்பிடத்தக்கது. சர்மா அவர்கள் 'அபிமன்யு' என்னும் மற்றொரு நாடகத்தையும் எழுதியிருக்கிறார். இதுவும் அழகிய தமிழ்நடையில் அமைந்துள்ளது.

இடைக் காலத்தில் சிறப்பாச நடை பெற்றுவந்த ஸ்ரீ கிருஷ்ணலீலா, கந்தலீலா, தசாவதாரம் முதலிய நாடகங்கள் எல்லாம் காட்சி அமைப்புக்களைப் பிரதானமாகக் கொண்டவை. அவற்றில் வசனங்கள் குறைவு. அந்த வசனங்களிலும் சுவையில்லை.

நானறிந்த வரையில் 'குமாஸ்தாவின் பெண்' என்னும் சமுதாய நாடகத்திலேதான் முதன்முதலாகப் பேச்சுவழக்கிலுள்ள நடை கையாளப்பட்டது. இந்நாடகம் என் இளைய அண்ணா டி. கே. முத்துசாமி அவர்களால் எழுதப் பெற்றது. ராஜா பர்த்ருஹரி, வித்தியா சாகரர், கவி காளமேகம், ஆகிய நாடகங்களையும் இவர் எழுதியிருக்கிறார். இவரைத் தொடர்ந்து பலரும் நாடகத்தில் பேச்சுத் தமிழைப் புகுத்தத் தொடங்கினார் கள்.

தூய்மையான தரமுயர்ந்த தமிழ் நடை யில் எழுதப்பட்ட முதல் நாடகம் 'ஔவை யார்.' இதனை எழுதியவர் உயர்நிலைப் பள்ளி ஆசிரியராகப் பணிபுரிந்த பி. எத்திராஜுலு அவர்கள்.

கு. சா. கிருஷ்ணமூர்த்தி அவர்களின் 'அந்தமான் கைதி' ஒரு சிறந்த சீர்திருத்த நாடகம். இந்நாடகம் தமிழகத்தில் ஆயிரம் முறைக்குமேல் நடிக்கப் பெற்றிருக்கிறது.

பெரும்பாலும் பேச்சுத் தமிழிலேயே எழுதப்பட்ட நாடகம் இது. இந்நாடகம் தமிழ் வளர்ச்சிக் கழகத்தாரின் பரிசையும் பெற்றுள்ளதைக் குறிப்பிடவேண்டும்.

ப. நீலகண்டன் அவர்களின் 'முள்ளில் ரோஜா,' 'நாம் இருவர்' ஆகிய நாடகங்களிலே கையாளப்பட்டுள்ள நடை இயற்கையழகோடு இலக்கியச் சுவையுமுள்ள அழகிய தமிழ்நடை.

நாரண துரைக்கண்ணன் அவர்களின் தமிழ்நடையில் தமிழ்த் தென்றல் திரு. வி. க. அவர்களின் சாயலைக் காணமுடிகிறது. அவருடைய 'உயிரோவியம்' ஒரு சிறந்த தமிழ் நாடகம்.

எஸ். டி. சுந்தரம் அவர்களின் 'கவியின் கனவு' ஒரு நல்ல தேசிய நாடகம். இலக்கியச் சுவை மிகுந்த உரைநடை இதிலே கையாளப்பட்டுள்ளது.

விதி, தோழன், ஜீவன், வீரபாண்டிய கட்டபொம்மன் முதலிய நாடகங்கள் **சக்தி கிருஷ்ணசாமி** அவர்களால் எழுதப் பெற்றவை. இவரது தமிழ்நடை சக்தியும் சுவையுமுள்ளது. 'ஷாஜஹான்' இவருடைய சிறந்த இலக்கிய நாடகம். சிவாஜி கணேசன் அவர்கள் ஷாஜஹானாக வேடம் பூண்டு இந் நாடகத்தின் வசனங்களைப் பேசி நடித்தபோது நான் பலமுறை பார்த்து ரசித்திருக்கிறேன்.

ரா. வேங்கடாசலம் அவர்கள் தமிழகத்தின் சிறந்த நாடகாசிரியரெனக் கருதப்படுபவர்களிலே ஒருவர். இவருடைய நாடகங்களிலே இமயத்தில் நாம், முதல் முழக்கம், மனைவி, ஆகிய நாடகங்களை நாங்கள் நடத்தியிருக்கிறோம். வீரச்சுவையும் காதல் சுவையும் இவரது தமிழ் நடையிலே சிறப்பான அம்சங்கள். இவர் தமிழன் பெருமை, பெண் கற்பு முதலிய மற்றும் சில நாடகங்களையும் எழுதி மேடையேற்றியிருக்கிறார்.

அறிஞர் அண்ணாத்துரை அவர்களின் நாடகத் தமிழ் நடை மிகச் சிறந்தது; வன்மை வாய்ந்தது. கருத்து, இலக்கிய நயம், உணர்ச்சி வேகம் இவற்றோடு அடுக்குச் சொல்லழகும் கலந்த நடை. ஓர் இரவு, வேலைக்காரி, நீதிதேவன் மயக்கம், சந்திரமோகன் ஆகிய நாடகங்களிலே இவரது நடையழகைக் காணலாம்.

இவரைப் பின்பற்றிப் பல நாடக எழுத்தாளர்கள் தோன்றியிருக்கிறார்கள். மந்திரிகுமாரி, மணிமகுடம் முதலிய நாடகங்களை எழுதிய **மு. கருணாநிதி** அவர்கள் ஒரு சிறந்த நாடக எழுத்தாளர். இவருடைய உரைநடையிலே இனிமையும், வன்மையும், எழிலும் நிறைந்து விளங்குகின்றன.

அகிலன் அவர்களின் அழகிய தமிழ் நடையை நீங்கள் நன்கறிவீர்கள். புயல், வாழ்வில் இன்பம் ஆகியவை அவருடைய இரு சிறந்த தமிழ் நாடகங்கள்.

கோமதியின் காதலன், மைதிலி, துப்பறியும் சாம்பு, முதலிய சில நகைச் சுவை நாடகங்களை **தேவன்** அவர்கள் எழுதியிருக்கிறார். இவருடைய நாடகங்கள் அனைத்தும் பேசுந்தமிழிலேயே எழுதப்பெற்றுள்ளன.

நாடக உலகில் மகத்தான வெற்றிபெற்ற **அரு. இராமனாதன்** அவர்களின் 'இராஜராஜ சோழன்' சிறந்த உரையாடல்களைக் கொண்ட நாடகம் என்பதைத் தமிழுலகம் அறியும்.

சிறந்த எழுத்தாளரான **பி. எஸ். இராமையா** அவர்கள் தொடர்ந்து நாடகம் எழுதிவருவது பாராட்டிற்குரியது. பிரசிடெண்ட் பஞ்சாட்சரம், மல்லியம் மங்களம், தேரோட்டி மகன், போலீஸ்காரன் மகள், ஆகியவை இவரது நாடகங்கள். இந்நாடகங்களிலே தேரோட்டி மகன் இலக்கிய நடையிலும், மற்றவை பேச்சுத் தமிழிலும் எழுதப் பெற்றுள்ளன.

இன்னும் எங்களால் நடிக்கப்பெற்றுள்ள பில்ஹணன், மனிதன், இன்ஸ்பெக்டர், கள்வனின் காதலி, இரத்த பாசம், எது வாழ்வு, தமிழ்ச் செல்வம், தேசபக்தர் சிதம்பரனார், சித்தர் மகள் ஆகிய நாடகங்களில் தமிழ் நடையின் மறுமலர்ச்சியைப் பல கோணங்களில் காணலாம். இந்நாடகங்களின் மூலம் **ஏ. எஸ். ஏ. சாமி, ஆதிமூலன், நா. சோமசுந்தரன், கல்கி ரா. கிருஷ்ணமூர்த்தி, ஸ்ரீதர், டி. கே. கோவிந்தன், அறிஞர் கி. ஆ. பெ. விசுவநாதம், சித்தராசன், நா. பாண்டுரங்கன்** ஆகிய பல நாடக எழுத்தாளர்கள் தமிழுலகுக்கு அறிமுகமாகியிருக்கிறார்கள்.

நான் மேலே குறிப்பிட்டுள்ள நாடகங்களையெல்லாம் நூல் வடிவில் மட்டும் படிப்பவர்கள் அவற்றின் சிறப்பைப் புரிந்துகொள்ள

இயலாது. நடிப்புணர்ச்சி மிகுந்த தமிழ் நடை அவற்றில் கையாளப் பெற்றிருப்பதால், அரங்கிலே பார்க்கும்போதுதான் அந்நாடகங்களின் முழுச் சிறப்பும் விளங்கும்.

நான் குறிப்பிடத் தவறிய மற்றும் பல நாடகங்கள் உள்ளன. அவற்றிலே இயற்கை நடை, இலக்கியநடை, அழகுநடை, அடுக்கு நடை, கவிதை நடை, கற்பனை நடை, பேச்சு நடை, ஏச்சு நடை எனப் பலவாருகத் தமிழ் உரைநடை நாடகமேடையில் வளர்ந்துவந்திருக்கிறது.

மேடையில் நடிக்கப்பட்ட இந்த நாடகங்களைத் தவிர நூல் வடிவிலும் எத்தனையோ நாடகங்கள் இருக்கின்றன. பெரும்பாலும் ஆசிரியப்பாவினுல் எழுதப்பெற்ற **பேராசிரியர் சுந்தரம் பிள்ளை** அவர்களின் 'மனேன்மணீயம்' அரங்கேருவிட்டாலும், ஓர் அழியாத அற்புதத் தமிழ் நாடகம். மானவிஜயம், ரூபாவதி, கலாவதி, இராசேந்திர சோழன், சோழ மாதேவி முதலிய நாடகங்கள் தமிழுக்குப் பெருமைதரும் நாடகங்கள். இவற்றிலே ஆசிரியர்கள் கையாண்டுள்ள தமிழ் உரைநடை மேடைக்கு இப்போது பயன்படாவிட்டாலும், மொழி வளர்ச்சிக்குத் துணை செய்யும் என்பதில் ஐயமில்லை.

பண்டித நடையில் பல மொழிபெயர்ப்பு நாடகங்கள் வந்துள்ளன. இவற்றில் தலை சிறந்தது **மறைமலை அடிகளாரின்** சாகுந்தலம்.

சுவாமி சுத்தானந்தர் அவர்கள் பல நாடகங்களை வெளியிட்டுள்ளார். இவருடைய நாடகங்களிலே அன்பும் கருணையும் நிரம்பிய தமிழ் நடை மிளிர்கின்றது.

பெரியசாமித் தூரன், சு. குருசாமி, சி. ஆர். மயிலேறு, கோமதி சுவாமிநாதன், சிதம்பர சுப்பிரமணியன், வி. சி. கோபாலரத்தினம் முதலிய பல எழுத்தாளர்கள் ஓரங்க நாடகங்களை ஏராளமாக எழுதியிருக்கிருர்கள். இவற்றில் சில நாடகங்கள் மேடையில் நடிக்கப் பெற்றுள்ளன. மற்ற நாடகங்களும் நடிக்கத்தக்கவையே. ஆனல், ஓரங்க நாடகங்களைப் பார்க்கும் ரசிகர்கள் குறைவாயிருப்பதால், அந்நாடகங்களுக்கு இன்னும் வாய்ப்பு ஏற்படவில்லை.

ஏதோ எனக்குத் தெரிந்தவரையில் பல நாடகங்களைப் பற்றிக் குறிப்பிட்டேன். அவற்றிலுள்ள தமிழ் நடையின் தரத்தை எடுத்துக் காட்டி விரித்துச் சொல்ல இச்சிறிய கட்டுரை இடம் தராது.

இனி, நான் பெற்ற பல்லாண்டு அனுபவங்களிலிருந்து நாடகத் தமிழ் நடையைப் பற்றி நான் கொண்டுள்ள சில கருத்துக்களையும் சொல்லிவிடுகிறேன்.

நாடகம் பல உறுப்புக்களைக் கொண்டது. கதை, பாத்திரப் படைப்பு, காட்சித் தொகுப்பு, காட்சிச் சோடனை, வேடப்பொருத்தம், நடிப்பு, பாடல்...... இவ்வாறு பல உறுப்புக்களைக் கொண்ட நாடகத்தில் வசனமும் ஒரு பகுதி. கதை, பாத்திரப் படைப்பு, காட்சித் தொகுப்பு இவற்றிற்கு அடுத்தபடியாக வசனம் இடம்பெறுகிறது. இதை நினைவில் கொண்டு உரையாடல்கள் எழுதவேண்டும்.

இரண்டாவதாக, நாடகம் காட்சிநூல்; பார்த்து ரசிக்கவேண்டிய கலை. எனவே உரையாடல்கள் நடிப்புணர்ச்சிக்குத் தக்கபடியே எழுதப்பெற வேண்டும்.

மூன்ருவதாக, நாடகாசிரியர்கள் தங்கள் கருத்துக்களை வெளியிடும் வேகத்தில் பாத்திரத்தின் இயல்புகளை மறந்துவிடக்கூடாது. பாத்திரங்களின் குணப்பண்புகள் வசனங்களால் சிதைவுருமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

சமுதாய நாடகங்களுக்கு உரையாடல்கள் எழுதும்போது சொல்லழகு, இலக்கிய நயம் இவற்றைவிடக் கருத்துக்கும் உணர்ச்சிக்குமே அதிக மதிப்புக் கொடுக்க வேண்டும். இது எனது தாழ்மையான எண்ணம்.

சமுதாய நாடகங்களில் எல்லாப் பாத்திரங்களும் கொச்சையாகப் பேசுந்தமிழிலேயே உரையாடவேண்டுமெனச் சிலர் நினைக்கிருர்கள். அது சரியென எனக்குத் தோன்றவில்லை. உணர்ச்சியான கட்டங்களில் எளிமையான ஒரு நடையைக் கையாளுவதே நல்லது. வசனங்கள் மக்களுக்குப் புரியவேண்டும். அதனுல் இலக்கியமும் வளரவேண்டும். மொழியும் வளம்பெற வேண்டும்.

நாட்டுப் பாடல்களிலே இலக்கியச் செறிவு இருப்பதைப் போலக் கொச்சைத் தமிழ் நடையிலும் இலக்கிய நயத்தைக் கொண்டுவரலாம். அது எழுதுபவரின் திறமையைப் பொறுத்தது.

குறிப்பிட்ட சில மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் பேசுவதைப் போலச் சிலர்

எழுத முயல்கிறார்கள். ஓரங்க நாடகங்களில் இந்த நடையைக் கொண்டுவருவது நல்லது. ஆனால், மூன்றுமணி நேர நாடகங்களில் இவ்வாறு பேசுவது சுவையாயிராது. ஒருசில துணைப் பாத்திரங்கள் இவ்வாறு நாட்டுத் தமிழிலே பேசலாம். அது நன்றாகவும் இருக்கும். கதாநாயகனும் கதாநாயகியும் சென்னைத் தமிழிலும், பாண்டித் தமிழிலும், கொங்குத் தமிழிலும், நாஞ்சில் தமிழிலும் நாடகம் முழுதும பேசிக கொண்டிருப்பது நாடக உணர்ச்சிகளைக் கெடுத்துவிடுவதோடு நகைப்பையும் உண்டாக்கும். இதனை எழுதுவோர் நன்கு சிந்திக்க வேண்டும். புரியும்படியான பேச்சுத் தமிழையே கையாள வேண்டும்.

சரித்திர - புராண - இதிகாச நாடகங்களுக்கு எழுதப்படும் உரையாடல்களில் நிச்சயமாக இலக்கிய நயம் இருக்கவேண்டும்; இல்லையேல நாடகம் சிறப்பாக அமையாது.

அடுக்குத் தொடரோடு வரும் அழகு நடையைச் சிலர் கேலி செய்கிறார்கள். அவர்கள் அறியாதவர்கள். பாத்திரத்தின் தன்மையை உணர்ந்து வரலாற்று நாடகங்களிலே இந்த நடையைப் பயன்படுத்தினால் நாடகச் சுவை அதிகரிக்கும் என்பது என் கருத்து.

அதற்காக, ஆணுக்கு ஆணாகவும் காணுக்கு காணாகவும் தேடிப்போட்டு எழுத முயல்வதும், கஞ்சி, பஞ்சி, இஞ்சி, நெஞ்சி, தஞ்சி யென்னும் முறையில் அடுக்கிக் கொண்டே போவதும் விரும்பத்தக்கதல்ல. வெறும் வெளியழகு காட்டும் தமிழ் நடை கனகாம்பரம்-காகிதப்பூ ரகத்தைச் சேர்ந்தது; மணமிராது. கருத்தழகாகிய உள்ளழகும் இருந்தால்தான் அது மணமுள்ள மலராக இருக்கும். 'பூ' என்றால் நறுமணம் வேண்டுமல்லவா? அதைப்போல் அழகுநடையென்றால் அதிலே கருத்து இருக்கவேண்டும். வெறும் கவர்ச்சி பயன் தராது.

சமுதாய சீர்திருத்தக் கருத்துக்களை வெளியிடும்போது தமக்கு மாறுபட்ட கருத்துடையோரைத் தாக்கிப் புண்படுத்தும் விதத்தில் எழுதக்கூடாது. அதில் பயனுமிராது. மாறுபட்ட மனத்தோரையும் தமது வழிக்குத் திருப்பும் விதத்தில் மனமாற்றம் செய்வதை நோக்கமாகக் கொண்டு எழுதவேண்டும். அவ்வாறு எழுதப்படும் நாடகங்கள்தாம் எதிர்பார்க்கும் பயனைத் தரும்.

புதிர்நடை யொன்று சில எழுத்தாளர்களால் நாடகங்களில் இன்று கையாளப்படுகிறது. நாடகப் பாத்திரங்கள் எதைப் பற்றிப் பேசுகிறார்கள் என்பதே சபையோருக்கு எளிதில் புரிவதில்லை. அப்படிப் புரியவைக்காமல் திணறவடித்துப் புரியவைப்பதுதான் இந்த நடையைக் கையாள்பவர்களின் நோக்கம். இந்த நடையை எவரும் விரும்பவில்லையென்பது என் அனுபவம். புதிர் நடை நாடகமேடைக்குச் சிறிதும் ஏற்றதல்ல. நாடகத் தமிழ் நடையில் நடையழகு இருக்கலாம். அதனோடு நாடக அழகும் இருக்க வேண்டும்.

பொதுவாக நாடகத்தின் உணர்ச்சி வேகத்தைத் தடைப்படுத்தாமல் இருப்பதே நல்ல தமிழ் நடை. உணர்ச்சியை மேலும் அதிகரிக்கச் செய்யுமானால் அதை அற்புதத் தமிழ் நடையென்றே சொல்லிவிடலாம்.

எமது புதிய வெளியீடுகள்

★

1.	பத்தொன்பதாம் நூற்றுண்டில் தமிழ் இலக்கியம் (மயிலை. சீனி. வேங்கடசாமி)	7 50
2.	தமிழக வரலாற்றுச் செய்திகள் (C. கோவிந்தராசன்)	3 00
3.	தமிழர் வாழ்வு (டாக்டர் மா. இராசமாணிக்கனார்)	3 00
4.	பெருந்தகைப் பெண்டிர் (ஔவை. சு. துரைசாமிப் பிள்ளை)	2 00
5.	நாலடிப் பாதை (அ. சுகுமாரன்)	0 75
6.	அறுமணிகள் ,,	0 50
7.	மாமணிகள்	0 50
8.	முள்ளும் மலரும்	0 50
9.	பாடும் பாப்பா (தணிகை உலகநாதன்)	2 00
10.	மருத்துவர் மகள் (ஜான் துரைராஜ்)	1 25

★

சாந்தி நூலகம்

2/122, பிராட்வே, சென்னை-1

ஒரு நல்ல அமைப்பு

[டாக்டர் மு. வரதராசனார்.]

புதிய புதிய இலக்கியங்களைப் படைத்துத் தரும் தொழில் எழுத்தாளர் தொழில். மற்றத் தொழில்களைக் காப்பதுபோல இந்தத் தொழிலையும் காப்பது அரசாங்கத்தின் கடமையாகும். இதை இன்னும் சில நாடுகள் உணரவில்லை. சில நாடுகள் உணர்ந்து நல்ல அமைப்புக்கள் ஏற்படுத்தியிருக்கின்றன. அந்த அமைப்புக்களின் உதவியால் எழுத்தாளர்கள் அந்த நாடுகளில் வளமாக வாழ முடிகின்றது. அத்தகைய நாடுகளுள் ரஷ்யாவும் ஒன்றாகும்.

அங்கே உள்ள எழுத்தாளர் சங்கம் மிகப் பெரிய அமைப்பாகும். நாட்டின் தலைநகரத்தில் எழுத்தாளர் சங்கத்தின் தலைமை அமைப்பு உள்ளது. மற்ற நகரங்களில் அதன் கிளை நிலையங்கள் உள்ளன.

எழுத்தாளர்களுக்குச் சங்கம் அமைந்து இருப்பது போலவே ஓவியக் கலைஞர்க்கும், இசைப்பாடல்கள் இயற்றுவோர்க்கும், மற்றக் கலைஞர்களுக்கும் அந்தந்தக் கலைஞர்களின் பெயரால் சங்கங்கள் உண்டு. எழுத்தாளர் சங்கம் போலவே அந்தச் சங்கங்களும் கலைஞர்களுக்குப் பல நன்மைகள் செய்துவருகின்றன.

ஒருவர் எழுத்தாளர் என்று போற்றப்படும் நிலைமையை அடைகின்றவரையில் துன்பமும் தொல்லையும் இருக்கலாம். அதனால் எழுதக் கற்ற இளைஞர் சிலர் எழுத்தாளர் சங்கத்தில் தங்களுக்கு இடம் கிடைக்கவில்லையே என்று ஏங்கலாம். ஒரு சிலர் பொறுமை இழந்து வெறுப்பும் கொள்ளலாம். ஆனால் எழுத்தாளர் என்ற நிலையை அடைந்துவிட்ட பிறகு-எழுத்தாளர் சங்கத்தில் இடம்பெற்றுவிட்ட பிறகு-அவர்களின் கவலை தீர்ந்துவிடுகிறது. ஆனால் அந்த நாட்டை ஆளும் அரசாங்கத்தின் போக்குக்கு மாறாகச் செல்லாமல் ஆளும் கட்சியின் கொள்கைகளுக்கு முழுதும் இயைந்து நடந்தால்தான், எழுத்தாளர் ஒருவர் அந்தச் சங்கத்தில் இடம்பெற முடியும்.

சங்கத்தில் இடம்பெற்ற எழுத்தாளர்க்கு வாழ்க்கையைப் பற்றிய கவலை தீர்ந்துபோகிறது. எதிர்காலத்தைப் பற்றி அவர் ஏங்க வேண்டியது இல்லை. குடியிருக்கும் வீடு முதலிய ஏற்பாடுகள் அரசாங்கத்தாலேயே செய்யப்படுகின்றன. அரசாங்கத்திடமிருந்து மாதச் சம்பளம் பெற முடிகிறது. அவர் எழுதிய நூலை எங்கே அச்சிடுவது என்று கவலைகொள்ளத் தேவையில்லை. நூலைச் சங்கத்திற்கு அனுப்பிவிடலாம். ஒரு குழு அதைப் படித்துப் பார்க்கிறது. குழுவினரால் ஏற்கப்பட்டால் அந்த நூலை அச்சிடும் ஏற்பாட்டைச் சங்கம் மேற்கொள்ளுகிறது. நூல் வெளியான பிறகு அந்தப் பதிப்பகத்தார் நூற்றுக்கு இவ்வளவு விழுக்காடு என்று உரிமைத் தொகையை ஒழுங்காக அனுப்பிவைக்கின்றனர். நூல் எவ்வளவுக்கு எவ்வளவு விற்பனையாகிறதோ அவ்வளவுக்கு அவ்வளவு வருவாயும் எழுத்தாளர்க்குப் பெருகுகிறது. நூலின் வாயிலாக வருவாய் மிகுந்தால், அரசாங்கம் தரும் மாதச் சம்பளம் வேண்டா என்று மறுத்துவிடலாம். நூலின் வருவாயைக் கொண்டு எழுத்தாளர், நகரத்தில் ஒரு வீடு கட்டிக்கொள்ளலாம்; அரசாங்கம் தரும் வீடு வேண்டா என்று சொல்லிவிடலாம்; கிராமப்புறத்தில் போய்த் தங்கியிருந்து எழுதுவதற்காக அங்கும் ஒரு சிறு வீடு அமைத்துக் கொள்ளலாம். அறுபது வயது ஆன பிறகு எழுத்துத் தொழில் செய்யாமல் நிறுத்திவிட்டாலும் ஓய்வுச் சம்பளம் (பென்ஷன்) பெறும் உரிமை உண்டு. ஓய்வுக் காலத்தில் மற்றத் தொழில் செய்வோர் பெறும் தொகையைவிட எழுத்தாளர் பெறும் தொகை கூடுதலாகவே இருக்கும்.

ரஷ்ய நாட்டில் பல மாநிலங்கள் உண்டு. ஒவ்வொரு மாநிலத்தின் தலைநகரிலும் ஒரு தலைமை எழுத்தாளர் சங்கம் உள்ளது. எடுத்துக்காட்டாக அர்மேனியா என்பது ஒரு மாநிலம். அதன் தலைநகரம் எரவான். அங்கே ஓர் எழுத்தாளர் சங்கம் உள்ளது. அதில் இருநூற்று எழுபது உறுப்பினர்கள் உள்ளனர். அந்த மாநிலத்து மக்கள் தொகை பதினெட்டு நூறாயிரம். எரவான் என்ற தலைநகரத்தில் எழுத்தாளர்கள் குடியிருப்பதற்காக மூன்று பெரிய கட்டடங்கள் உள்ளன. அவற்றில் இருநூற்றுக்கு மேற்பட்ட எழுத்தாளர்கள் மனைவிமக்களோடு வாழ்கின்றனர். அந்த நாட்டு மொழி அர்மேனிய மொழி ஆகும். அந்த எழுத்தாளர்கள் அர்மேனிய மொழியில் நாடகங்களும், நாவல்களும், பாட்டுக்களும் எழுதிப் பரப்புகின்றனர்.

இவ்வாறே ஒவ்வொரு மாநிலத்திலும் எழுத்தாளர் சங்கங்கள் அமைந்திருக்கின்றன. இவற்றிற்கெல்லாம் தலைமை நிலையம் மாஸ்கோவில் அமைந்துள்ளது. அந்த நிலைய அலுவலகத்தில் டால்ஸ்டாயின் உருவச்சிலையைக் காணலாம்.

எழுத்தாளர் சங்கத்தில் உறுப்பினர்களாக உள்ளவர்களுக்குப் பல நலன்கள் உண்டு. சிறப்பான மருத்துவ வசதிகளை அவர்கள் பெறுதல் இயலும். எழுத்தாளர்கள் அமைதியாக இருந்து எழுதுவதற்குப் "படைப்பு மனைகள்" எனப்படும் இல்லங்கள் சில உள்ளன. எழுத்தாளர்கள் அங்கே சென்று தங்கி நூல் இயற்றலாம். நூலுக்குத் தேவையான குறிப்புக்களைத் தேடிவருவதற்காக உரிய இடங்களுக்குச் சென்று தக்க உதவிகளைப் பெறலாம். நோயுற்ற காலத்தில் பணவுதவியும் பெறலாம். தங்கள் குழந்தைகளைக் குழந்தைப் பள்ளிகளில் சேர்த்து வளரவிடலாம். நூல்கள் வெளியிடாமல், எழுதும் முயற்சியிலே ஈடுபட்டிருக்கும் காலத்தில் நன்கொடை பெறுவதற்கும், கடன்தொகை பெறுவதற்கும் ஏற்பாடுகள் உள்ளன. குடியிருக்கும் வீட்டுப் பகுதிக்காக எழுத்தாளர்கள் வாடகை செலுத்தத் தேவை இல்லை. எழுத்தாளர் சங்கத்தின் நிதியால் கட்டப்பட்டுள்ள வீடுகள் உள்ளன. அவற்றில் வசதிகளுடன் வாழலாம். ஓய்வுச் சம்பளம் பெறுவதற்கு உரிய அறுபதாம் வயதுக்கு முன்னமே உடலில் ஏதேனும் குறை நேர்ந்து எழுத்துத் தொழில் செய்ய முடியாமற் போய்விட்டால், அவர்களுக்கு அப்போது முதற்கொண்டே ஓய்வுச் சம்பளம் கொடுக்கப்படும்.

நூறு ஆண்டுகளுக்குமுன் ஆஸ்ட்ரோவ்ஸ்கி என்னும் எழுத்தாளர் ஒருவர் இலக்கிய நிதி ஒன்று தோற்றுவித்தார். அது இன்று பெரிய அமைப்பாக வளர்ந்து ஓங்கிவிட்டது. எழுத்தாளர் ஒவ்வொருவரும் இன்று தம் வருவாயில் நூற்றில் ஆறு பங்கு அந்த நிதிக்குக் கட்டணமாகச் செலுத்துகின்றனர். பதிப்பகங்கள் எழுத்தாளர்களுக்குத் தரவேண்டிய உரிமைப் பணத்திலிருந்து அந்தத் தொகையை இலக்கிய நிதிக்குச் சேர்த்துவிடுகின்றன. அந்தத் தொகைமட்டும் அல்லாமல் ஆங்காங்கே உள்ள எழுத்தாளர் சங்கங்களும் தம் சங்க வருவாயிலிருந்து ஒரு பகுதியை அந்த நிதிக்குச் சேர்ப்பிக்கின்றன. அந்த இலக்கிய நிதியைப் பயனுள்ள வகையில் நடத்துவதற்கு அறக்காப்பாளர் குழு ஒன்று உள்ளது. எழுத்தாளர் சங்கம் அந்த அறக்காப்பாளர்களைத் தேர்ந்தெடுத்து அனுப்புகின்றது.

இந்த நிதியிலிருந்து எழுத்தாளர்கள் நன்கொடையும், கடனும், மற்ற உதவியும் பெற முடிகின்றது. எழுத்தாளர்கள் ஓய்வாக வந்து தங்கியிருந்து எழுதுவதற்காகப் "படைப்பு மனை" நடத்துவதற்கும் இந்த நிதி பயன்படுகிறது. கருங்கடற் கரையில் காக்ரா என்ற இடத்தில் உள்ள 'படைப்பு மனை' புகழ் பெற்றது. அது உடல்நலத்திற்கு ஏற்ற இடம் ஆகும். அந்த இல்லம், வந்து தங்கும் எழுத்தாளர்களுக்குப் பல நல்ல வசதிகளைச் செய்து உதவுகிறது. ஆண்டுதோறும் நூற்று ஐம்பது முதல் மூந்நூறு எழுத்தாளர்வரையில் பலர் அங்கே வந்து தங்கி நூல் எழுதுகிறார்கள். மனைவியரோடு வந்து தங்குவோரும் உண்டு. ஆனால், பொதுவாக, மக்களை அழைத்துவர விடுவதில்லை. பெரும்பாலோர் நான்கு வாரங்கள் தங்கிச் செல்கின்றனர். சிலர் நான்கு அல்லது ஐந்து மாதங்கள் தங்கி இருப்பதும் உண்டு. அந்த இல்லத்தில் நூற்றுப் பத்து அறைகள் உள்ளன. பொதுவாக எழுத்தாளர் ஒருவர்க்கு ஓர் அறை என்று கொடுக்கப்படும். எழுத்துவேலை செய்யாமல் ஓய்வாக இருந்து உடலுக்கும் உள்ளத்துக்கும் புத்துணர்ச்சி பெற்றுச் செல்வதற்காகவும் சிலர் வருவார்களாம். இத்தகைய படைப்பு இல்லங்கள் ரஷ்ய நாட்டில் பதினாறு உள்ளன.

எழுத்தாளர் சங்கத்தில் உறுப்பினராக இடம் பெறாதவர்களும் அந்த இலக்கிய நிதியில் கட்டணம் செலுத்திச் சேர்ந்து பயன் பெற முடியும். எழுத்தாளர் சங்கத்து உறுப்பினர்கள் அதற்கு ஆண்டுதோறும் கட்ட வேண்டிய கட்டணம் ஆறு ரூபிள் (முப்பது ரூபாய்). மற்றவர்கள் அதற்குச் செலுத்த வேண்டிய கட்டணம் பத்து ரூபிள் (ஐம்பது ரூபாய்). ஓய்வுச் சம்பளம் பெறுகின்றவர்கள் ஆண்டுக் கட்டணம் கட்டத் தேவை இல்லை. ஐயாயிரத்துக்கு மேற்பட்ட உறுப்பினர்கள் இலக்கிய நிதியில் சேர்ந்து பயன் பெறுகிறார்கள். ஆண்டுதோறும் அதற்கு வருகின்ற வருவாய் முப்பத்திரண்டு நூறாயிரம் ரூபிள் ஆகும். ஒரு நூற்றாண்டுக்குமுன் நாடக எழுத்தாளர் ஒருவர் அங்குத் தொடங்கிய ஒரு நல்ல அமைப்பு இவ்வாறு பயன் கூடும் முறையில் செழித்து ஓங்கியிருக்கிறது.

தமிழ் எழுத்தாளருக்கு

[பரலி. சு. நெல்லையப்பர்]

தலையிலே எழுதுகின்றான் பிரமன் என்பார்
　　தமிழிலே எழுதுகின்றோம் நாம் எல்லோரும்
மலரவனார் எழுதுகின்ற மொழிதான் ஏதோ
　　மாநிலத்தில் சிறந்த மொழி நமதே யன்றோ
அலைகடல் சூழ் உலகத்தில் ஆதியான
　　அமுத மொழி மதுரமொழி மொழிகட் கெல்லாம்
தலைமை மொழி தாய்மொழி நம் மொழியே யாகும்
　　தரணியில் நமக்கு நிகர் யாரே அம்மா! 1

தமிழ் நாட்டின் தலைநகரில் கூடுகின்றோம்
　　தமிழ் மொழியை ஓங்கிடவே செய்வோம் என்றும்
தமிழரசு நிகரின்றி நிலவச் செய்வோம்
　　தமிழர் அறம் உலகமெலாம் பரவச் செய்வோம்
அமரரென மக்களெலாம் வாழச் செய்வோம்
　　அவனியெலாம் ஒன்றாக நிலவச் செய்வோம்
சமய குல நிறப்பிரிவை ஒழியச் செய்வோம்
　　தரணியிலே புது வாழ்வு நிலவச் செய்வோம். 2

வறுமை யெனும் கொடுமைதனை ஒழியச் செய்வோம்
　　மக்களெலாம் பெருவாழ்வு வாழச் செய்வோம்
சிறுமைதனை உலகமெலாம் ஒழியச் செய்வோம்
　　செம்மை நெறி யெங்குமே வளரச் செய்வோம்
அறிவு நெறி அன்பு நெறி ஓங்கச் செய்வோம்
　　அநியாயம் என்பதெலாம் ஒழியச் செய்வோம்
மறை வகுத்த பெரியோர்கள் பாதம் போற்றி
　　வாழ்க தமிழ் வாழ்க வென வாழ்த்துவோமே. 3

சிவனாகித் திசை முகனாய்த் திருமா லாகி
　　ஜெகத்தோர்கள் போற்றுபல தேவராகி
அவனியெலாம் ஆண்டருளும் தெய்வ போற்றி
　　அனைத் துயிரும் நல்வாழ்வு வாழச் செய்வோம்
புவியெங்கும் சன்மார்க்கம் ஓங்கச் செய்வோம்
　　பொல்லாத துன்மார்க்கம் ஒழியச் செய்வோம்
நலமான புதிய யுகம் தோன்றச் செய்வோம்
　　நமது தமிழ் வாழ்கவென வாழ்த்துவோமே. 4

★